# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



திருமங்கை மன்னன்

3 - JUN 1961

மாலை 3] பிலவ, வைகாசி [மணி 9
ஜூன் 1961

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.

## பொருளடக்கம்


1. மானம் அழிதலின் மாண்பு
2. திருநாவுக்கரசு நாயனர் வரலாறு
3. நவதிருப்பதி அநுபவம்
4. திருக்கோவிலிக் கல்வெட்டுக்கள்
5. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
6. சிவஞானபோதம்
7. இரண்டு தாளச் சிற்பங்கள்
8. விராலி மலை
9. நால்வர் நான்மணி மாலை உரை
10. அறநிலையச் சட்டம்


## வேண்டுகோள்

*1960 அக்டோபர் முதல் தொடங்கிய மூன்ருவது ஆண்டுக்கான சந்தாவை இதுவரை அனுப்பாதவர்கள் உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.*

*—ஆசிரியர்.*


# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து.

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-6.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 3] பிலவ வைகாசி - ஜூன் 1961 [மணி 9


# மானம் அழிதலின் மாண்பு

புராணங்கள் பல ஆழ்ந்த உண்மைகளை விளக்கும் பொருட்டு எழுந்தன என்பது பலராலும் ஒப்பமுடிந்த தொன்று. அவற்றுள் அமைந்த சில சம்பவங்களும், வரலாறுகளும் சரித்திர சம்பந்தமான பெரியோர்களின் வாழ்க்கைகளில் நிகழ்ந்தனவாகும். உதாரணமாக, பெரிய புராணத்தை எடுத்துக்கொள்ளலாம். இதில் பேசப்படும் அடியார்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய அடியார்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அவர்கள் அருளியுள்ள பாசுரங்களில் புலப்படுவனவாகும். ஆதலால் அவர்கள் சரித்திர பூர்வமான ஆதாரம் கிடைத்துள்ள உண்மை வாழ்க்கை நடாத்தியவர்கள் என்பது பெறப்படுகிறது. மற்றும் தேவாரப் பாசுரங்களில் அவர் காலத்தில் வாழ்ந்த 16 நாயன்மார்களின் குறிப்புகள் காணப்படுகின்றன. காரைக்காலம்மையார் அருளிய திருப்பாடல்கள் இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றமையால் அவ்வம்மையாரும் இந்நிலவுலகில் வாழ்ந்திருக்க வேண்டும். ஆக, 63 நாயன்மார்களில் 25 பேர்கள் வரலாற்றுச் சம்பந்தமுடையவர்கள். ஆகையால் இவர்களெல்லாரும் சரித்திர சம்மதமான ஆதாரங்களுடன் வாழ்ந்தவர்கள் என்று ஏற்படுவதால் ஏனைய நாயன்மார்களும் அவ்விதமே வாழ்ந்து செயற்கரிய செயல்கள் செய்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய அடியவர்களின் பெருமை அளத்தற்கரியது எனச் சேக்கிழார் பெருமானே அருளியுள்ளார். அவ்வாறாயின், அத்தகையாருடைய வாழ்க்கையில் சிவநேசத்தின் சிறப்பு வெளிப்பட்டதல்லாமல், வேறு தாத்பரியச் சிறப்பும் உண்டா என வினவலாம். உண்டு என்பது கூர்ந்து நோக்குவார்க்கு விளங்காமற் போகாது.

மனிதன் எப்பற்றுகளை விட்டாலும் மானத்தின் மேலுள்ள பற்றை அறுப்பது வெகுகடினம். "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்பற்றுக பற்றுவிடற்கு" என்ற மறைமொழியின்படி பற்றுகள் யாவற்றையுமே அறவே அகற்றுதல்வேண்டும். என்றாலும், மானத்தின்மீது பொருந்தியுள்ள பற்று எளிதில் நீங்கக்கூடிய தன்மையதன்று. இதனால்தான் மாணிக்கவாசகப் பெருமானும்,

> மானம் அழிந்தோம்
> மதிமறந்தோம் மங்கைநல்லீர்
> வானந் தொழுந் தென்னன்
> வார்கழலே நினைந்தடியோம்
> ஆனந்தக் கூத்தன்
> அருள்பெறில்நாம் அவ்வணமே
> ஆனந்த மாகிநின்
> றாடாமோ தோணோக்கம்

என்று திருத்தோள் நோக்கம் 6-வது பாட்டில் அறுத்தற் கரியதாயுள்ள மானப்பற்றினைக் குறித்துள்ளார். இத்தகைய பற்றினையும் எவ்வித முயற்சி செய்தாவது

ஒழித்தல்வேண்டும் என்பதை விளக்க வந்ததே இயற்பகைநாயனாரின் சரித்திரமாகும். புத்திரப்பற்றை நீக்கும் பெருமையை விளக்கியது சிறுத்தொண்ட நாயனார் புராணம். தந்தைமேலுள்ள பாசத்தை அறுத்தலின் சிறப்பை விளக்குவது சண்டேசுரநாயனார் புராணம். ஒருவனுக்கு புத்திரன், தந்தை முதலானவரிடத்துள்ள பாசத்தையும் நீக்குவது ஓரளவுக்கு சாத்தியமாகும். ஆனால், உயர்குடிப் பிறந்து, நல்லொழுக்கத்தையும் நற்குணத்தையும் பெற்றுள்ளதோடு உயர்ந்த கற்பினையும்பெற்று, காதலுடன் இல்லறம் நடாத்திவரும் மனைவியின்மீதுள்ள பற்றினை விடுவது மனிதனுக்கு எளிதன்று. அத்தகைய பற்றையும் சிவனடியாருக்காக நொடிப் பொழுதில் விட்டவரே இயற்பகைநாயனார். இவருடைய மனைவியாரை "தம்மனை வாழ்க்கைக்கற்பு மேம்படு காதலியார்" என விவரிக்கின்றார் சேக்கிழார். கணவனது கட்டளையை நிறைவேற்ற இசைந்த இடத்தில் அவரை "திருவினும்பெரியாள்" என்று குறிக்கின்றார். எவரும் செய்தற்கரிய செய்கையைச் செய்துமுடித்த இயற்பகை நாயனார் வந்த அடியவரைத் தன் சுற்றத்தார் ஊறு செய்யாதவண்ணம் தடுப்பதற்காக வாளேந்தி அவ்வடியாரை முன்னே போகவிட்டுப் பின் செல்லுகையில் அவரை "ஆளரிஏறு போல்வார் அவரைமுன்போக்கிப்பின்னே தோளிணை துணையேயாகப் போயினார்" என்றுகூறி அவரது வீரச்செயலை விளக்கியுள்ளார் நமது தொண்டர் சீர்பரவுவார்.

இங்ஙனமே துரியோதனனுடைய அவையில் திரௌபதியைத் துச்சாதனன் மானபங்கப் படுத்தியகாலை அக்கற்பரசி மானத்தைக் காத்துக்கொள்ளும்வகையில் ஒரு கரத்தால் தன் துகிலைப் பிடித்துக் கொண்டும் பயன்படாமற் போகவே, இருகரங்களையும் உயர்த்தி 'கோவிந்தா' என்று அலறிய நிகழ்ச்சியும் மானப் பற்றினை அறுத்தெறியும் மாண்பினையே சிறப்பித்தது.

மற்றும் கோபியர்களின் துகில்களைக் கண்ணன் களவாடியதும், அவர்கள் அவற்றைப் பெறச் செய்த முயற்சிகள் வீணான பிறகு, இரு கரங்களையும் உயர்த்தி "கண்ணா" என்று அலறியவுடன் துகில்கள் கைவரப் பெற்றமையும் 'இக்கருத்தை விளக்குவான் நிகழ்ந்ததொன்றே என்பதும் தெளியலாகும்.

எனவே, மானத்தைக் காத்தல் மனிதனுக்குரிய மாண்புறு செயலே என்பதும், எனினும் இறைவன் கழல்புனைந்த வீரர் செயற்கரிய செய்வாராகையினால் அத்தகைய மானத்தின் மீதுள்ள பற்றினையும் அறவே அகற்றுதலையும் செய்வர் என்பதும் மேற்சொன்ன அடியார்களின் சரிதங்களால் தாத்பரியமாகப் பெறப்படுவதாகும். இதை உளத்திற்கொண்டு அன்னாருடைய வாழ்க்கை வரலாறுகளைக் கற்போமானால் நமது வாழ்க்கையையும் வளப்படுத்தும் துணைக்கருவிகளாக அவை அமையும்.

---

**திருவிடைமருதூர்:** *மகாலிங்கசுவாமி கோயிலில் திருக்கல்யாணத் திருவிழா 19—5—61 முதல் 28—5—61 வரை நடைபெற்றது. 19—5—61 முதல் 27—5—61 வரை சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.*

**சென்னை:** *காளிகாம்பாள் கமடேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 19—5—61 முதல் 30—5—61 வரை நடைபெற்றது.*

**பிட்சாண்டார் கோயில்:** *பிட்சாடனேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 19—5—61 முதல் 30—5—61 வரை நடைபெற்றது; திருமுறைச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.*

**திருமோகூர்:** *காளமேகப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 20—5—61 முதல் 31—5—61 வரை நடைபெற்றது.*

# திருநாவுக்கரசு நாயனார் வரலாறு

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

## தோற்றுவாய்

திருத்தொண்டர் புராணம் முழுதும் நாயன்மார் வரலாற்றையே கூறுவதாயினும், மூவர் முதலிகளாகிய ஆசிரியன்மார்களது வரலாறுகளே பெரும்பகுதியாய்ச் சிறந்தெடுத்து விரிவாகக் கூறப்படுகின்றன. ஆகையால், அம் மூவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனாரது வரலாற்றை, ஏனைய நாயன்மார் வரலாறுபோல் அல்லாமல் பகுதி பகுதியாகப் பகுத்துத்தான் உணர்தல் வேண்டும்.

## திருத்தொண்டத்தொகை

நம்பியாரூரர், ஆசிரியன்மார்களாகிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் இருவரையும் எடுத்தோதி வணக்கங் கூறுமிடத்து, ஒரு திருப்பாட்டின் இடையில் வைத்து ஓதாது, தொடக்கத்திலே வைத்து ஓதியருளினார்.

திருத்தொண்டத்தொகையில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் (ஏன்? ஒவ்வோர் எழுத்தையும் என்றுகூடச் சொல்லலாம்.) தமது பெரியபுராணத்துள் பொன்னேபோற் பொதிந்து வைக்கும் சேக்கிழார் நாயனார், திருத்தொண்டத்தொகையின் ஒவ்வொரு பாட்டின் பொருளையே ஒவ்வொரு சருக்கமாகவும், அப்பாட்டின் முதல் நினைப்பையே அச்சருக்கத்தின் பெயராகவும் அமைத்துள்ளாராதலின், திருநாவுக்கரசு நாயனாரது வரலாறு, அஃது அமைந்துள்ள சருக்கத்தின் முதல் வரலாறாகவே விளங்குகின்றது.

சண்டேசுர நாயனாரது வரலாறே இச்சருக்கத்திற்கு முன் உள்ள சருக்கத்தின் முடிவாய் உள்ளது; அச்சருக்கத்தின் பெயர், 'மும்மையால் உலகாண்ட சருக்கம்' என்பது. திருநாவுக்கரசரது வரலாறு அமைந்துள்ள இச்சருக்கத்தின் பெயர், 'திருநின்ற சருக்கம்' என்பது. இஃது இச்சருக்கத்தில் உள்ள வரலாறுகளைக் குறிக்கும் திருத்தொண்டத்தொகைப் பாடலின் முதல் நினைப்பை அவ்வாறே எடுத்து அமைத்தமையால் வந்த பெயராகும்.

திருநாவுக்கரசு நாயனார், திருத்தொண்டத்தொகையுள், தனியடியார் வரிசையில், இருபதாம் எண்ணு முறைமைக்கண் நிற்கின்றார். இவரைப்பற்றிக்கூறும் திருத்தொண்டத்தொகைப் பகுதி,

> "திருநின்ற செம்மையே
> செம்மையாக் கொண்ட
> திருநாவுக் கரையன்றன்
> னடியார்க்கு மடியேன்"

என்பது இதில் முதற்கண் நின்ற, 'திருநின்ற' என்பதே இச்சருக்கத்தின் பெயராய் அமைந்துள்ளதென்க. 'இன்பம் என்றும் நீங்காது நிலைபெற்று நிற்கும் தன்மையே செம்மையெனப்படுவது எனக்கொண்டருளிய திருநாவுக்கரசு நாயனார்க்கு அடியாராய் உள்ளவர்க்கும் யான் அடியேன்' என்பது இத்தொடரின் பொருள். 'அடியார்க்கும்' என்ற உம்மையால், 'திருநாவுக்கரசர்க்கு அடியேன் ஆதலன்றியும்' என அவருக்கு அடியராயினமை தழுவப்பட்டது. "அடியார்க்கு அடியேன்" என்று கூறியுள்ள இடங்களிலெல்லாம் திருத்தொண்டத்தொகையுள் இவ்வாறு உம்மை கொடுத்தே கூறியிருத்தலைக் காணலாம்.

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்" என்றருளிச் செய்ததனால், திருநாவுக்கரசு நாயனாரது மெய்யுணர்வின் சிறப்பை எடுத்தோதிப் புலப்படுத்துவாராயிற்று. அஃது எங்ஙனமெனின், கூறுவோம்.

பரம்பொருளை, (கடவுளை) 'செம்பொருள்' என்று கூறுவர் அறிந்தோர். அச்செம்பொருள் என்னும் தொகைச் சொல்லில், முதற்கண் உள்ள 'செம்மை' என்பதனாற் குறிக்கப்படுவது யாது? என்னும் வினா

நிகழ்தல் இயல்பு. அவ்வினுவின்வழி நிகழும் ஆராய்ச்சியில், 'திரு என்றும் நீங்காது நிலை பெற்று நிற்கும் தன்மையே செம்மை எனப் படுவது' எனக் கொண்டருளியவர் திருநாவுக் கரசர் என்பதனுல், அவரது மெய்யுணர் வையே அதனுற் குறித்தமை விளங்கும்.

'திரு' என்பதற்குப் பொருள், 'இன்பம்' என்பதே. யாவராலும் விரும்பப்படுவது இன்பம் ஒன்றேயாகையால், இன்பந்தரும் பொருள்களைத் 'திரு' என்கின்றனர் என்பது உணரக் கிடத்தலால், 'திரு' என்பதற்கு அழகு, செல்வம், மேன்மை என்னும் பொருள்கள் யாவும் 'இன்பம்' என்னும் ஒன்றனையே சார்ந்து தோன்றுவனவாதல் விளங்கும். அனைத்துயிர்களும் விரும்புவது இன்பத்தையே. அவ்வின்பத்தின் பொருட்டு ஒவ்வொரு பொருளைப் பற்றுகின்றன. ஆனுல், அப்பொருள் சிறிதுபொழுதே இன் பத்தைத் தருவதாய் இருந்து, பின்பு துன்பத் தைத் தருவதாக மாறிவிடுகிறது. அவ்வாறு மாறிவிட்ட பின்பு உயிர்கள் தாம் பற்றிய பொருளைத் துறக்கவும், மற்ருெரு பொருளைச் சாரவும் நினைக்கின்றன. அதனுல், மீளவும் மற்ருெரு பொருளை நாடிப் பிரிந்து செல்ல வேண்டாது, அதனேடே நின்று இன்புற் றிருக்குமாறு உயிர்கள் முடிவாக அடையத் தக்க பொருள் ஒன்று இருக்கின்றது என் ருல், அந்தப்பொருள் எத்தன்மையுடைய தாய் இருத்தல் வேண்டும்? துன்பந்தருவதாய் மாருமல், என்றும் இன்பத்தையே தருவதாய் இருத்தல் வேண்டும். 'அத்தகைய பொருள் கடவுளே' என அறுதியிட்டுக் கூறி, அதனைச் 'செம்பொருள்' என அறிவுடை யோர் கூறுவராயின், அச் 'செம்பொருள்' என்பதில் உள்ள செம்மையாவது யாதாய் இருக்கும்? 'இன்பம் நிலைபெயராது நிலைத்து நிற்றல்' என்னும் தன்மையாகத்தான் இருக் கும். ஆகவே, 'கடவுட் பொருளிடத்து உள்ளதாகச் சொல்லப்படும் செம்மை திரு நிற்றலாகிய செம்மைதான்' என்று கொண் டருளினுர் திருநாவுக்கரசு நாயனுர் **என்க**.

இனி, மேலே காட்டிய அத் திருத் தொண்டத் தொகைப்பகுதியில் உள்ள, 'கொண்ட' என்பது, கொள்கையளவில் கொள்ளுதலாகிய அபரஞானத்தைக் குறித்த தன்று, அந்நிலையிலே நின்று அவ்வின்பத்தை நுகர்ந்து, 'இன்பமே எந்நாளும், துன்ப மில்லை' எனக் களிப்புற்றிருந்த அவரது பரஞானத்தையே குறித்ததாகும். ஆகவே. மேற்காட்டிய திருத்தொண்டத்தொகைப் பகுதி, திருநாவுக்கரசுநாயனுரது வாழ்க்கை வரலாற்றினை வடித்தெடுத்துக் காட்டிய தொடராதலை யறியலாம்.

இனி, அத்தொடர் நம்பியாரூரர் தாமாக ஆக்கிய தொடர் அன்று; திருநாவுக்கரசு நாயனுரே தமது திருப்பதிகம் ஒன்றில் அருளிச்செய்த தொடர் என்று உணரும் போது, நம்மை நாம் மறந்து நாயன்மார்களது அளத்தற்கரிய திருவருட் பெருமையில் ஆழும் நிலை உண்டாகின்றது. அத்திருப் பதிகம், நான்காந்திருமுறையில் உள்ள, 'சிவனெனு மோசை' என்னுந் திருப்பதிகம். அதில் முதற்றிருப்பாடலில், முதலடியிற் ருனே இத்தொடர் அமைந்துள்ளது; அது.

''சிவனெனு மோசை யல்ல தறையோ உலகில்
திருநின்ற செம்மை யுளதே''

என்பது. இதனை நோக்கும் பொழுதுதான், திருத்தொண்டத்தொகை, திருநாவுக்கரசரது அபரஞானமாகிய கொள்கையைக் குறிக்க வில்லை; பரஞானமாகிய அநுபவத்தையே குறித்தது என்பது விளங்குகின்றது. எவ்வா றெனில்,

'திருநின்ற செம்மை' என்னுந் தொட ரைத் திருநாவுக்கரசர் எவ்விடத்து அருளிச் செய்கின்ருர்? ''சிவன் எனும் ஓசையல்லது அறையோ'' என வினுவுமிடத்து அருளிச் செய்கின்ருர். 'ஓசை, அறை' என்பன 'சொல்' என்னும் பொருளையுடையன. எனவே, 'சிவன் என்னும் சொல்லைத்தவிர, மற்றைய சொற்கள் சொற்களாகுமோ?' என்பது அத்தொடரின் பொருளாயிற்று. பொருளைப்பற்றியே சொல்லுக்குச் சிறப்பு, சிறப்பின்மை முதலியன உண்டாகுமாத லால், 'சிவன்' என்னும் சொல்லைத்தவிர மற் றைய சொற்கள் சொற்களோ? என்ருல், 'சிவனைத் தவிர மற்றைய பொருள்கள் பொருள்களோ' என்பதுதான் பொருளாகின் றது. ஆகவே, சிவம் ஒன்றையன்றிப் பிறி தொரு பொருளும் திருநாவுக்கரசர் முன் பொருளாய்த்தோன்றவில்லை என்பது பெறப் படுதலால், அவரது பரமுத்தியனுபவம் இனிது விளங்குகின்றதன்ருே! சிவத்தையன்

றிப் பிறிதொரு பொருளும் பொருளாய்த் தோன்றுதொழிந்த இவரது சிறந்த சிவானுபூதிநிலையை நம்மனோர்க்கு விளக்குதற் பொருட்டே இறைவன் இவர் திருவடி கூடும் நிலையில் இவர்முன் செம்பொன்னும் நவமணியும் தோற்றுமாறும் அரம்பையர்கள் வந்து ஆடல் பாடல்களைச் செய்யுமாறும் செய்தான் என்க.

பிற பொருளைச் சிறிதும் நோக்காது, சிவம் ஒன்றையே நோக்கி அதனில் அழுந்துங்கால் உண்டாகும் எல்லையற்ற பேரின்ப நிலையைத் தலைப்பட்டு நுகர்ந்த இந்நாயனார், அவ்வின்பத்தினைப் பிறரும் பெற்று மகிழ்தல் வேண்டும் என்னும் பெருங்கருணையினாலே, "சிவனெனும் ஓசையல்லது அறையோ" என நம்மனோரை வலிந்தழைத்து வினவுகின்றார். இங்ஙனம் வலிந்தழைத்து வினவுதலாலே, இத்திருப்பதிகத்தை, 'பன்முறையும் நேர்பட நின்று அறைகூவும் திருப்பதிகம்" என்கின்றார் சேக்கிழார். இத்திருப்பதிகம் சிவபிரானது முதன்மையைப் பலபட வகுத்துரைக்கின்றது. அவை யாவும் அவற்றுள் ஒன்றற்கேனும் செவிகொடாது, உலகப் பொருள்களையே நோக்கி உழன்றுகொண்டிருக்கின்ற நம்மனோரது செவிகளில் வலியப் புகுத்தும் முறையிலேயே உள்ளன; அதனால், "பன்முறையும்" என்றருளினார் சேக்கிழார். அங்ஙனம் புகுத்தியும் கேளாது செல்கின்ற நம்மனோரது நிலையைக் குறித்து, "தோளாத சுரையோ தொழும்பர் செவி" என்றும், "பொறியிலீர் மனம் என்கொல் புகாததே" என்றும் இரங்கிக் கூறினார் இந்நாயனாரெனின், இவரது பெருங்கருணைத் திறத்தை நாம் என்னென்பது! எனவே, இவரது அனுபவத்தின் பயனாய் வெளிப்பட்ட திருப்பதிகங்கள் எல்லாவற்றுள்ளும் இது தனி முதன்மை பெற்ற திருப்பதிகமாய் இருத்தலையும், இதனுள்ளும், "திருநின்ற செம்மையுளதே" என்னும் தொடர் அவரது அநுபவமே வடிவாய் விளங்குதலையும் உணரலாம். ஆகவே, ஆளுடைய நம்பிகள் இத்திருப்பதிகத்தை மேற்கொண்டு, இதனுள் இத்தொடரை இந்நாயனாரது வாழ்க்கையின் பிழிவாக எடுத்து உணர்த்தியருளிய பெருமையை நாம் என்னென்றுரைப்பது!

'சிவனைத் தவிர வேறு பொருளும் பொருளோ' என வினவும் நாயனார், பிற பொருள்கள் பொருளாகாமைக்குக் காரணத்தைவிளக்குதற்பொருட்டே' திருநின்ற செம்மையுளதே' என வினவுகின்றார். 'சிவனைத் தவிர நிலைத்த இன்பத்தைத் தருகின்ற பொருள் வேறொன்று இருக்கின்றதோ? இருந்தாற் சொல்லுங்கள்' என்பதே அதன் பொருள் என்பது மேலே சொல்லப்பட்டது. இவ்வாறு வினாவும் அவரது அறைகூவலுக்கு எதிராக, சிவனைத் தவிர இன்னபொருள் நிலைத்த இன்பத்தைத் தருவது என்று ஒரு பொருளை யாரேனும் கூறுதல் இயலுமோ? இயலாது. ஏனெனில், நிலைத்த இன்பத்தைத் தருவதற்கு அந்தப் பொருள் நிலைத்திருத்தல் வேண்டும். சிவனைத் தவிரப் பிறர் எல்லாரும் பிறந்திறந்தும், இடையில் சிலநாள் வாழ்கின்றபோது பலவகை அல்லல்களுக்கு உள்ளாகியும் உழல்பவரேயாதலாலும், பிற பொருளுக்கும் அவ்வாறே பலவகை நிலைமாற்றங்களை உடையனவே யாகையாலும், 'இவர் நிலைத்திருப்பவர்; இது நிலைத்திருப்பது' என்று ஒருவரையோ ஒரு பொருளையோ காட்டுதல் இயலாது. எனவே, "பெரியார் பிறப்பறுப்பான்; என்றும் தன் பிறப்பை அரியான் (இல்லாதவன்)" என்று புகழப்படும் பெருமைக்கு உரியவன் சிவன் ஒருவனேயாதலின், 'அவன் ஒருவன்றான் நிலைத்த இன்பத்தைத் தருபவன்' என்று முடிக்க வேண்டி வருகின்றது.

இவ்வாறு, 'நிலைத்த இன்பத்தைத்தரும் பொருள் வேறொன்று உண்டோ?' என்று வினவாமல், 'நிலைத்து நிற்கின்ற பொருள் வேறொன்று உண்டோ?' என்றும் வினவியிருக்கலாம்; அவ்வாறு வினவின், 'நிலைத்து நில்லாது மாறிக்கொண்டே போவதனால் குறை என்னை?' என்று ஒரு வினா நிகழ்ந்து, அதனை விடுத்தலில் இடர்ப்பாடுகள் உளவாகும்; அதனால், நிலைத்து நிற்றலின் பயனாகிய நிலைத்த இன்பத்தையே எடுத்தோதி வினவினார். அன்றியும், 'யாதொரு பயனும் இன்றிப் பாடாணம்போற் (கல்போன்று) கிடத்தலே செம்மை' என்றும், 'யாதொன்றையும் அறியாது அறிவு மாத்திரமாய் இருப்பது செம்மை' என்றும் பிறவாறும் கூறுவாராதலின், அவைகளிலும் உயிர்களால் விரும்பப்படுகின்ற இன்பமாகிய பொருள் இல்லை என்பது போதர, 'நிலைத்து நிற்கின்ற செம்மையுளதே' என்று வினவாமல், "திருநின்ற

செம்மை யுளதே" என்று வினவினர். ஆகவே, 'செம்பொருள்' என்பதற்கு, 'திரிபின்றி எஞ்ஞான்றும் ஒரு படித்தாய் நிற்கும் பொருள்' என்றுரைத்தற்கு, 'எஞ்ஞான்றும் இன்பவடிவினதாய் நிற்கும் பொருள்' என்பதே கருத்தாயிற்று. இந்நிலை சமண்சமயம் முதலியவற்றில் இல்லாமையால் அவைகளை விடுத்து, சைவ சமயத்திலேயே அஃது இருத்தலால் அதனை அடைந்து, அவ்வின்பத்தை அடைந்தவர் இந்நாயனுராதலாலும், அஃது அவரது திருமொழியிற்றுனே இனிது விளங்கிக்கிடத்தலாலும், அதனை எடுத்து ஓதி வணக்கங்கூறினர் ஆளுடைய நம்பிகள் என்க. இத்தகைய அரும்பெரு நிலையினை யுடையவர் இந்நாயனுராதலின் இவரது வரலாறு யாராலும் சொல்லுதற்கரிய பெருமையினை யுடையதாகும். இதனைச் சொல்லியே சேக்கிழார் இவரது வரலாற்றைத் தொடங்குகின்ருர். அத்திருப்பாட்டு,

> 'திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
> வருஞானத் தவமுனிவர், வாகீசர், வாய்மைதிகழ்
> பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன், பேருலகில்
> ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை யுணராதேன்''

என்பது.

'திரு' என்ற நல்ல சொல் இவ்வரலாற்றின் தொடக்கத்திற்கு இயல்பாகவே சேக்கிழாருக்கு அமைகின்றது. சுந்தரருக்கும் இந்நாயனுரைக் கூறும் பாட்டில் அவ்வாறே அமைந்தமையை நாம் இங்கு நினைவு கூரலாம். 'திருநாவுக்கரசு' என்பது இறைவன் கொடுத்த பெயராதலாலும், அது அஃறிணை வாய்பாட்டில் அமைந்து, காதற் சொல்லாய் நிற்றலாலும், அதனை அங்ஙனமே பன்மையொருமை மயக்கமாக வைத்துப் போற்றியருளினர். இறைவனல் இப்பெயரைப் பெற்ற இந்நாயனுர் வடமொழியினும் இப்பெயரின் பெருமையறிந்து போற்றப்படுதலை உணர்த்தவேண்டி, "வாகீசர்'' என்றுர். (வாகீசர்=சொல்லின் தலைவர்) 'எத்துணைச் சிறப்புடையவராயினும், இறைவனுக்கு அடியராகவேண்டுபவர் ஏதேனும் கைத்தொண்டு செய்தல்வேண்டும்' என்பதைத் தமது சொலலால் நன்கு வற்புறுத்திவந்ததோடு நில்லாமல் செயலாற் செய்து நிலை நிறுத்திய பேராசிரியர் இவர் என்பதனைத் தெரிவிக்க, "திருத்தொண்டின் நெறிவாழ வந்தவர்'' என்றுர். இங்ஙனம் கைத்தொண்டினை வலியுறுத்தினமைபற்றி இவரைச் சிலர் சரியையாளர் என்று நினையாதவாறு இவரது உயர்ந்த பரஞான நிலையை உணர்த்தவேண்டி, "ஞானத் தவ முனிவர்'' என்றுர். இவரது வரலாறு பற்பல அரிய பெரிய உண்மைகளை விளக்குவது என்பார், "வாய்மை திகழ்சீர்' என்றுர். இவரது பெருமைகளாக நாம் சொல்லுவன யாவும், இவரது பெயரினை நாம் பலகால் எடுத்தோதிப் புகழ்தலாக அமைவனவேயன்றி இவரது பெருமையை அறிந்து சொல்லியன ஆகா என்பார், "பெருநாமச்சீர்'' என்ருர். ஆகவே, அவ்வகையில் இவரை நாம் துதிக்க இயலுமேயன்றி இவரது புகழை அளவிட்டு உரைத்தல் இயலாது என்பார், "பரவலுறுகின்றேன்'' என்ருர். துதிக்கும் முறையில் கூறினும் ஓரளவாவது சொல்லுதல்வேண்டுமன்றே! அதுவும் ஒரு நாவே படைத்தவர்க்குக் கூடாது; ஆயினும், அதனைச் சொல்லவேண்டும் என்னும் ஆசை மேலிட்டால் அத்தன்மையை மறந்து சொல்லப்புகுகின்றேன் என்பார், 'ஒரு நாவுக்கு உரை செய்ய ஒண்ணுமை உணராதேன்'' என்ருர்.

## திருவவதாரம்

### நாட்டின் பெருமை

இத்துணைப் பெருமையுடைய இந்நாயனுர் திருவவதாரம் செய்யத் தவம்செய்த நாடு திருமுனைப்பாடி நாடு. (இது இப்பொழுது தென்னுர்க்காடு மாவட்டத்தில் அடங்கியுள்ளது; வட ஆர்க்காடு மாவட்டத்திலும் சில பகுதி சேர்ந்துள்ளது. அக்காலத்தில் திருக்கோவலூரைத் தலை நகராகப் பெற்றிருந்தது. இது நடுநாடு என்றும் சொல்லப்படும்) இதற்கு முதன்மை வாய்ந்த யாறு பெண்ணையாறு. 'தென்பண்ணை' எனப்படுவது இதுவே. பெண்ணையாற்றின் பெருக்கால் திருமுனைப்பாடி நாடு பெற்றிருந்த வளப்பத்தினைச் சேக்கிழார் பலபடியாக எழுதிக்காட்டுகின்ருர். அவற்றுள் ஒரு செய்யுள்,

"காலெல்லாம் தகட்டுவரால்; கரும்பெல்லாம்
கண்பொழிதேன்;
பாலெல்லாம் கதிர்ச்சாலி; பரப்பெல்லாம்
குலைக்கமுகு'
சாலெல்லாம் தரளநிரை; தடமெல்லாம்
செங்கழுநீர்;
மேலெல்லாம் அகிற்றூபம்; விருந்தெல்லாம்
திருந்துமனை"

என்பது.

இத்தகைய சிறப்புக்கள் எல்லாவற்றினும் மேலான, ஈடும் எடுப்பும் அற்ற மற்றொரு தனிச்சிறப்பு அத்திருமுனைப்பாடி நாட்டிற்கு யாதெனின், மூவர் முதலிகளுள் இருவர் (திருநாவுக்கரசர், சுந்தரர்) அந்நாட்டிலேயே அவதரித்தது. இதனைச் சேக்கிழார்,

"மறந்தரு தீநெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு"

என்று விளக்குகின்றார்.

## நகரச் சிறப்பு

இத்தகைய இந்நாட்டில் உள்ள ஊர்கள் பலவும் மிக்க வளமுடையனவே. அவற்றுள் சிறந்த ஊர் 'திருவாமூர்' என்பது. இது தன் பெயருக்கேற்றவாறே விளங்கியது என்பதைச் சேக்கிழார், 'திருவாமூர் திருவாமூர்' என்று அழகுபடக் கூறினார். அஃதாவது, திரு ஆம் ஊர் சிவபெருமானது திருவடிப் பேற்றினை யாவரும் பெறுதற்குக் காரணமாய் உள்ள ஊர் என்கிறார்.

"சைவநெறி தலமேழும் பாலிக்கும் தகைமையினால் தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர்" என்பது அப் பகுதி.

## மரபும் பெற்றோரும்

அத்திருவாமூரில், வேளாண் குலத்தில், 'குறுக்கையர் குடி' என்னும் குடியில் 'புகழனார்' என்பவர் ஒருவர் இருந்தார். இவரும் தமது பெயருக்கேற்பவே புகழ்பெற்று விளங்கினார் என்பதை,

"திக்குநிலவும் பெருமை திகழவரும் புகழனார்"

என்னும் சேக்கிழார் திருமொழியால் உணரலாம். இவர் மணந்துகொண்ட மனைவியாரும் இவருக்கேற்ற தகுதியுடையவராகவே இருந்தார். அவரது பெயர், 'மாதினியார்' (மாதருள் இனியவர்) என்பது.

## தமக்கையார் தோற்றம்

அவ்விருவர்தம் மணயறத்தின் பயனாக மக்கள் இருவர் தோன்றினர். முன்னர்த் தோன்றியவர் பெண்பாலார். அவரது திருப்பெயர் 'திலகவதியார்' என்பது. அவ்வம்மையாரே நம் நாயனாரை நமக்கு அளித்த பெருமையுடையவர் என்று நாம் கூறலாம். அவரைச் சேக்கிழார்,

"செங்கமல நிரையிதழின் அகவையினில்
திகழவருந் திருவனைய திலகவதியார்"

என்கிறார்.

## நாயனாரது திருவவதாரம்

திலகவதியார் பிறந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆண்மகனார் ஒருவர் பிறந்தார்; அவரே நம் திருநாவுக்கரசு நாயனார். அவருக்கு அப்பொழுது பெற்றோர் இட்ட பிள்ளைமைத் திருப்பெயர் 'மருணீக்கியார்' என்பது. நம்மனோரது மருளை (மயக்கத்தை)யெல்லாம் நீக்குவாராகிய இவருக்கு இப்பெயர் அமைந்தது சாலப் பொருத்தமே. இதுபற்றிச் சேக்கிழார், இவரை, 'உலகத்தில் உள்ள இருளை நீக்கி ஒளியோடு விளங்குகின்ற சூரியன் தோன்றியதுபோலத் தோன்றினார்' என்கின்றார்.

திருஞானசம்பந்தரது திருவவதாரத்தைக் கூறுமிடத்துச் சேக்கிழார் அவரது திருவவதாரத்தின் பயனாகப் பலவற்றை விரிக்கின்றார். இங்கு அவ்வாறின்றி இவரது திருவவதாரத்தின் பயனை இரண்டையே கூறினார். ஆயினும், அவ்விரண்டும் இரண்டு கண்போன்றவையாகும். அவை, "அலகில் கலைத்துறை தழைப்ப" என்பதும், "அருந் தவத்தோர் நெறிவாழ" என்பதும் ஆகும்.

'அலகில்கலை' என்றது அளவில் அடங்காத—அஃதாவது இறைவனது பெருமையை விரிக்கின்றகலை—ஞானக்கலை. அது திருநாவுக்கரசராலேயே தழைத்தோங்கினமையை நாம் அறிகின்றோம். 'சிவனது பரத்துவம்' முதலிய ஞான நூல்களின் பொருள்கள் பலவற்றை நுதலிய பொருள்களாக (விடயமாக)த் தனி தனி எடுத்துக்

கொண்டுவிரித்துக் கூறுவனவாய திருப்பதிகங்கள் திருநாவுக்கரசரது திருமுறையிலேயே நாம் காண்கிறோம். ஆகையால், ஞானக்கலை அவராலேயே தழைத்தது என்பது முற்றிலும் உண்மையுரையேயாம். இனி, 'அருந்தவத்தோர் நெறி' என்றது, தொடக்கத்தில் சொல்லிய திருத்தொண்டின் நெறியே. அது இவராலேயே வாழ்ந்தது என்பது உண்மையே எனல் சொல்லவேண்டா. சிவநெறியை விளக்கும் கலைகள் தழைத்து, திருத்தொண்டின் நெறியும் நிலைபெற்று விளங்குமானால் வேறு என்னவேண்டும்! ஆகவே, இவ்விரண்டே போதுமானவையாதல் அறிக. அங்ஙனம் இவரது திருவவதாரத்தைப்பற்றிக் கூறும் சேக்கிழாரது செய்யுள் அறிந்து இன்புறற்பாலது.

> "திலகவதியார் பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
> அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
> உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போற்பின்
> மலரும்மருள் நீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்"

என்பதே அச்செய்யுள்.

## பிள்ளைமைச் சடங்கு

மைந்தர் பிறந்ததைக் கண்ட புகழனார், அதன்பின் செய்யவேண்டிய நாமகரணம் (பெயரிடுதல்) முதலிய சடங்குகளையெல்லாம் சுற்றத்தார்கள் போற்றும் வகையில் சிறப்புறச் செய்தார். பின்பு தாயாரும் தந்தையாரும் பேரன்புடனே வளர்க்க, மருணீக்கியார் குழந்தைப் பருவத்தைக் கடந்து 'சிறுவர்' என்னும் பருவத்தை அடைந்தார். அப்பொழுது செய்யவேண்டிய சௌளகன்மம் முதலிய சடங்குகளையும் புகழனார் சிறப்பாகச் செய்தபின்பு, கல்வி தொடங்குவித்தார். அதனைத் தொடங்குவிக்கின்றபொழுது புகழனார் என்ன நோக்கத்தோடு தொடங்குவித்தார் என்பதைச் சேக்கிழார் கூறுகின்றார். ஞானத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் தம் மகனாரது உள்ளம் கட்டவிழ்ந்து மலர்தல் வேண்டும் என்னும் நோக்கத்துடன் அவ்வாறு மலர்விக்கின்ற கல்வியையே தொடங்குவித்தார் என்கின்றார். அச்செய்யுள் வருமாறு:—

> "மருள்நீக்கி யார்சென்னி
> மயிர்நீக்கும் மணவினையும்
> தெருள்நீர்ப்பன் மாந்தரெலாம்
> மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
> பொருள்நீத்தங் கொளவீசிப்
> புலன்கொளுவ மனமுகிழ்த்த
> சுருள்நீக்கி மலர்விக்கும்
> கலைபயிலத் தொடங்குவித்தார்"

## கல்வி நிலை

இவ்வாறு கல்வி பயிலத் தொடங்குவித்தபின்னர், மருணீக்கியார் தம் தந்தையார் விரும்பியவாறே அரிய கலைகளையெல்லாம் முன்னைப் பிறவியின் தொடர்ச்சியால் மிக எளிதில் கற்று, தந்தையார் பெருமகிழ்ச்சி கொள்ளுமாறு மறுவற்ற இளம் பிறைபோல வளர்ந்து வருகின்றார்.

(தொடரும்)

---

திருக்கோட்டியூர் :—சௌமியநாராயணசுவாமி கோயிலில் மண்டலாபிஷேகத் திருவிழா 10-5-61ல் நடைபெற்றது.

கன்னியாகுமரி :—வித்வான் எஸ். உமதாணுபிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற 'கன்னியாகுமரி மான்மியம்' என்ற நூல் கன்யாகுமரி தேவஸ்தான வெளியீடாக சென்னை முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களால் வெளியிடப்பெற்றது.

கோசவலசு :—பகவான் கோயிலில் அக்னி நட்சத்திரத் திருவிழா 16-5-61 முதல் 20-5-61 வரை நடைபெற்றது.

நயினார்கோயில் :—நாகநாதசுவாமி கோயிலில் வைகாசி வசந்தோற்சவம் 19-5-61 முதல் 31-5-61 வரை நடைபெற்றது.

# நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

## எட்டாம் பாட்டு

கண்டதுவே கொண்டு எவ்லாரும் கூடிக்
  கார்க்கடல் வண்ணனேடு என்திறத்துக்
கொண்டு அலர் தூற்றிற் றதுமுதலாக் கொண்ட
  என்காதல் உரைக்கில் தோழீ
மண்திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள் விசும்பும்
  கழியப் பெரிதால்
தெண்திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த தென்திருப்
  பேரையில் சேர்வன் சென்றே.

*என்னுடைய உடலிலே ஏற்பட்ட மாறுதல்களைக்கொண்டு தாய்மாரும் ஊராரும் யாவரும் ஒன்றுசேர்ந்து கரிய கடல்போன்ற நிறமுடையனேடு என்னிடமுள்ள நிலைமையைக் கொண்டு கூட்டி பழிதூற்றினார்கள். அந்தப் பழியையே கை முதலாகக்கொண்டு என்னை இடம் கொண்ட காதலைச் சொல்லப்போனல் மண்செறிந்த பூமியும், ஏழ்கடலும், வானமும் கொள்ளாத அளவு மிகப்பெரிதாயிற்று. அதனுல் அவன் வீற்றிருப்பதும், தெள்ளிய அலைநீர் சூழ்ந்ததுமான தென்திருப்பேரை போய்ச் சேரக்கடவேன்.*

கண்டதுவே கொண்டு

*நான் ஒன்றும் செய்யவுமில்லை. தவறுதலாகப்படும்படி பேசவும் இல்லை. "ஊழியாய் உலகேழு முண்டான் என்றிலன் பழம் கண்டின்னே ஆழிகளாம் பழவண்ண மென்றேற்கு" என்று சொல்லப்படுவதுபோல பிதற்றவில்லை. என் உள்ளத்திலே அவன் புள்ளோடு சாரிதிரிந்தான் ஒருநாள். நிகழ்ந்ததை உள்ளபடி உரைத்தேன். அவ்வளவுதான் என் மேனி என்னவோ நிறமிழந்து நிற்பது உண்மை. இதைப் பார்த்து.*

எல்லாரும் கூடி

*தாயும் ஆயமும் கூடி வெளியார் ஏதேனும் கட்டிவிட்டால் தெரியாதவர்கள் சொல்லிவிட்டுப் போகிருர்கள் என்று அசட்டை செய்துவிடலாம். என்னை அறிந்து வைத்த என் தாய்மார்களும் அல்லவா ஊராருடன் சேர்ந்துகொண்டார்கள்.*

கார்க்கடல்......கொண்டு

*கருமையான கடல்போன்ற மனத்துயர் போக்கும் வடிவுடையவனேடு, என்னிடத்தேற்பட்ட மாறுதல்களைப் பொருத்திப் பார்த்து, இரண்டையும் முடித்து.*

அலர் தூற்றிற்று

*அந்தத் தாய்மார் ஊரார் கூட்டம் என் பேரில் பழியைப் பரப்பிற்று. ஓடும் நிலை என்னவென்று தெரிந்தா பேசுகிருர்கள். எதோ தகாதது நடந்ததுபோல குதிக்கிருர்கள். என் உள்ளத்திலோடும் எண்ணங்களைப் புரிந்துகொள்ளும் உணர்ச்சியே இல்லாத வெறும் ஜடங்கள்.*

அது முதலா

*அப்படி அதுகள் பழி தூற்றத் தலைப்பட்டனவா அப்பழியையே கை முதலாக்கி.*

கொண்ட என் காதல்

*என்னை முற்றிலும் ஆட்கொண்ட என் காதல். என் உள்ளத்திலே ஒரு மூலையிலே பதுங்கிக்கிடந்த என் காதல் வளர ஆரம்பித்தது. அதன் வளர்ச்சியை எப்படி நீ அறிய உரைப்பது.*

தோழீ

*என் மனக்குகந்த துணைவியல்லவா நீ. தாயும் ஊராரோடு கூடிப் பழிகூறத் தலைப்பட்ட பின் உன்னைத் தவிர வேறு யார் கிட்டியவர்கள்.*

உரைக்கில்

*என் காதலின் வளர்ச்சியை ஒருவாறு சொல்லுவோம் என்று முயன்று பார்த்தால்*

மண்திணி......பெரிதால்

*மண்செறிந்த இந்நிலவுலகனைத்தும், பரந்த ஏழு கடல்களும், கண்போன திசையெல்லாம் கவிந்து பரந்து காணும் வானமும் இடம் போதாதென்று சொல்லும்படி வளர்ந்து கொண்டே போகும் பேரளவுடையதாயிற்று என் காதல். அதனுல்,*

தெண்டிரை சூழ்ந்தவன் வீற்றிருந்த
தென்திருப் பேரையில்

தெளிந்த அலைவீசும் புனல் எங்ஙனும் சூழ்ந்து குளிர்ந்து விளங்கும் தென்திருப் பேரையிலே. அவன் தன் வெற்றி தோன்ற வீற்றிருக்கும் ஊரிலே.

சூழ்ந்த என்பதை வேருக்கி என் காதலைப்பெருக்க வளைத்தவன் என்பது பன்னீராயிரப்படி. அப்படியாயின்என்னைத் தன் மயக்கிலே வீழ்த்தத் திட்டமிட்டு என் உள்ளத்திலே புள்ளோடு சாரிகை திரிந்து, அந் நிலத்திலே காதலை என்னையும் அறியாது கடல் புரைய விளைவித்த சூழ்ச்சியையுடையவன், தன் சூழ்ச்சியின் வென்றி தோன்ற வீற்றிருக்கும் தலம்.

சேர்வன்சென்றே

இப்படிப் பெருகும் காதலைத்தாங்கும் வலிமையுடையவளா நான், முடியாது. அவன் வந்தாலும் வரலாம் என்று காத்திருக்கவும் பொறுமை கிடையாது. ஆகையால் நானே போய் அத்தலத்தைச் சேர்வது என்று நிச்சயித்து விட்டேன்.

அலர் தூற்றிற்றது முதலா

காதற் பயிரே தனிப்பண்புடையது. பிறர் பழி கூற ஆரம்பித்தால் அது எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியதுபோல வளருமே ஒழியக் குறையாது. ஊரார் பழி அப்பயிருக்கு எரு. அன்னையர் தடுப்புமொழி வண்டல் நீர்.
ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்மடுத்து
ஈரநெல் வித்துமுளைத்த நெஞ்சப் பெருஞ் செய்யுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த.
என்பது இவ்வாழ்வாரின் பாசுரமே.

"ஊரவர் கவ்வை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந்நோய்"

என்பது குறள். இந்த அலர் (பழி) தான் இக்காதலர்க்குத் தாரகம்.

"அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர் அறியார் பாக்கியத்தால்"

என்றார் வள்ளுவர். இது தலைவன் கூற்று. ஊரில் பழியாய்விட்டது என்று கூறும் தோழியிடம் அவன் கூறுவதாக வருவது. எங்கள் காதல் எங்களுக்குள்ளேயே தங்கி இருவரும் மணந்து வாழ இயலாது போய் விடுமோ என்று பயந்தேன். இது ஊரறிந்த தன் பயனுக உரம் பெற்றுவிட்டது. இனி அது நிலைக்கும். ஊரார் பேச்சே அதை நிலை நாட்டிவிடும். பாவம் ஊரார் தங்கள் பழியால் எங்கள் காதல் மாயும் என்று நினைக்கிறார்கள். எங்கள் காதல் அவர்கள் பழியால் நிலைக்கும் என்பதை அவர்கள் அறியார்கள். பாவம். எங்கள் பாக்கியம் அது. அறிந்தால் நிறுத்திவிடுவார்கள் அல்லவா? என்கிறான் தலைவன்.

பராங்குச நாயகியின் காதலும் அலர் தூற்றியது காரணமாகவே நீள் விசும்பும் கழியப்பெருகுகிறது.

## ஒன்பதாம் பாட்டு

"சேர்வன் சென்று என்னுடைத் தோழிமீர்காள்!
அன்னையர்காள்! என்னைத் தேற்றவேண்டா
நீர்கள் உரைக்கின்றதென் இதற்கு நெஞ்சும்
நிறைவும் எனக்கு இங்கு இல்லை
கார்வண்ணன் கார்க்கடல் ஞாலமுண்ட
கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்
ஏர்வள ஒண்கழனிப் பழனத் தென்
திருப்பே ரையின் மாநகரே."

என் தோழிமார்களே! தாய்மார்களே! நீங்கள் என்னைத் தேற்றவேண்டாம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்கிறபடி நடப்பதற்குத் தேவையான நெஞ்சமும், நிறையும் எனக்கு இங்கே இல்லை. கரியமேகம் போன்ற மேனியை உடையவனும், கருங்கடலால் சூழப்பட்ட பூமியை அமுது செய்தவனுமாகிய கிருஷ்ணனுக்கு என் பெண்மை தோற்றது. ஆகையால் ஏர்களாலே வளம்பெற்ற கழனிகள் மிக்க மருத நிலமான தென்திசைக்கு அழகு செய்வதும் பெரிய மதில் சூழ்ந்ததுமான அவனுடைய நகரான திருப்பேரையில் போய்ச் சேர்வேன்.

என்னுடைத்......வேண்டா

என்னுடைய நிலையை நோக்கி பேசும் என் தோழிமாரே! என் தாய்மார்களே! என்னை மறந்து நிற்கும் என்னைக் காணுகிறீர்களே ஒழிய என்னையே மறக்கச் செய்த அவனைக் காணுகிறீர்களில்லை. அவனைக் கண்டால்லவா என் உண்மை நிலை உங்களுக்கு விளங்கும்? என்னை உங்கள் உடைமையாகப் பாவிக்கும் நீங்கள் என்னைத் தோற்ற முற்படவேண்டாம் பயனில்லை.

நீங்கள் உரைக்கின்றது என்

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். என் உண்மை மன நிலையறிந்து சொன்னால் நல்லது அதற்குத் தாரகமாக ஏதேனும் செய்யவோ சொல்லவோ இல்லை. என்ன வெல்லாமோ பேசுகிறீர்கள். ஏதேதோ, தகாது புறப்பட்டால் பழி சூழும், குடிகேடாகும் என்றெல்லாம் கூறுகிறீர்களே.

இதற்கு நெஞ்சும் நிறையும் எனக்கு இங்கில்லை

இவற்றையெல்லாம் கேட்டு ஏற்று அதன் படி என்னை நடக்கச் செய்ய என் நெஞ்சும், நீங்கள் சொல்வதுபோல் இப்படி நான் துணிவது பழிப்புக்கிடமாகும் என்று உணரச் செய்ய இன்றியமையாத அடக்கமும் இப்போது என்னிடத்திலே இல்லையே. முன்னமேயே சொன்னேனே "நாணும் நிறையும் இழந்ததுவே" என்று. அதுபோல என் நெஞ்சும் என் காவலைவிட்டு இராப்பகலாய் அவன் செங்கனிவாயின் திறத்ததாய் அங்கே ஒழிந்தது. உங்கள் சொல்படி கேட்டு என்னைச் செலுத்தி வைக்கக்கூடிய சாதனங்களே என்னிடமில்லாதபோது ஏன் வீணே கண்டபடி பேசி என்னைத்தேற்ற முயல்கிறீர்கள். வேண்டுமாகில் அங்குபோய் என் நெஞ்சினிடமும் நிறையிடமும் கூறுங்கள்.

கார்வண்ணன்......தோற்றேன்

என் பெண்மை தோற்றுவிட்டது. நெஞ்சும் போய் நிறையும் போனபின் பெண்மை தோற்காமல் என்ன செய்யும். ஆனால் ஒன்று. என் பெண்மையாரிடம் தோற்றது. அது தெரியாமல் கூச்சலிடுகிறீர்கள். ஆஹா. கருணை கொழுந்துவிடும் கார்மேகம் போன்ற வண்ணமுடையவன். ஆபத்துக் காலத்தே இக்கடல் சூழ்ந்த சகத்தையெல்லாம் அமுது செய்து தன் திருவயிற்றிலே வைத்துக் காத்தவன். அவன்தானம்மா கிருஷ்ணன். அவனிடம் பெண்மை தோற்காமல் என்ன செய்ய முடியும்? ஒன்றல்ல இரண்டல்ல பதினாயிரம் பெண்கள் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்தார்களே, அந்த அழகன். அவர்களுடையதைவிட என் பெண்மை வலியதா? அதுவும் தோற்றது. ஆகையால்

"ஏர்வள......நகர் சேர்வன் சென்று

ஏர்களால் வளம்படுத்தப்பட்டதும், அப்படி ஏர்கள் வளமுறச் செய்யவேண்டிய நீர்மிக்கு, நல்ல வயல்கள் நிறைந்த மருதவைப்பானதும், பெரிய மதில் சூழ்ந்துள்ளதுமான நகரிலேபோய்ச் சேர்வேன். அந்நகர் எதுவென்று கேட்கிறீர்கள். அதுதான் தென்திசைக்கே அழகு செய்வதான தலம் தென்திருப்பேரை! அங்கே வந்து அவன் தன்வீறு தோன்ற, பதினாராயிரம் பெண்களை ஈடழித்த வெற்றி தோன்ற வீற்றிருந்தான். இன்று என் பெண்மையையும் தோற்கடித்த வெற்றியும் தோற்ற வீற்றிருக்கிறான்.

அதனால் வீணாக என்னைத் தேற்றுவதாகச் சொல்லித் தடை செய்வதில் பயனில்லை. நான் மீளவோ, வழியில் நிற்கவோ செய்யப்போவதில்லை.

## பத்தாம் பாட்டு

"நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்
  நாண் எனக்கில்லை என்தோழி மீர்காள்
சிகரமணி நெடுமாட நீடுதென்
  திருப்பேரையில் வீற்றிருந்த
மகரநெடும் குழைக்காதன் மாயன்
  நூற்றுவரை அன்றுமங்க நூற்ற
நிகரில் முகில் வண்ணன் நேமியான்
  என்நெஞ்சம் கவர்ந்து எனை ஊழியானே"

என் தோழிமார்களே சிகரங்களை உடையதாய், மணிகள் பதிக்கப்பெற்றவையான மாடங்கள் உயர்ந்து விளங்கும் தென்திருப்பேரையில் எழுந்தருளியிருக்கும் நீண்ட மகரக்குழைகளணிந்து அதனாலே விளங்கும் காதுகளை உடையவனும் மாயம் வல்லவனும், துரியோதனாதியரை மங்கும்படி பாரதப் போரை நடத்திய ஒப்பற்ற மேகவண்ணனும், சக்ராயுதத்தையுடையவனுமான என் தலைவன் என் நெஞ்சைக் கவர்ந்து எத்தனை காலத்தவன். அதனால் அவனை நகரிலும், நாட்டிலும் பிறவிடத்தும் தேடி ஆராய்வேன். இதில் எனக்கு நாணம் என்பது இல்லை.

என் தோழிமீர்காள்...

என் நல் வாழ்விலும், என் நற்பெயரிலும் நோக்குடைய என் தோழிமார்களே.

சிகரமணி......வீற்றிருந்த

ஊரெல்லாம் மாடங்கள்! மாடங்களும் ஒன்றையொன்று போட்டியிட்டு உயரும் மாடங்கள்! மாடங்கள் தோறும் சிகரங்கள்,

அச்சிகரங்களிலும் மாடங்களிலும் நிறையப் பதிக்கப்பெற்று ஒளி மயமாகவே காட்சி யளிக்கும் இரத்தினங்கள். இத்தகைய மாடங் கள் நிறைந்த தென்திருப்பேரையிலே தன் வீறு தோன்ற எழுந்தருளி இருக்கும்.

மகரநெடும் குழைக்காதன் மாயன்

நீண்ட மகரக்குழைகள் தோள்கள்வரை தாழ்ந்து ஊசலாடும் காதுகளை உடைய ஆச் சர்ய சேஷ்டிதங்களை உடையவன்.

நூற்றுவரை அன்று மங்க நூற்ற

பாண்டவ நண்பனாய் அன்று துரியோதனன் முதலிய நூறு பேரும் அவர் படைகளும் மங்கியொழியும்படி பாரதப்போரை நடத் தியவன். போர் ஆரம்பமாகும் முன்பே அவர்கள் மாளசங்கல்பித்தவன். "பார் அர்ச் சுனா. இவர்களெல்லாம் என்னால் முன்பே கொல்லப்பட்டவர்கள். ஒப்புக்காகத்தான் நீ இவர்களைக் கொல்லப்போகிறாய்" என்று இவனே கீதையில் கூறினானல்லவா?

நிகரில் முகில் வண்ணன்

ஒப்பாரில்லாத, கார்மேகம் போன்ற குளிர்ந்த கரியநிறத்தை உடையவன்.

நேமியான்

அடியார் படுதுயரை நிரந்தரமாக அழிக்க வென்றே தன் கையில் சக்கரப்படையை ஏந்தியவன்.

என் நெஞ்சம் கவர்ந்து எனை ஊழியான்

அவன் என் நெஞ்சைக் கவர்ந்து எத்தனை காலத்தான். இன்றா? நேற்றா? அவன் இப் படிக் கவர்ந்து அதனால் எனக்கும் அவனுக் கும் ஏற்பட்ட உறவு "நேற்று இன்று வந்த உறவல்லடீ." நாங்கள் உற்றார்களாய் நெடும் காலமாயிற்று. இற்றைக்கும் ஏழேழ்பிறவிக் கும் அவன்தன்னோடு நான் உறவானவளே. பிறப்பெல்லாம் அவன் எதிர் சூழல் புக்கு எனக்கே அருள்கள் செய்த முன்னமே விதி சூழ்ந்திருக்கிறதடீ! இன்று புதிதல்ல. ஆகை யால்

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்

அவனிருக்கும் இடம் தேடி, நகரமோ, நாடோ, பிறவோ எல்லாம் போய்ப்புக்கு. அவனை நான் தேடுவேன். தேட உரிமை யுண்டு.

நாண் எனக்கில்லை

என் உரிமையிருக்கும்போது, என் உரிமையை நான் உணர்ந்துவிட்டபோது வெட்கத்துக்கு ஏதடீ இடம். நாயகி தன் நாயகன் இருக்கும் இடம்தேடிப்போவது வெட்கமற்ற செயலா. நீங்கள் போற்றும் வெட்கத்தைப்பற்றி என் நாயகனை இழப் பதா. முடியாது. நான்போய்த் தேடத் தான் செய்வேன் என்கிறாள்.

"ஊராரும் நகரத்தாரும் பழி சொல் கிறார்களே? என்கிறாயா? அதுதான் முன் னமே சொன்னேனே. அவர்கள் 'அலர்எழ ஆருயிர் நிற்கும்' என்று அவர்கள் கூறும் பழிச்சொல்லே என் உயிருக்குத் தாரகமாகக் கொண்டு தேடுவேன்.

## பதினொன்றாம் பாட்டு

ஊழி தோறூழி உருவும் பேரும் செய்கையும்
வேறவன் வையம் காட்டும்
ஆழிநீர் வண்ணனை அச்சுதனை
அணிகுருகூர்ச்சடகோபன் சொன்ன
கேழில் அந்தாதி ஓராயிரத்துள்
இவை திருப்பேரையின் மேயபத்தும்
ஆழியங்கையனை ஏத்தவல்லார் அவர்
அடிமைத் திறத்து ஆழியாரே.

ஒவ்வொரு ஊழியிலும் தன்னுடைய வடிவமும் பெயரும் வெவ்வேறாகக் கொண்டு உலகங்களைக் காப்பவனாய், கடல் நீர்போல நிறமுடையனாய் தன் படைப்புக்களை நழுவ விடாதவனாய் இருப்பவனை உலகுக்கே அழகு செய்யும் திருக்குருகூரில் அவதரித்த சட கோபன் அருளிய ஒப்பில்லாத அந்தாதியாக வரும் ஆயிரம் பாடல்களில் தென்திருப் பேரையில் பொருந்தின சக்கராயுதனை இந்தப் பத்துப் பாசுரங்களையும் கொண்டு போற்றவல்லவர்கள் அவனடியார் என்ற நிலையில் ஆழ்ந்தவர்களாகப் பெறுவார்கள்.

ஊழிதோறூழி......வேறவன்

கல்பங்கள் எண்ணில. அக்கல்பங்கள் தோறும் ஒவ்வொரு கல்பத்திலே ஒவ்வொரு பெயரும் வடிவம் கொண்டவனாய்

வையம் காக்கும்

அப்படி அந்தக் கல்பங்களுக்கு வேறு பெயரும் உருவும் கொண்டு இந்த சகத்தைக்

காக்கும். என்ன செய்தேனும் தன் படைப்பைக் காத்தலைத் தன் பேருகக் கருதுமவன்

ஆழிநீர் வண்ணன்

கடல் நீர்போல கரும்பசுமை நிறமுடையவனை தன்னிடமுள்ள விலையற்ற பொருள்களை எல்லாம் பிறர்க்குதவத், தானே கொண்டுகரையிலொதுக்கும் வண்மையுடைய கடல்நீர் போன்ற வண்ணத்தோடு அதன் குணத்தையுமுடையவன்

அச்சுதனை

தன்னடியார்களைத் தன் ரக்ஷணக்குறைவால் நழுவிப் போய்விடாதே காப்பவன். தன் நிறம் என்றும் குறையாதவன்.

அணி......சொன்ன

இவ்வுலகுக்கே ஒரு மணிபோன்று விளங்கும் திருக்குருகூர். அவ்வூருக்கும் உலகுக்கும் நிரந்தரமான புகழ் அளித்து வரும்படி அவதரித்த சடகோபன். அவன் திருவாய் மலர்ந்தருளிய

கேழில்......பத்தும்

ஒப்பற்ற ஆயிரம் அந்தாதித்தொடையாகிற திருவாய்மொழி. அவற்றிலே தென் திருப்பேரைப் பதியைப்பற்றி வரும். இப் பத்துப் பாசுரங்களையும். உலகுக்கு அணியான ஊரில் அவதரித்த உலகோர்க்கணியானவன் உரை ஆயிரத்திலே தென்திசைக் கணியான திருப்பேரையைப் பற்றிவரும் பத்து பாடல்களையும்; இப்பாடல்களையே துதியாகக்கொண்டு

ஆழியங்கையனை ஏத்தவல்லார்

சக்கரப்படையைக் கையிலே தரித்தவனைப் பாடவல்லவர். தென்திருப்பேரையில் முகில் வண்ணனுய், மகர நெடும் குழைக்காதனுய்க் காட்சியளிப்பினும் ஆழ்வாருக்கு அவ்வுருவிலும் உள்ளே தோற்றுவது திருவாழிக்கையனே. "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்" என்ற கூப்பீடிட்டவரவல்லவா. தன் விரோதி யழிகைக்கும், தன்னைக் காக்கைக்கும் உடலாயிருக்கும் திருவாழியோடு சேவை சாதிக்கும் எம்பெருமானே ஆழ்வார் நெஞ்சில் என்றும் நிலைத்தோடுமவர். அவரைப் போலே திருப்பேரைக் குழைக்காதர் உருவிலே ஆழிக்கையனைக் கண்டு பாடல் வல்லார் எவர்.

அவர் அடிமைத்திறத்து ஆழியாரே

அம்மனப்பான்மையுடையவர் அவனடியார் என்ற தன்மையிலே, பாகவதன் என்ற மனப்பண்பிலே. ஆழங்கால்பட்டவராவார். பகவத் கைங்கர்யத்திலே ஊன்றி ஆழ்ந்து ஆழ்வார் என்றே சொல்லத்தக்கவராவார்கள். என்று பதிகப்பயன் கூறுகிருர் ஆழ்வார்.

இந்தத்தலம் தென்திருப்பேரை என்றே வியாக்கியானங்களில் கூறப் படுகிறது. ஆனல் வியாக்கியானங்களைப் பதிப்பித்த சே. கிருஷ்ணமாசாரியார் தன் பதிப்பில் "9-ம் பாசுரத்தில் தென்திருப்பேரெயில்மா நகரே என வருவதனையும், அதன் வியாக்கியானங்களையும் 5, 6, 7 பாசுரங்களில் "பேரெயிற்கே" என வருவதனையும் ஊன்றிப்பார்த்தால் நம்மாழ்வார் "திருப்பேரையில்" என்றே இந்த திவ்ய தேசத்தைக் கொண்டு வழங்கினுர் என்பது தெற்றெள விளங்குவதால் திருப்பேரெயில் என்றே பதிப்பிக்கலாயிற்று. இச் சொல் பிற்காலத்தில் திருப்பேரை என மருவி வழங்கலாயிற்று என அறிக" என்று ஒரு குறிப்புக் காண்கிறது.

முடிச்சூர் அப்பாவு முதலியாரவர்களால் பரிசோதிக்கப்பட்டு ஸ்ரீ கந்தாடை கிருஷ்ணமசாரியார் பிரதிக்ஞைங்க திருஎவ்வுளூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசராகவாசாரியாரால் பார்வையிடப்பெற்றுப் பதிப்பிக்கப்பட்ட நாலாயிர திவ்யப்ரபந்தப் பிரதியில் எங்கும் திருப்பேரை என்ற பாடமே கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீ அண்ணங்கராசாரியார் பதிப்பில் பேரெயிற்கே என்று பாடம் காண்கிறது. பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பதிக்கப்பெற்ற "மூர்ரே ராஜம்" அவர்கள் பதிப்பிலும் பேரெயிற்கே என்றே பாடம் காண்கிறது.

சே. கிருஷ்ணமாசாரியார் பகவத் விஷயம் பதிப்பில்:—

முதற்பாட்டில்

ஆருயிரப்படி, ஒன்பதாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு எல்லாவற்றிலும் திருப்பேரை என்றே முதலில் அவதாரிகையில் காண்கிறது.

வியாக்கியான உரையில் திருப்பேரெயில் என்று காட்டப்படுகிறது.

இரண்டாம் பாட்டில்

6, 7, ஆயிரப்படி அவதாரிகைகளில் 'தென் திருப்பேரை' காண்கிறது 12, 24 ஆயிரப் படிகளிலும் ஈட்டிலும் அவதாரிகையில் ஒரு பெயரும் இல்லை. சிலவிடங்களில் 'வியாக்கியானத்தில் 'பேரெயில்' எனக் காட்டப்படுகிறது.

மூன்றும் பாட்டில்

6, 9 வியாக்கியானத்தில் பேரைஎன்றேயிருக்கிறது. பன்னீராயிரப் படியில் திருப்பேரெயில் எனப் பதம்காட்டப்பட்டும் உரையில் திருப்பேரெயில் என்றே காண்கிறது. 24 ஆயிரப்படியில் ஒரு பெயரும் இல்லை ஈட்டிலும் இல்லை.

நாலாம் பாட்டில்

6, ஆறுயிரப்படி 'பேரை'தான். 9-ல் பெயரில்லை. பன்னீராயிரப்படியில் பதம் 'பேரெயில்' எனக் காட்டப்படினும் 'பேரை' என்றே உரை. 24 ஆயிரப்படியில் பெயர் இல்லை. ஈட்டிலும் இல்லை.

ஐந்தாம் பாட்டில்

6, 9 ஆயிரப்படி வியாக்கியானம் "பேரை"தான். பன்னீராயிரப் படியில் 'பேரெயில்' பதம் காட்டப்படுகிறது. உரை இல்லை. 24 ஆயிரப்படியிலும் ஈட்டிலும் பெயர் இல்லை.

ஆறும்பாட்டில்

ஆறுயிரம் ஒன்பதாயிர வியாக்கியானம் 'பேரை' 12-ல் வியாக்கியானத்தில் 'பேரெயிற்கே' எனக்காட்டப்பட்டது 24-ல் பெயரில்லை. ஈடு அவதாரிகை "பேரை" வியாக்கியானத்தில் 'பெரெயில்' பதம் காட்டப்படுகிறது. உரைஇல்லை.

ஏழாம் பாட்டில்

6, 9 ஆயிரப்படி வியாக்கியானம் 'பேரை' பன்னீராயிரப்படி வியாக்கியானத்தில் 'பெரெயில்' என்று காண்கிறது. 24-இல் பெயரில்லை. ஈடு அவதாரிகை "பேரை" வியாக்கியானத்தில் பதம் "பேரெயிற்கே" உரை 'பேரெயில்.'

எட்டாம் பாட்டு

6, 9 வியாக்கியானம் 12 அவதாரிகையும் "பேரை" 12 வியாக்கியானத்தில் பதமும் உரையும் 'பேரெயில்' எனக்காட்டப்படுகிறது. 24 அவதாரிகையில் 'பேரெயில்' வியாக்கியானத்தில் பெயர் இல்லை. ஈடு அவதாரிகை 'பேரெயில்'. வியாக்கியானம் "பேரை"

ஒன்பதாம் பாட்டு

6, 9 "பேரெயில்" எனக் காண்கிறது. 12, 24, ஈடு 'பேரெயில்'

பத்தாம் பாட்டு

6, 9 'பேரை' 12 அவதாரிகை 'பேரை' வியாக்கியானத்தில் பதம் 'பேரெயில்,' உரை 'பேரை' 24-ல் பெயர் இல்லை ஈட்டில் பதம் காட்டவில்லை. உரை 'பேரை'

பதினொன்றும் பாட்டு

ஆறுயிரப்படி "பேரை" 9-ல் பெயரில்லை 12-ல் பதம் 'பேரெயில்' உரையில்லை. 24-ல் பெயரில்லை. ஈட்டில் பதமில்லை உரை 'பேரை'

மேலே காட்டியவற்றால் நெடுகிலும் பூர்வாசாரியர்கள் தென்திருப்பேரை என்ற பெயரையே கொண்டனர் என்று காண்கிறது. 9-ம் பாட்டில் 'தென் திருப்பேரெயில் மாநகர்' என்பது நகருக்கு அடைமொழியாகவே வந்திருக்கலாம். வேறு ஒரு இடத்திலும் நகர்ப்பதம் இல்லை. இதை வைத்து ஊர் திருப்பேரெயிலாகவே இருந்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். இதுசற்று ஆராய வேண்டியதேயாகும்.

தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானுக்கு முகில் வண்ணன் என்று திருநாமம் கூறப்படுகின்றது. இப்பெயர் முன்னைய பதிகத்தில் கூறப்பெற்றமையும் இப்பதிகத்துக்குத் தோற்றுவாயாக விருந்திருக்கலாம் என்று முன்னர் காட்டப்பட்டது. தலபுராணத்தைச் சற்று நாம் பார்க்கவேண்டும். பூமிப்பிராட்டி தன் நிறமிழந்து "பேரா" என்ற திருநாமத்தோடு இத்தலம் எழுந்தருளி துர்வாசர் கூறியபடி எம்பெருமானை வணங்கி வழிபட மீண்டும் தன் நிறம் பெற்றுள். இங்கே பராங்குச நாயகி அவனைக் கிட்டாமல் தன் நிறமிழந்துவாட அவள் நெஞ்சு அவனைவிட்டு நீங்கிய அவள் நிறத்தை மீண்டும் பெற்றுவரப் போயிற்று என்று ஆழ்வாரே கூறுகிருர். அப்படிப் போன நெஞ்சு, ஒரு பிராட்டி இழந்த

நிறத்தை மீண்டும் பெற்ற வரலாறை நினைக்கிறது. அந்த இடத்தைச் சென்று சேர்கிறது. "பேரா" நிறம்பெற்ற இடம் அவள் பெயரை இட்டுப் பெயர் பெற்றது. "பேரை" என்று 'பேரா' என்ற வடமொழி தமிழில் 'ஐ' ஈறுபெற்று 'பேரை' ஆயிற்று. நிற மிழந்த நாயகியின் நிறம் பெறவே நெஞ்சு போனமையின் இவ்வூரை நாடிற்று. "இழந்த என் மாமைத்நிறத்துப்போன என் நெஞ்சினூரும்" என்ற பாசுரம்தான் உயிர்ப் பாட்டு. எனவே நெஞ்சு நிறம்பெறவே போயினதென்றால், முன்னொருத்தி இத் தலத்தே இழந்த தன்நிறம் பெற்றாள் என்றால், அவள் 'பேரா' என்ற திருநாமத்தாள் என்றால் அவளையிட்டுப் பெயர்பெற்ற தலம் 'பேரை' என்றுதான் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயம் எழ ஏதுவில்லை. 9-ம் பாடலில் உள்ள 'பேரெயில்' என்பது நகருக்கு அடைமொழி என்று கொண்டால் ஒருவித இடர்ப்பாடும் இல்லை. பூர்வர்கள் திருவுள்ளம் 'பேரை' என்பதே. அதுவே பலவிடங்களிலும் காண்கிறது. 'எயில்' பதம் பின்புள்ளார் ஐயத்தின்மேல் வந்தது. அதனாலே வியாக்கியானங்களில் ஒருசில இடங்களில் இதைக் காண்கிறோம். மற்றொன்று. ஏடெழுதுவார் பலர் கிரந்த லிபி கற்றவர்கள் 'ஐ' என்பதை 'ெெ' என்று இரண்டு கொம்பிட்டு ஏடெழுதும் வழக்கம் இருந்திருக்கலாம். எழுதுங்கால் ஒரு கொம்பு தவறுகவிடப்பட்ட தன் நிமித்தம் சில சுவடிகளில் "பேெயில்" என இருக்கவேண்டியது 'பேரெயில்' என எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் பூர்வர்கள் திருவுள்ளப் போக்கையும், 'இழந்தவன்' என்ற பாசுரத்தையும், தலவரலாறையும் நோக்குமிடத்து இத்தலத்தின் பெயர் 'தென்திருப்பேரை' என்பதே எனக்கொள்ளுதலே ஏற்புடைத்து என்பது அடியேனுடைய அபிப்பிராயம். இதனைப் பெரியோர் சிந்திக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

(தொடரும்)

---

சென்னை :—சென்னகேசவப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 28-4-61 முதல் 8-5-61 வரை நடைபெற்றது.

பரதூர் :—வரதராஜப்பெருமாள் கோயிலில் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் 5-7-61ல் நடைபெறும்.

அயிலூர் :—வாலீசுவரசுவாமி கோயிலில் சித்திரா பௌர்ணமி திருவிழா 30-4-61ல் நடைபெற்றது.

காரைக்குடி :—கொப்புடையநாயகி அம்மன் கோயிலில் செவ்வாய் திருவிழா 9-5-61 முதல் 18-5-61 வரை நடைபெற்றது.

மயிலாப்பூர் :—கபாலீசுவரர் கோயிலில் பெரியபுராணச் சொற்பொழிவுகள் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல். அவர்களால் 1-5-61 முதல் 30-5-61 வரை நாள்தோறும் மாலை 6-30 மணிமுதல் 9 மணி வரை நடைபெற்றன. தொடக்க உரை, அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் ஆற்றினார்கள்.

சிதம்பரம் :—தில்லையம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 6-5-61 முதல் 16-5-61 வரை நடைபெற்றது.

திருப்புகலூர் :—அக்னீசுவரசுவாமி கோயிலில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிழா 29-4-61 முதல் 8-5-61 வரை நடைபெற்றது. 6-5-61 முதல் 8-5-61 வரை திருமுறை மகாநாடு நடைபெற்றது. சமயசொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன. 8-5-61ல் நடைபெற்ற மாநாட்டில் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையேற்று, அறிவுரையாற்றி, தேவாரப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினார்கள்.

# திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்

[திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்]

திருக்கோளிலி என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்ருகும். இவ்வூர் இக்காலம் திருக்குவளை என்று வழங்கப்பெறுகின்றது. இது தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் தாலுக்காவில் இருக்கின்றது. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமானது. இக்கோயில் கருப்ப இல்லினது மேற்குப்புறச் சுவரின் நடுப்பகுதியில் திருமாலின் திருமேனி நின்ற திருக்கோலத்துடன் இருக்கின்றது. அர்த்த மண்டபத்து வாசலடியிலுள்ள வாயில் காவலாளர்கள் (Door Keepers) இருவர்களுக்கும் முறையே இரண்டு இரண்டு கைகள் இருக்கின்றன. இவைகளால் இக்கோயில் பல்லவரால் கட்டப்பெற்ற பழம் பெருமைவாய்ந்தது என்று அறியக்கிடக்கின்றது.

## கோயில் முதலியவைகளைப்பற்றிய செய்திகள் :—

இக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் இறைவர் திருக்கோளிலியுடையார், திருக்கோளிலியுடைய நாயனுர் என்னும் திருப்பெயர்களால் வழங்கப்படுகின்றனர். இத் திருக்கோயிலில் உள் மதிலின் புறச் சுவரில் பீரமதேவர், பஞ்சபாண்டவர்கள் முதலானோர் இறைவனை வழிபடும் முறையில் உருவங்கள் செதுக்கப்பட்டு, அவைகளின் கீழே பெயர்களும் பொறிக்கப்பெற்றுள்ளன. இக்கோயில் மகாமண்டபத்தின் வாயிலில் தொடங்கிக் கீழை வாசல் அறுதியாகத் திருப்பணி செய்தவர் வடவல்லத்தை இருக்கையாக உடைய இருன்குடியான இந்திராவதி நல்லூர், உய்ய வந்தான் சீகாழிப் பிள்ளையான ஐயதுங்கபன்மர் ஆவர். இத்திருப்பணி கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டியர் காலத்தில் நடைபெற்றதாகும். வடவல்லமும், இருன்குடியும் திருக்கோளிலிக்கு வடபால் சுமார் நான்கு மைல் தூரத்தில் இன்றும் நிலைபேறுடையனவாயிருக்கின்றன. இவற்றுள் இருன்குடி என்பது இக்காலம் இறையான் குடி என்று வழங்கப்பெறுகின்றது.

இத் திருக்கோளிலிக்கு வடபால் ஓடும் ஆற்றுக்குச் சந்திரமௌலிப் பேராறு என்று பெயர். இந்த ஆறு இக்காலம் சந்திரன் ஆறு என்று வழங்கப்பெறுகின்றது. இந்த ஆற்றின் பெருக்கால் இவ்வாற்றின் தென்கரையும், இந்த நாயனுர் கோயிலில் வடகுத் திருவீதியும் அழிந்துள்ளன. இக்கரையையும் வீதியையும் மீளவும் செய்வித்தவன் பாலைக் குறிச்சியுடையான் திருமறைக் காடன் ஆவான். பாலைக்குறிச்சி என்னும் ஊர் திருக்கோளிலிக்கு வடக்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கின்றது. இவ்வீதி எடுப்பிக்கப்பெற்ற காலம் கோச்சடையப்ப பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவர் அரியணையேறிய எட்டாவது ஆண்டு வைகாசி மாதத்து இருபத்தொன்பதாம் தேதியாகும். அதாவது கி. பி. 1259-ம் ஆண்டாகும். எனவே இக்கோயிலின் வடக்குத் திருவீதி எடுப்பிக்கப்பெற்று இற்றைக்கு 702 ஆண்டுகள் ஆகின்றன. இத்திருவீதிக்குத் திருமறைக் காடன் திருவீதி என்ற பெயரும் வைக்கப்பெற்றுள்ளது.

## சோழ மன்னர் காலங்களில் அளிக்கப்பெற்ற நிவந்தங்கள் :—

இக்கோயிலில் முன்னுளிலே சிவன் படரில் ஆலன் எழுந்தருளுவித்த அதிபத்த நாயனுர்க்குத் திருப்படி மாற்றுக்கு நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசி அமுதுபடிக்கு அளிக்கக்கடவதாக, அவ்வாலனின் சாதியார்கள் ஐயனைப்பட்டன் மகன் தாமோதரப்பட்டன் பக்கல் இரண்டாயிரத்து ஒருநூறு காசைப் பொலிசைக்குக் கொடுத்துள்ளனர். (பொலிசை=வட்டி. திருப்படிமாற்று=படிகட்டளை.)

குறிப்பு :—சிவன் படர் என்ற சொல்லே இக்காலம் செம்படவர் என்று வழங்கப்பெறுகின்றது.

திருக்கோளிலியுடையார்க்குப் பழையனூர் நாட்டுப் பழையனூர் உடையான், நொந்தா விளக்கு ஒன்றுக்கு எண்ணெய் உழக்காக நாள் முந்நூற்று அறுபத்தஞ்சுக்கு எண்ணெய் தொண்ணூற்றொரு நாழியுழக்குக்கு நூறு காசை இக்கோயில் முப்பது வட்டத்துக்காணியுடைய சிவப் பிராமணரிடம் கொடுத்துள்ளான். இந்நிவந்தம் அளிக்கப்பெற்ற காலம் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ராஜாதி ராஜ தேவர்க்குயாண்டு பத்தாவது மகர நாயிற்றுப் பூர்வபட்சத்துத் தசமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உரோகணி நாளாகும். குலோத்துங்க சோழ தேவரின் இருபதாம் இராச்சிய ஆண்டில் கோளிலியுடையார்க்கு, திருச்சாட்டியக்குடி உடையார் திருமடை விளாகத்து இருந்த ஒருவர் திருநுந்தா விளக்கு எரிப்பதற்கு இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப் பிராமணர்களிடம் எண்ணூறு காசைக் கொடுத்துள்ளனர்.

குலோத்துங்க சோழ தேவரின் நான்காம் ஆண்டு கன்னி ஞாயிற்றுப் பூர்வபட்சத்துத் தசமியும் திங்கள் கிழமையும் பெற்ற சதயத் திருநாளில் இராசேந்திர சோழவளநாட்டு, வெண்டாழை வேளூர்க் கூற்றத்திலுள்ள குலோத்துங்க சோழ கச்சிராயர் நாள் ஒன்றிற்கு எண்ணெய் உழக்காக நாள் முந்நூற்றறுபத்தைந்துக்கு வேண்டும் எண்ணெய் தொண்ணூற்றொரு நாழியுழக்குக்கு உபயமாக நூறு காசைக் கொடுத்துள்ளனர்.

திரிபுவனச்சக்ரவர்த்திகள் இராசேந்திர சோழ தேவரின் முப்பத்தைந்தாம் ஆண்டு மீன ஞாயிற்று அபரபட்சத்துத் தசமியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் பாலைக்குறிச்சியுடையான் அரையன் திருமறைக் காடுடையான், தான் பிறந்த நாளாகிய கேட்டை நாளில் மாதந்தோறும் கோளிலியுடைய நாயனாரைத் திருவீதியுலா செய்தருளவும்; அமுதுபடி, சாத்துப்படி, திருப்பள்ளித்தாமம், திருவிளக்கெண்ணெய் உள்ளிட்ட இவையிற்றுக்கும், ஸ்ரீ பாதம் தாங்குவார், திருப்பள்ளித் தொங்கல் எடுக்க வேண்டுவார் ஆகியோருக்கும் உடலாக அஞ்சரையே மாகாணி நிலத்தைக் கொடுத்துள்ளான். (உடலாக—மூலதனமாக) இம் மன்னன் காலத்தே பாண்டிகுலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துடையான் ஒருவன் பிள்ளையார்க்கு நந்தவனத்திற்கு நிலம் விட்டுள்ளான்.

**பாண்டிய மன்னர் காலங்களில் அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்:—**

வியாபாரிகளில் மாங்குடியான் பிச்சன் கணபதியாண்டான் என்பான் இத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கூத்தப் பெருமானுக்கும் அவரது நாச்சியார்க்கும் திருவாதிரை தோறும் திங்கள் திருநாளில் சிறப்பமுது செய்தருளித் திருவுலாச் செய்தருளவும், ஆளுடைய பிள்ளையார்க்குத் திருஞானவமுது, திருவுலா, தேவாரம் இவைகள் செய்தருளவும் இடையிலி என்னும் ஊரில் ஒருவேலி மூன்றுமா நிலத்தை இருநூற்றறுபது பணத்துக்கு வாங்கி இக்கோயில் ஆதி சண்டேசுவர தேவ கன்மிகளிடம் கொடுத்துள்ளான். இந்நிகழ்ச்சி கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவருக்கு யாண்டு பதினெட்டாவதின் எதிராமாண்டு ஆடி மாதத்து இருபதாந் தேதியில் நிகழ்வுற்றது.

இப் பாண்டியன் காலத்தே வடவல்லத்தை இருக்கையாகவுடைய இருன்குடியான இந்திராவதி நல்லூர் உய்யவந்தான் சீகாழிப் பிள்ளையான ஜயதுங்க பன்மர் இறைவனுக்குச் சிறுகாலைச் சந்திக்கு ஸ்ரீபலி அறுதியாக எரிப்பதாக நிச்சயித்த விளக்கு இருபதுக்கு திருக்கோளிலியில் நான்கு மானிலத்தை முப்பது பணத்துக்கு வாங்கி அளித்துள்ளான். இவனே, இம்மன்னனது பதினைந்தாம் ஆண்டில் திருக்கோளிலியுடையார்க்குப் பஞ்ச திரவியம் சூடியருளப் பண்ணுவதற்கு நூறு பணத்தைக் கொடுத்துள்ளான்.

**இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு :—**

இவ்வூர், இராசேந்திர சோழவளநாட்டு, வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக்கு உட்பட்டிருப்பது. வேளூர் என்பது, திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குப் போகும் பெருவழியில் இருக்கின்றது. வேளூர், கீழ் வேளூர் என்னும் பெயர்களுள்ள ஊர்களினின்று வேறு பிரித்துக் காட்டுவதற்கு இது வெண்டாழை வேளூர் என்னும் பெயர் பெற்றிருக்கவேண்டும்,

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

## திருவல்லவாழ்த் திருப்பதி

நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாஸனம் செய்த திருவல்லவாழ்த் திருப்பதியை நம்மாழ்வார் பாசுரங்கொண்டு அனுபவித்து வருகையில், திருவாய்மொழி (5-9 ல்) நான்கு பாசுரங்களாலே அநுபவித்தோம் கீழ். இனி ஐந்தாவது பாசுரத்திலிருந்து அநுபவிப்போம்.

### 5. நன்னலத் தோழிமீர்காள்!

தோழிகளே! நான் உங்களுடைய குணங்களை நோக்கியன்றோ உங்களோடு பழகிவருவது; நீங்கள் நன்னலத் தோழிகளல்லீர்போலும். தாய்மார்போலவே நீங்களும் எனக்குப் பகையாளிகளாக இருக்கின்றீர்களே; இங்ஙனேயிருந்தால் உங்களுக்குத் தோழியரென்னும் பெயர் அடுக்குமோ? திருவல்லவாழ்ப்பதியில் ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடைய அந்தணர்கள் பகவத்ஸமாராதனமாக வனுட்டிக்கும் வேள்விகளில் தோன்றும் புகையானது ஆகாசப் பரப்பெங்கும் பரவியிருந்து என்னை யீர்க்கின்றதே! இதற்குத் தப்பிப் பிழைப்பதெங்ஙனேயெனக்கு? இஃது ஒருபுறமிருக்க, அத்தலத்தெம்பெருமானுடைய அளவுகடந்த போக்யதையோ என்னை ஆத்மாபஹாரம் பண்ணுகின்றது; அந்தத் திருமூர்த்தியைக் கண்ணால் காணப்பெற்றால் போதுமென்றிருக்கிறவெனக்கு இது என்றைக்குக் கைகூடும் சொல்லுங்கள். அந்த போக்யதையிலே நான் ஈடுபட்டதுபோல நீங்களும் ஈடுபட்டு என்னையும் அநுபவிப்பித்து நீங்களும் அநுபவித்து வாழ்ந்து போகவேண்டியிருக்கத் தடையும் செய்வதென்னோ? என்றுளாயிற்று தலைவி.

### 6. காண்பதெஞ்ஞான்று கொலோ?

இப்பாட்டில் தோழிமார்களைக் கனிவாய் மடவீர்! என்று விளித்திருப்பதன் கருத்தை ஆசிரியர்கள் விவரித்திருப்பது அழகியது. எம்பெருமானைப் பிரிந்த துயரத்தினால் என் வாய் வெளுத்து உலர்ந்து கிடக்க, உங்கள் வாய் தாம்பூலமருந்திச் செவ்விபெற்றிருத்தல் தகுதியோ? என்று வெறுத்துரைத்தவாறு. கனிவாய் மடவீரென்ற விளிக்கு மற்றொரு வகையாகவும் கருத்துக்கூறலாம்; "ஏகம் துக்கம்ஸுகஞ்சநௌ" (தோழமையின் இலக்கணம் இன்பதுன்பங்கள் ஒத்திருக்கை) என்றபடி தோழிமார்களும் தன்னைப்போலே வாய் வெளுத்திருப்பதாகவே கொண்டு 'நீங்களும் கனிவாய் மடவாராக இருந்தவர்களன்றோ; அங்ஙனே உங்களை நான் மறுபடியுங் காண்பது எப்பொழுதோ? என்கிறாளென்னவுமாம். இக்கருத்தில், முன்னிருந்த தன்மையையிட்டுக் கனிவாய் மடவீரென்று விளித்ததாகக் கொள்க. நல்ல மிடற்றோசையையுடைய வண்டுகளும் இளந்தென்றலும் பொருந்திய சோலைகளால் சூழப்பட்ட திருவல்லவாழ்ப்பதியிலே வாமனாவதாரஸௌந்தர்யத்தை நினைப்பூட்டிக் கொண்டு காட்சி தந்தருளா நின்ற எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளை நான் காணப்பெறுவது என்றைக்கு? என்று வினவுகிற முகத்தால் நீங்கள் விரைவாகக் கூட்டிவைக்க வேணுமென்று கூறியவாறு.

### 7. பாதங்கள் மேலணிபூந்தொழக்கூடுங் கொல் பாவை நல்லீர்!

திருவல்லவாழ்ப்பதியில் தடாகங்களெல்லாம் கடல்போலே காட்சிதரும். அங்ஙனே பெருத்திருந்துள்ள பொய்கைகளிலே வளர்ந்த தாமரைப் பூக்களும் செங்கழுநீர்ப் பூக்களும் மாதர்களின் அழகிய முகங்களோடும் கண்களோடு மொத்திருக்கின்றனவாகச் சொல்லப்படுகிறது. இங்குச்சிலர் கேட்கலாம்; ஊரிற் பெண்களினுடைய முகமும் கண்களும் எப்படியிருந்தாலென்ன? அதைப் பற்றி வருணித்தல் அவசியமோ? என்று, கேண்மின்; "அங்கமாறைந்து வேள்வி நால் வேதம் அருங்கலை பயின்று எரிமூன்றும்

செங்கையால் வளர்க்கும் துளக்கமில்மனத் தோர்'' என்றும், ''நால்வேதமை வேள்வி யோடாறங்கம் வல்லவந்தணர் மல்கிய'' என்றும் திருப்பதிகளிலே ஆடவர்க்குச் சிறப் புக்கூறுவது போலவே பெண்டிர்க்கும் சிறப்புக் கூறுதல் இன்றியமையாததாம். திருமங்கையாழ்வார் பாசுரங்களில் இது மிகுதியாகக் காணப்படும். ''ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலைத் திருவல் லிக்கேணி'' ''கோவையேய்வாய மரதகம் போற்கிளியினின்சொல் அனமேவு நடைமட வார்பயிலுஞ் செல்வத் தணியழுந்தூர்'' என் பன போன்ற பல பாசுரங்கள் காண்க.

இவ்வேழாம் பாட்டில் ''பாவைநல்லீர்!'' என்று தோழிகளை உகந்து விளித்திருக்கின் றது; இதனால் தலைவியின் முயற்சியைத் தோழியர் தடைசெய்வதை நிறுத்திக்கொண் டார்களென்பது புலப்படும். அன்றி, தலைவி யின் விடாமுயற்சியைக் கண்டு உவந்த தோழியர் எழுதின பதுமைபோலவே நிலை நின்றிருக்கக் கண்டதனாலாகிய விளி என்ன வுமாம்.

## 8. நாடொறும் வீடின்றியே தொழக் கூடுங் கொல் நன்னுதலீர்

எப்போதும் பக்குவபலமான வயல் களும் பூத்த பொய்கைகளும் நாற்புறமும் காணநின்ற திருவல்லவாழ்ப்பதியிலே, திரு நாடு திருப்பாற்கடல் முதலானவற்றையும் மறந்து நித்தியவாசம் செய்தருளா நின்ற பெருமானுடைய திருவடிகளை ''நிலம்தாவிய நீள்கழல்'' என்றது வசிஷ்ட சண்டாளவாசி பாராமல் யாவரையும் ஒருங்கே அநுக்கிர ஹிக்குந்தன்மையுடையது என்று காட்டுதற் காக. அத்தகைய திருவடிகளை இடை விடாதே தொழும்படியான பாக்கியம் வாய்க்குமோ? என்கிறாள். இங்குத் தோழி மார்களை 'நன்னுதலீர்!' என்று விளித்ததன் கருத்து யாதெனில்; தலைவிக்கு ஆர்த்தி மிக மிக, 'இனி இவளுக்கு எம்பெருமானருள் கிட்டுவது தாமதிக்க மாட்டாது, அணித்தே யாகும்' என்று உறுதிகொண்ட தோழியர் மிகமகிழ்ந்து அம்மகிழ்ச்சி நுதலிலே விளங்க நின்றார்களென்பதாம், அன்றியே, திருவல்ல வாழ் நாதனுக்கு நீங்கள் புருஷகாரம்பண்ணி அவன் இங்கேயெழுந்தருளினால் அவனது திருவடிகளிலே தெண்டனிட்டு அதனால் நெற்றிக்கு அலங்காரமாகப் பெறும் திரு வடித்துகளையுடையீர்களாக உங்களைக் காண் பேனோ? என்பதான ஆழ்ந்த கருத்தைப் பேராசிரியர் கூறுப.

## 9. கழல்வளை பூரிப்ப யாங்கண்டு

குளிர்ந்த சோலைகளிலே தேனைப்பருகி 'இது வேணுகானமோ? அல்லது வீணா கானமோ?' என்று ஐயுறுமாறு வண்டுகள் இசைபாடுமிடமான திருவல்லவாழிலே கையுந் திருவாழியுமாகக் காட்சி தாரா நின் றுள்ள பெருமானை அவன்றன்னுடைய திரு வருளாலே யாம்கண்டு கைதொழ நேருமோ? என்றாள் தலைவி. பிரிவாற்றாமையால் கைவளை கழலுமென்றும், கலவியின்பத்தால் மேனி தடித்து வளை பூரிக்குமென்றும் அனு பவமாதலால் 'கழல்வளை பூரிப்ப' எனப்பட் டது. ஆண்டாள் (திருமொழியில்) ''கொப் பூழிலெழு கமலப் பூவழக ரெம்மானார், என் னுடைய கழல்வளையைத் தாமும் கழல் வளையே யாக்கினரே'' என்றாள்; அங்ஙன மல்லாமல் கழல்வளை பூரிக்கப்பெறவேணு மென்கிறாள் இத்தலைவி. பாட்டின் முடிவில் ''சுழலின்மலி சக்கரப் பெருமானது தொல் லருளே'' என்றுள்ளது; இதற்கு எங்கே அந்வயமென்று ஐயமெழக்கூடும்; 'அருளே' என்பதற்கு அருளினாலென்று பொருளாத லால் 'அப்பெருமானருளாலே கழல்வளை பூரிப்ப யாங்கண்டு கைதொழக்கூடுங் கொலோ' என்றதாகக் கொள்க. அன்றி, அருள் என்பதை எழுவாயாக வைத்து உரைத்தலும் சிறக்கும்; பெருமானருளானது யாம் அவனைக் கைதொழும்படியாகக் கூடுங் கொலோ—வாய்க்குங்கொலோ? என்றவாறு.

## 10. தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங்கொல் தோழிமீர்காள்!

திருவல்லவாழ்ப்பதியை ''தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்ற திருநக ரம்'' என்கிறாரிப்பாட்டில். மண்ணவரும் விண்ணவரும் எம்பெருமானது இயற்கைத் திருவருளைக் கொண்டாடும்படியான தலமாம் திருவல்லவாழ். இதன் கருத்தைச் சிறிது விவரிப்போம். பரம் வியூஹம் விபவம் அந் தர்யாமி அர்ச்சாவதாரம் என்பன ஐந்து நிலைகள் எம்பெருமானுக்கு. வைகுந்த விண் ணாட்டிருக்கு மிருப்பு பரம் (அல்லது பரத்து வம்) எனப்படும். திருப்பாற்கடல் கிடை

வியூஹமெனப்படும். இராமகிருஷ்ணாதி அவதாரங்கள் விபவமெனப்படும். உள்ளே ஒருவர்க்கும் புலப்படாமல் கரந்துறைதல் அந்தர்யாமி யெனப்படும். ஆலயங்களிலும் கிருஹங்களிலும் அர்ச்சனை செய்வதற்குரிய திருமேனியைக்கொண்டு யாவரும் தொழலாம்படி காட்சி தருதல் அர்ச்சாவதாரமெனப்படும். ஆக இவற்றுள் முந்திய நான்கு நிலைகளும் நமக்குப் பயன்படாதனவாக, திருப்பதிகளில் கோயில்கொண்டிக்குமிருப்பு ஒன்றே பயன்படுவதாயிருத்தலால் இதையிட்டுக் கொண்டாடுகின்றனரென்க. இக் கொண்டாட்டம் மண்ணவர்க்கு உரித்தாகுமேயல்லது விண்ணவர்க்கும் உரித்தாகுமோ? எனின்; விண்ணவர்கள் பரமபதநாதனிடத்துக் காணப்பெறாத திருக்குணங்கள் பலவற்றை இங்கே காணப்பெறுதலால் அவர்களும் கொண்டாடத் தட்டில்லையென்க. இவ்விசேஷம் திருவல்லவாழ்பதிக்கு மட்டுமல்ல; எல்லாப்பதிகளுக்கும் பொதுவானதென்று கொள்க.

**நல்லருளாயிரவர் நலனேந்தும்**

எம்பெருமானைக் காட்டிலும் அருள் மிக்கவரான ஆயிரமந்தணாளர்கள் மங்களாசாசனம் பண்ணிக்கொண்டு வாழுமிடமென்கை. இத்தகைய திருவல்லவாழிலே நல்ல அருளையுடையனாய் நமக்குத் தலைவனாயிருக்குமவனுடைய திருநாமங்களையாவது, தோழிகாள்! அவன்றன்னுடைய கருணையாகிற ஸுக்ருதவிசேஷத்தினால் நாம் சொல்லி வாழக்கூடுமோ வென்று இப்பதிகம் தலைக்கலைக்கட்டிற்றாயிற்று.

*[இனி திருமங்கையாழ்வாரனுபவம்.]*

திருவல்லவாழென்னுமித்திருப்பதிக்கு நம்மாழ்வார் போலவே திருமங்கையாழ்வாரும் பதிகம் பாடியுள்ளாரென்று கூறினோம். அப்பதிகத்தையுங் கொண்டு சிறிதனுபவிப்போமினி.

இவ்வாழ்வார் பெரிய திருமொழி ஒன்பதாம்பத்தில் ஐந்தாவது, ஆறாவதான இரண்டு பதிகங்களினால் திருக்குறுங்குடிப் பதியை அனுபவித்த பிறகு ஏழாவது பதிகமொன்றினால் திருவல்லவாழ்த் திருப்பதியை அற்புதமாகப் பாடியுள்ளார். இதற்கு முற்பட்ட பதிகத்தில் "வல்லிச்சிறு நுண்ணிடையாரிடை நீர்வைக்கின்ற அல்லல் சிந்தைதவிர அடைமின்" என்று விஷயாந்தரப்பற்று அறவேணுமென்று பரோபதேசம் செய்தருளினர். இங்ஙனே பரோபதேசம் பண்ணுகிற நாம் இதிலே நின்ற நிலை என்? என்று தம்மைப்பற்றிச் சிறிது ஆராயத் தொடங்கினர். தமக்கு இன்னமும் ஸம்ஸாரவாஸனை கழிந்ததில்லையென்று தோன்றிற்று. 'இழவுக்கு அடியான சரீர சம்பந்தம் இன்னமும் தொடர்ச்சியறாதே நின்றது; இனிமையாகத் தோற்றுகின்ற விஷயங்களோ வென்றால் அணுகியிருக்கின்றன; ஐயோ! இப்படுகுழிகளையெல்லாம் எப்படி தப்பப்போகிறோம்' என்று கவலைமிகப் பெற்றார். திருவல்லவாழ்ப்பதியை வாயாலே சொல்லுவதாக நெஞ்சு மருவப்பெற்றால் நன்று-என்று தோன்றிற்று. தோன்றவே "வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே!" என்று தம் திருவுள்ளத்தை நோக்கி ஒருகால் சொன்னாப்போலே ஒன்பதின்கால் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

இப்பதிகத்தின் பாசுரங்கள் இன்சுவையே வடிவெடுத்திருத்தலால் ஒவ்வொரு செய்யுளையும் பூர்த்தியாக வெழுதிப் பொருளுரைத்துக் கருத்துரைத்து அனுபவிப்போமாக.

1. தந்தைதாய் மக்களே சுற்றமென்
றுற்றவர்பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கையை நொந்துநீ
பழியெனக் கருதினையேல்
அந்தமா யாதியா யாதிக்கு
மாதியா யாயனாய
மைந்த னூர்வல்ல வாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே!

மனமே! தகப்பனென்றும் தாயென்றும் பிள்ளைகளென்றும் தாயாதிகளென்றும் மற்றும் உறவு முறையாரென்றும் பற்றிக் கொண்டிருக்கிற ஸம்ஸார பந்தம் வாய்ந்த வாழ்வை நீவெறுத்து இவ்வாழ்வு அவத்தமென்று நினைப்பாயாகில், பிரளயத்தில் லயத்திற்கு இருப்பிடமாயும் பிறகு உற்பத்தி கர்த்தாவாயும் காரணவஸ்தையிலுள்ள சேதனாசேதனப் பொருள்களுக்கும் நிர்வாஹகனாயும் கோபாலகிருஷ்ணனாக அவதரித்தவனாயுமுள்ள பெருமானுடைய திருவல்லவாழென்னுந் திருப்பதியை வாயாற் சொல்லுவதில்

வல்லமையுடையையாய்ப் பொருந்து-என்ற வாறு

நெஞ்சமே!, "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய் தந்தையு மவரேயினி யாவாரே" என்கிறபடியே நமக்கு எல்லாவுறவு முறையும் திருமகள் கொழுநனேயென்று உறுதிகொண்டிருக்க ப்ராப்தமாயிருக்க, அதற்கு மாறாக "அன்னையத்தனென் புத்திரபூமி வாசவார் குழலாளென்று மயங்கி" என்னுமா போலே ஆபாச பந்துக்களிடத்தில் பற்றுவைத்து இன்னமும் ஸம்ஸார பந்தத்திற்கே ஆட்பட்டிருக்கும் வாழ்வு போதும் போதுமென்று வெறுத்து, எம்பெருமானுக்கே உரித்தான ஆத்மஸ்வ ரூபத்திற்கு ஒரு அவத்யமும் விளையாதே நோக்கிக்கொள்ள வேண்டில் திருவல்லவாழ்ப் பதியை வாயாற் சொல்லவாகிலும் இசைந்திடுவாயாக-என்றாராயிற்று.

"பந்தமார் வாழ்க்கையைப் பழியெனக் கருதினேயேல்-வல்லவாழ் சொல்லுமா மருவு" ஸம்ஸார வாழ்க்கையில் பற்றுள்ளவர்கள் பகவத் விஷயத்தைப் பற்றுவதானது 'செருப்புவைத்துத் திருவடி தொழுவதை யொக்கும்' ஆதலால் ஸம்ஸார வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகவேணும்; அஃது உண்டானல் பகவத் விஷயத்தைப் பற்றப்பார் என்கிறது—என்றருளிச் செய்வர்கள் பேராசிரியர்கள். இங்கு "செருப்புவைத்துத் திருவடி தொழுவதை யொக்கும்" என்றதன் கருத்து யாதெனில்;—காலிலே செருப்பு அணிந்துகொண்டு நடந்து சென்று கொண்டிருந்தவொருவன் தேவாலயம் எதிர்படக் கண்டு உள்ளே புக்குப்பெருமானைத் தொழ விரும்பினன்; செருப்புடன் கோயிலுக்குள்ளே புகவொண்ணமையாலே அதனைக் கோபுரவாசலில் விட்டிட்டுப் பெருமாளருகிற் சென்றான்; இவனுடைய நினைவெல்லாம் செருப்பிலேயேயிருந்தது; அதை யாரேனும் கொள்ளை கொள்வரோ! என்கிற கவலையே இவனது நெஞ்சை ஆக்கிரமித்துக்கிடந்ததனல் அங்கு அர்ச்சகரை நோக்கித் "தீர்த்தம் சடாரிஸாதிக்க" என்று கேட்கவெண்ணி 'ஸ்வாமிந்! செருப்பு ஸாதிக்க' என்றானும். இதனல் எந்த வஸ்துவில் நினைவு உறைத்திருக்கிறதோ அந்த வஸ்துவில் பற்று அறாதென்பது விளங்கிற்றாகும். ஸம்ஸார வாழ்க்கையில் வெறுப்பு உண்டாயிற்றில்லையாகில், இன்னமும் அந்த வன்சேற்றிலேயே அழுந்திக்கிட; திருவல்லவாழ்ப் பதியின் அருகும் வரவேண்டா - என்றதாயிற்று............(1)

2. மின்னுமா வல்லியு வஞ்சியும் வென்ற
நுண்ணிடை நுடங்கும்
அன்ன மென்ன டையினர் கலவியை
அருவருத் தஞ்சினேயேல்
துன்னுமா மணிமுடிப் பஞ்சவர்க்காகி
முன் தூது சென்ற
மன்னனூர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே.

நெஞ்சே!, மின்னலையும் அழகிய கொடியையும் வஞ்சிக்கொம்பையும் தோற்பிக்கும்படி நுட்பமான இடையையுடையராய், அன்னம் போலே மெதுவாக நடப்பவரான மாதர்களுடனே கலந்து வாழ்வது மிகவும் பொல்லாதென்றும் அது நமது ஸ்வரூபத்திற்குத் தகாதென்றும் வெறுப்புக்கொண்டு உய்யும் வழி தேடுவாயாகில், அடியார்கட்குக் கையாளாயிருக்குந் தன்மையைக் குன்றிலிட்ட விளக்குப்போலாக்கப் பண்டு பஞ்சபாண்டவர்கட்குத் தூது சென்ற தேவாதிதேவன் வாழுமிடமான திருவல்ல வாழ்ப்பதியிலே பொருந்தப்பார் என்பதாயிற்று.

"துன்னுமாமணி முடிப் பஞ்சவர்க்கு"

கண்ணபிரான் துரியோதனுதியர் பக்கல் தூது செல்லுங்காலத்தில் பாண்டவர்கள் முடியிழந்து கிடந்தவர்களாதலால் "துன்னுமாமணி முடிப் பஞ்சவர்க்காகி முன் தூது சென்ற" என்று எங்ஙனே சொல்லலாமெனின்; தூது செல்லுங்காலத்தில் அவர்கள் முடியிழந்து கிடந்தது உண்மையேயாயினும்; முடிபுனைந்து அரசாட்சிபுரிய உரியார் அவர்களே யென்னுங் கருத்தினுல் இங்ஙனம் சொல்லிற்றென்க.

(தொடரும்.)

நாமல்:—தாமோதரப்பெருமாள் கோயிலில் பெருமாள், உபயநாச்சிமார்கள், திருமாலழகித்தாயார், ஆக 4 உற்சவமூர்த்திகள் 26-4-61ல் பிரதிஷ்டை செய்யப்பட்டன. 28-4-61ல் சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. தொடர்ந்து 40 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

# சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

முதற் சூத்திரம்;—இரண்டாம் அதிகரணம்:

(1) உலகம் காரண காரிய நியதிக்கு உட்பட்டு முத்தொழிற்படுதலின், அஃது உள் பொருளே ஆகும்; அதனைக் கயிற்றில் அரவு போலவும், கானலின் நீர்போலவும் வெறுந் தோற்ற மாத்திரையாகிய பொய்ப்பொருள் என்றல் அடாது. (2) அஃது உரு நிலையில் உடம்பு, கரணம், நிலம், நுகர்ச்சிப் பொருள் எனப் புலப்பட்டுப் பயன்படு நிலையில் காரியம் (ஆக்கப்பட்டது) எனப்படும்; அதன் முதற்காரணம் மாயை ஆகும். (3) மாயையாவது அருவாய், வியாபகமாய், அறிவில்லதாய், ஓரே பொருளாய், பல்வேறு காரியங்களாக உருவுதிரிந்தும் திரியாதும் புலப்பட வல்லதாய் உள்ள ஆற்றல்களின் கூட்டமே (Procreatrix in the form of an all pervading insentient potential) ஆகும். (4) இத்தகைய மாயையைத் தன் நினைவாற்றலால் தொழிற்படுத்தி, அதினின்று இவ்வுலகைத் தோற்றுவிக்கும் பேரறிவும் பேராற்றலும் உள்ள முழு முதற்பொருளே உலக நிமித்தகாரணன் எனப்படும் கடவுள். (5) அம் முதற்பொருளின் வல்லமை எனப்படும் அறிவாற்றலே (சிற்சத்தி) துணைக்காரணம்; அச்சிற்சத்தியால் தொழிற்படும் உயிர்களின் இருவினை அதன் வழித்தாகிய துணைக் காரணம்—என்னும் இம்முடிபுகள் முன் இதழில் அளவைகளாலும் பொருந்து மாற்றாலும் ஆராய்ந்து துணியப்பட்டன.

இங்கே நிரூபிக்கப்பட்ட முழுமுதலையே உபநிடதங்கள் ஏகம், சத், பிரமம், உருத்திரன், சிவன், மகேசன், ஈசானன் என்னும் பெயர்களால் சிறப்பித்துக் கூறுகின்றன என்பதும் மேலே ஒருவாறு காட்டப்பட்டது.

இதனால் முதல்வன் உலகத்திற்கு நிமித்த காரணனாக உளன் என்பது போதரும். அவன் உலகிற்கு முதற்காரணம் (உபாதான காரணன்) என்றோ, உலகமாகப் பரிணமிக்கின்றான் என்றோ கூறப்படவில்லை என்பது கடைப்பிடிக்கத் தக்கது. ஆனால் வியாச சூத்திரமும் அதனைப் பிரமாணமாகக்கொண்டு மதங்கள் நிறுவிய சங்கரர், இராமாநுசர் முதலாயினோரும் முதல்வனை உலகிற்கு முதற்காரணம் எனவும், அவன் உலகமாகப் பரிணமிக்கின்றான் எனவும் கூறுதலைக் காண்கின்றோம். இதுபற்றி மெய் கண்ட தேவர் பகுத்துணர்ந்து கூறும் துணிபு மிகவும் கவர்ச்சியும் சுவையும் உண்மையும் உடையது. அதனைக் காண்போம்:—

**இங்குப் பிறர்கூறும் பக்கம்**

(i) உலகம் மாசங்காரக் கடவுளினின்றும் தோன்றும் என்பதே "ஒடுங்கி உளதாம்" என்னும் சூத்திரப்பகுதியின் பொருள். காரியம் தோன்றுதற்கும் மீள ஒடுங்குதற்கும் மூலமாக உள்ள பொருளே முதற்காரணம் ஆகும். ஆதலின், நீவிரும் முதல்வனை முதற் காரணம் எனக்கொள்ள வேண்டும்.

(2) முதல்வன் உலகத்திற்கு முதற் காரணமும் ஆவன் என்பதைப் பின்வரும் சுருதிகள் நேரே உணர்த்துகின்றன:—

(அ) முண்டக உபநிடதத்தின் முதல் முண்டக முதல் கண்டத்தின் ஆறும் மந்திரம் "காணப்படாததும், பற்றப்படாததும்...... அழிவில்லதும், உயிர்களின் பிறப்பிடமும் (பூதயோனிம்) ஆயமுதற் பொருளைத் தீரர்கள் காண்கின்றார்கள்" எனப்படிக்கின்றது.

இதில் பூதயோனி என்ற தொடர் முதல்வன் உலக முதற்காரணம் என்பதைக் காட்டும்

(ஆ) அவர் விரும்பினார், "உலகைஉண்டாக்குதற் பொருட்டுப் பலவாக ஆவேன் ஆக" என. அதனால் அவர் தவத்தில் அழுந்தினார் (ஞானசத்தியால் உலக முதற்காரணத்தை நோக்கினார்); அத்தவ ஆற்றலால்

(கிரியாசத்தி சங்கற்பத்தால்), என்னென்ன உளவோ, இவ்வனைத்தையும் படைத்தார். படைத்து, படைத்த பொருள்கள் அனைத்தினும் நுழைந்தார் (இடங்கொண்டார், அதிட்டித்தார்). நுழைந்து, சத்தும்தியத்தும் (நித்தப் பொருளாகிய உயிர்களும் அநித்தப்பொருள்களாகிய பாசக்கூட்டமும்) ஆயினர். தைத்திரீயம், 3,6.

(இ) முதற்கண் இஃது அசத்தாக (கலங்கிய அருநிலையில், இல்லது எனும்படி) இருந்தது; அதிலிருந்தே சத்து (துலங்கிய உரு நிலையாகிய காரிய நிலை) தோன்றிற்று. அவர் தம்மைத் தாமே செய்தார் (தத் ஆத்மாநம் ஸ்வயம் அகுருத) ஷெ 3,7.

இத்தகைய தொடர்கள் சாந்தோக்கியத்தினும், சுவேதாசுவதரத்தினும் உள்ளன.

பிரம சூத்திரம் முதல் அத்தியாயம் நான்காம் பாதத்திறுதியில் 23 ஆம் சூத்திரம் முதலாக சூத்திரங்கள் இத்தொடர்களை விடயமாகக்கொண்டு, இவற்றின் பொருள் நிச்சயம் உணர்த்த எழுந்தவை எனக் கொள்ளப்படுகின்றன. விரிவு அஞ்சி, எடுத்துக்காட்டாக அவற்றுள் ஒன்றுமட்டும் இங்கே தந்துரைக்கப்படும்:—

"பரிணமத்தால் தன்னைத்தானே செய்ததாகலின்" (பிரமம் உலக முதற்காரணமாம்) ஆத்மக்ருதே: பரிணமாத்—என்பது ஷெ நான்காம் பாதத்து 26 ஆம் சூத்திரம்

இது, மேலே (இ) பிரிவில் 'தத் ஆத்மாநம் ஸ்வயம் அகுருத' (அவர் தம்மைத்தாமே செய்தார்) எனவும், (ஆ) பிரிவில் 'தத் அநுப்ரவிச்யஸச்யஸச்சத்யச் சாபவத்' (நுழைந்து, சத்தும் தியத்தும் ஆயினர்) எனவும் எடுத்துக்காட்டியதைத்திரீயத் தொடர்களை ஆதாரமாகக்கொண்டதென்பது வெளிப்படை.

இவற்றைக்கொண்டு, சங்கரர், இராமாநுசர், நீலகண்டர் என்னும் பாடியகாரர்கள் வியாசர் கருத்தை உடன்பட்டு, முதற்பொருள் உலகத்திற்கு முதற்காரணம்தான் எனவும், அஃது உலகமாகப் பரிணமித்தது (உருவுதிரிந்தது) எனவும் கொண்டனர். ஆயினும் "முதல்வன் நிருவிகாரி" என்னும் உபநிடத வசனங்களோடு முரணுமைப் பொருட்டு, (1) சங்கரர் முதல்வனது பரிணமம் கயிறு அரவாய்த் தோன்றுதல் போல வெறுந்தோற்ற மாத்திரையே என அமைத்துக் கொள்வர்; (2) இராமாநுசர் முதல்வன் உலகமாகப் பரிணமித்து விகாரப்படுதல் அவன்றன் விளையாட்டு; ஆதலால் அவனுக்கு இழுக்கு இல்லை என அமைத்துக் கொள்வர்; (3) நீலகண்ட ஆசிரியர் 'மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனாய் நின்று முதல்வனும் முதற்காரணம்' என மொழிந்து, முதல்வன் மாயைக்குத் தாரகமாய் விரவி நின்று, அதனை இடமாகக் கோடலால் அது பற்றி அவன்கண் ஆபூர்வ பரிணமம் (புலப்படாத உருவுதிரிவு) உண்டெனவும், அவனும் முதற்காரணம் ஆம் எனவும் கொள்ளுதலே முடிபு எனவும் துணிவர். இவற்றால், முதல்வனை உலகமுதற் காரணம் என்பதில் இடர்ப்பாடு உள்ளது என்பது தெளிவு.

**இனிச் சித்தாந்த சைவர்கள் கூறுமாறு:—**

முதல்வனை முதற்காரணம் எனின், அவன் தன் இயல்பில் மாறி விகாரப்படுவன் எனக் கொள்ளவேண்டும். இங்ஙனம் கோடல் அவன் நிருவிகாரி, செம்பொருள், சத்து என்று எழுந்த உரைகளோடு முரணும். மேலும், முதற்காரணத்தின் குணங்களோடு ஒத்த குணங்களே காரியத்திலும் உளவாகும் என்னும் நியமத்தின்படி, பிரமம் சித்தாகலின் (அறிவுடைத்தாகலின்), அதன் பரிணமம் எனப்படும் உலகும் சித்தாகவே இருத்தல் வேண்டுமன்றிச் சடமாதல் (அறிவில்லதாதல்) பொருந்தாது. உலகம் என்பது கயிற்றின்கண் அரவுபோல வெறுந்தோற்ற மாத்திரையே என்னும் சங்கரர் கொள்கை வெறும் சொற்சாலமாய் முடிவதன்றி உண்மை ஆராய்ச்சிக்குச் சிறிதும் பயன்படுவது அன்று.

வியாச சூத்திரங்களிலிருந்து வியாசருடைய துணிபையோ உபநிடதங்களின் பொருள் நிச்சயத்தையோ ஒருவர் தெளிதல் அரிது. சூத்திரங்கள் முற்றுத்தொடர்களாக அமையாது துணுக்குக்களாக இருத்தலின், அவற்றுக்கு யாரும் எந்த முடிபையும் பொருளாக ஏற்றிமொழிந்து சாதிக்கலாம். எடுத்துக்காட்டாக, இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பகுதியிலே ஒரு சூத்திரம் உண்டு; அது,

ஸாக்ஷாச் சோபயாம் நாநாத் (1, 4, 25) என்பது இதன் பொருள்; "நேரே இரண்டையும் கூறுதலானும்" என்பது. கூறுவது யார்? இரண்டென்பவை யாவை? அதனால் துணியத் தகும் முடிபு யாது?—என்ற வினாக்களுக்கு உரையாசிரியர்கள் பொருத்தமான விடைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இது குறுக்கெழுத்து மயக்கு (Cross word puzzle)ப் போல முடிவதைக் காணலாம். இக்காரணம்பற்றியே பிரம சூத்திரத்திற்குப் பல மாறுபட்ட பேருரைகள் தோன்றியுள்ளன.

இனி பரிணாமத் (உருவுதிரிதலால்) என்னும் சொல் வியாச சூத்திரத்துக் காணப்பட்டபோதிலும், உபநிடதங்களில் அச்சொல் யாண்டும் காணப்படவில்லை. மேலே தைத்திரீயத்தினின்றும் காட்டிய "ஸச்சத்யச்சாபவத்" (சத்தும் தியத்தும் ஆயினார்) என்னும் தொடரில் வரும் அபவத் என்னும் சொல்லை ஆதாரமாகக்கொண்டே பரிணாமத் என்ற சொல் கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டியுள்ளது. ஆயினும் "அபவத்" என்பது "இருநிலனாய்த் தீயாகி" என்றாற்போன்ற இடங்களில் வரும் ஆதல் என்னும் சொற்கு உள்ள ஒற்றுமைப்பட்டு நிற்றல் என்னும் பொருளையே தருவது. இவ்வொற்றுமை கயிறு பாம்பாயிற்று என்ற இடத்திற்போல ஏற்றி உணர்தலையோ (ஆரோபம், Superim position), மண்குடமாயிற்று என்ற இடத்திற்போல ஒன்று திரிந்து ஒன்று ஆதலாகிய பரிணாமத்தையோ உணர்த்துவதன்று. காணும் கண்ணுக்கு உயிர் காட்டுங்கால், உயிர் கண்ணுக்கு வேறே யாயினும், கண்ணே எனும்படி ஒற்றுமைப்பட நிற்கும் பிரிப்பின்மையை உணர்த்துவது. இப்பிரிப்பின்மையாகிய சம்பந்தம் உணர்த்த எழுந்த சொல்லே அத்வைதம் என்பதாகும்: (இதன் விளக்கம் இரண்டாம் சூத்திரம் உரைப்புழி விரிவாகத்தரப்படும்.)

இன்னும் உபநிடதங்களுள் ஓரிடத்தும் பிரமத்தை முதற்காரணம் என் எடுத்தோதவில்லை. அதற்கு மாறாகச் சுவேதாசுவதரத்தில் "மாயையைப் பிரகிருதி (முதற்காரணம்) என்றறிக; மாயையை உடையவனை மகேசுரன் (என்றறிக) எனப்பகுத்தோதுதலின், பிரமம் முதற்காரணம் என்பார்க்கு இவ்வுரை முரணும். ஆகலின் மாயையே முதற்காரணமாவதன்றிப் பிரமம் முதற்காரணம் ஆகாதென்பதே தெளிவாம்.

இனி மாயையும் முதல்வனும் கூடி முதற்காரணமாம் எனினும், நிமித்தகாரணனாகிய முதல்வன் மாயையால் விசேடிக்கப்பட்டு விசிட்டனாய் நின்று முதற்காரணன் ஆவன் எனினும், மாயைபோல முதல்வனும் விகாரப்படுதல் உண்மையான முதல்வன் நிருவிகாரி என்னும் உரைகளோடு முரணும்.

நிமித்தகாரணமே முதற்காரணம் என எடுத்துக் காட்டுதற்கு ஓர் பொருள் இன்மையின், அனுமானத்தான் எய்துவித்தலும் கூடாது. சிலம்பி நூலுக்கு முதற்காரணம் சிலம்பியின் உடலும், நிமித்தகாரணம் அதன் உயிரும் எனப்பகுத்துணர்ந்து கொள்ளப்படும். (இன்னும் இவ்வாராய்ச்சியில்வரும் தடை விடைகளின் விரிவைத் திராவிடமாபாடியத்துக் கண்டுகொள்க.)—எனப் பிரமமுதற்காரணவாதம் மறுக்கப்படும்.

இங்ஙனம் பிரமமுதற்காரண வாதத்தை மறுக்கும்போது, பின்வருமாறு தடை எழும்: மேற்கூறிய அனைத்தும் பொருந்தும்; ஆயினும், 'விழுங்கு உயிர் உமிழ்ந்தனை' எனத் திருஞானசம்பந்தரும், "உயிர்களின் பிறப்பிடம் (பூதயோநி)" என முண்டகமும், "இவ்வுயிர்கள் எங்கிருந்து பிறந்தனவோ, பிறந்த பின் எதனால் வாழ்கின்றனவோ, எங்கே மீளவும் சென்று ஒடுங்குகின்றனவோ' அதனை அறிய முயலுதி! அது பிரமம்,' எனத் தைத்திரீயத்திலும் ஓதுதலின், உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் முதற்பொருளே நேர்க்காரணம் என்பது தெளியப்படும். "ஒடுங்கி உளதாம்" என்னும் சூத்திரப் பகுதியும் இப்பொருளையே தருவதாக உள்ளது—எனின், இதற்கு விடை கூறுமுகத்தான் மெய்கண்டதேவரால் அருளிச்செய்யப் பெற்றதே பின்வரும் உதாரணச் செய்யுள். அது வருமாறு:—

வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால்—வித்
தகமாம்;
வேட்டுவன்ஆம் அப்புழுப்போல் வேண்டுரு
வைத் தான்கொடுத்துக்
கூட்டனே? மண்போற் குளிர்ந்து

இதன்பொருள்:—முளை காரியம்: வித்து அதன் முதற்காரணம். வித்திற்கு ஆதாரம் நிலம். உலகம் காரியம்; மாயை அதன் முதற்காரணம். மாயைக்கு ஆதாரம் முதல்வன்.

நிலம் குளிர்ந்தபோது, வித்து அதன்கண் உளதாக, அவ்வித்தினின்றும் முளை தோன்றுமாறுபோல, முதல்வனது சிற்சத்தி சங்கற்பித்தபோது, அச்சத்தியை ஆதாரமாகக்கொண்டுள்ள மாயையினின்றும் உலகம் தோன்றும்.

நிலத்தின்கண் வித்து இல்லாதபோதும், வித்து இருந்தும் நிலங்குளிராதபோதும் முளைதோன்றுதல் இல்லை. அதுபோல, மாயையின்றியும் உலகம் தோன்றாது: மாயையிருந்தும் முதல்வன்றன் சத்திசங்கற்பம் நிகழாவிடினும் உலகம் தோன்றாது. இங்ஙனம் முதல்வன் மாயைக்கு ஆதாரமாய், அதனோடு பிரிப்பின்றி ஒற்றுமைப்பட்டு நின்று உலகைத் தோற்றுவிப்பன் என்னும் கருத்தில்தான் மாயையின் தொழிலை முதல்வன்மேல் ஏற்றி 'விழுங்குயிர் உமிழ்ந்தனை' எனத்திருஞானசம்பந்தரும், மேற்காட்டியவாறெல்லாம் உபநிடத முனிவர்களும் மொழிவார் ஆயினர்.

"உண்டாதற்குப் பலவாக ஆவேன் ஆக" என அவர் இச்சித்தார் (தத்ஐக்ஷத) எனச் சாந்தோக்கியத்தினும், அவர் மிகவிரும்பினர் (ஸ: அகாமயத) எனத் தைத்திரீயத்தினும் கூறப்பட்ட முதல்வனது இச்சையையே (சத்தி சங்கற்பத்தையே) இச்செய்யுளில் மண் குளிர்ந்து என உவமைக்கு ஓதிய வினையால் பெறவைத்தார் ஆசிரியர். (உவமையின் வினைபொருளும் பொருளடை உவமைக்கும் சென்றியையும்.)

இனி, ஒருபடித்தாக அன்றிப் பறவை, பசு, நரர் எனவும், செல்வர் வறியர் எனவும் இவ்வாறு பலவாக உலகைப் படைத்தல் முதல்வனது நடுவு நிலைமைக்கும் பேரருளுக்கும் இழுக்காம் என்பாரை நோக்கி, உயிர்களுடைய வினையாகிய துணைக்காரண வேறுபாட்டால் அங்ஙனம் படைத்தானாகலின், அஃது அவனுக்கு இழுக்கு அன்று என்பார் "அவர் வினையால் வித்தகமாம்" (மாயை உயிர்களின் வினைக்கு ஏற்றபடி பல்வேறு வகைப்படத் தன் காரியங்களைத் தோற்றுவிக்கும் சதுர்ப்பாடு உடைத்தாம்) என்றார்.

இனி, இங்ஙனம் அவரவர் வினையன் பலவேறு வகைப்படத் தோற்றுவிப்பன் எல்புழி, தொழிலிற்றன்வயம் உடைய பொருளே வினைமுதல் எனப்படும் ஆகலின், தன்வயத்தான் அன்றி வினைவயத்தான் உலகைத் தோற்றுவிப்பான் இறைவன் ஆவனோ எனத் தடை நிகழும். அத்தடை நீக்குதற்கே வெண்பாவின் பின் இரண்டடிகள் எழுந்தன.

வேட்டைவாளிக் குளவியின் குட்டி, முதற்கண் அதன் முட்டையினின்று வெளிப்படும்போது, மெல்லிய சிறு புழு வடிவாக இருக்கும். பின் அதன் உடற்கூறுகள் பல வகை மாறுதல்களைப் படிமுறையால் அடைந்து, இறுதியில் தன் தாயைப்போல் சிறகும், நிறமும், உருவும், செயலும், ஆற்றலும் பெறும். இங்ஙனம் தன் 'குட்டி' படிமுறையால் தன்னைப்போல் நிறைநிலை எய்தும்வரை அதற்கு அவ்வப்போது வேண்டிய இடம், சூழ்நிலை, நுகர்ச்சிப்பொருள் என்றின்னவற்றைத் தாய்க்குளவி உண்டு பண்ணி உபகரிக்கும். இதுபோல, முதல்வனும் தானந்தன்மை (சிவமாந்தன்மை) நிறைதற்கு உரிய உயிர்களுக்கு, அவை படிமுறையால் ஆன்மவளர்ச்சி எய்துதற்கு உரியன ஆகலின், அந்நெறிமுறைக்கு ஏற்றபடி வேறு வேறு உடம்புகளைக் கொடுத்து நுகர்ச்சிகளையும் கூட்டுவன் என்பதே அவர் வினையால் என்றதன் நுண்ணிய கருத்தாதலின், அது பற்றி முதல்வனது தன்வயம் உடைமைக்கு இழுக்கு இல்லை என்பது அவ்வடிகளின் பொருள்.

குளவி புழுவைக் கொட்டும் என்றும், அதனால் அது குளவியின் உருவை உளங்கொண்டு நினைத்து அவ்வுருவைப்பெறும் என்றும், இது பிரமகீட நியாயம் (வண்டு புழு உவமை) எனப்படும் என்றும், இதுவே இங்குக் குறிக்கப்பட்டதென்றும் கொண்டு இடர்ப்படுவாரும் உளர். குளவியின் முட்டையினின்றும் வெளிப்படும் புழுவே குளவியாகும். குளவியால் எடுத்துச்செல்லப்படும் புழுக்கள் கொட்டப்பட்டு இறந்து குளவியின் குட்டிக்கு உணவாகும்—என அறிவியல் துறையினர் கண்டு துணிகின்றனர். பொருள்களை உற்று நோக்கர்து தம் கருத்துக்குத் தோன்றியதொன்றைப் பெரிய

உண்மை என எடுத்தோதித் தாமும் மயங்கிப் பிறரையும் மயக்கும் குறைவு ஒரு சிலரிடம் காணப்படினும், அது சித்தாந்தம் வெளிப் படுத்தருளிய திருஞானசம்பந்தர், மெய்கண்ட தேவர் போன்ற அருளாசிரியர்கள்பால் ஒரு காலும் காணப்பட்டிலது என்பது கருதத்தக் கது.

வேட்டுவனுக்கு ஆதற்கு உரிய தன் குட்டி யாகிய அப்புழுவிற்குப் (அது செய்யுமாறு) போல, (தான் ஆதற்கு உரிய உயிர்களுக்கு) அவற்றின் பக்குவ முதிர்ச்சிக்கு வேண்டப் படும் உருக்களைக் கொடுத்து, அதற்கு ஏற்ற நுகர்ச்சி சூழ்நிலைகளை (புவன போகங்களை) கூட்டமாட்டானோ? (இங்ஙனம் முறை செய்து காப்பாற்றுதலே அவர் வினையால் என் றதன் தாற்பரியம் ஆதலின் அதுபற்றி முதல் வனது இறைமைக்கு இழுக்காவது என்னை?) —என்பது பொழிப்புரை.

(தாரகமாம்) மண்குளிந்து (குளிர்ந்த வழி), (அதன் கண்) வித்து உண்டா(க), (அம்) மூலம் முளைத்தவா (போல), (மாயை) தாரகமாம் அத்தன்தாள் நிற்றலால், (அச்சத் திசங்கற்பித்த வழி), அவர் வினையால் வித் தகமாம்—என்பது பாட்டின் உரை நடை.

வித்து உண்டாக எனச் சற்காரிய வாதத்தை வலியுறுத்துதலினால், வித்தில் வழி நிலத்தினின்றும் முளைதோன்றுதவாறுபோல, மாயையில் வழிப் பிரமத்தினின்றும் உலகம் தோன்றுது எனப் பரிணமவாதத்தையும், மாயை அநிர்வசனம் (உண்டென்றோ இன் றென்றோ உள்ளதும் இல்லதும் என்றோ உறுதியாகக் கூறப்படாதது) என்னும் மாயா வாதத்தையும் மறுத்தது ஆதல் காண்க. மேலும், வித்தும் அதன் ஆதாரமாகிய நிலனும் போல் என்றதனுல், மாயை முதல்வனின் வேறு பொருளன்று என்னும் பாஞ்சராத்திர மதமும், அது முதல்வனது சத்தியின் வேறன்று என்னும் சிவாத்துவித சைவத்தை மறுத்தது ஆதல் காண்க.

மாயையினின்றும் தோன்றும் உல கத்தை மாயைக்கு இடமும் ஆதாரமும் ஆதல் பற்றி முதல்வனினின்று தோன்றிற்று என்று உபநிடதங்கள் உரைத்தலின், அக்கருத் தறிந்து அவற்றின் பொருள் நிச்சயம் செய் யப்படும் என்பதே இப்பாட்டின் முதன்மை யான பொருள்; பிற இரண்டும் துணை பொருள்கள்.

இடத்து நிகழ்பொருளின்கண் படுவ தனை இடத்தின்மேல் ஏற்றி மொழிதல் உப நிடத வழக்காதலோடு உலக வழக்கும் ஆம் என்பதைப் பங்கஜம், பங்கஜாதம் முதலாகத் தாமரைக்கு வழங்கும் பெயர்களாலும் பிற வாற்றாலும் உணரலாகும். தாமரை அதற்கு உரிய கிழங்கினின்றும் தோன்றுவது; ஆனால் மேற்கூறிய பெயர்கள் (கிழங்குக்கு ஆதார மாகிய) சேற்றினின்றும் தோன்றியது என் னும் பொருளைத் தருவன ஆம். பங்கம்— சேறு; ஜம், ஜாதம்—தோன்றியது.

முதல்வன் உலகு உயிர்களுக்குத் தாரக மாய் (ஆதாரமாய்) உளன் என்னும் கருத் தைத் திருவள்ளுவனாரும் சார்புணர்ந்து என் னும் பாட்டில் சார்பு என முதல்வனுக்கு வழங்கிய பெயரால் குறிப்பித்துள்ளார் என் பது அறியத்தக்கது.

இனி, முன் இதழிற் கூறியபடி உல கத்திலுள்ள குயவன் முதலிய வினை முதல் வனை எடுத்துக்காட்டி, அவ்வுவமையால் கருதியுணரப்படும் முதல்வனும் அவரைப் போன்று அறியாமையாற் கட்டுண்டு, சிற் றறிவினனாய் வினைவயத்தனாய்த் தொழி லியற்றுங்கால் விகார மெய்தித் துடக்கு றுமோ என்னும் ஐயத்தைப் பின்வருமாறு நீக்கியருளுகின்றார் மெய்கண்டார்:—

ஒரு செயலை "இஃது இவ்வாறு ஆகுக," என்று கருதுதலாகிய சங்கற்ப ஆற்றல் கொண்டு செய்பவரும், அங்ஙனம் செய்ய மாட்டாது உடம்பு முதலியகரணங்களைக் கொண்டு செய்பவரும் என வினை முதல்கள் (கருத்தர்கள்) இருவகைப்படுவர். சங்கற்ப மும் சத்தி சங்கற்பம் மனோ சங்கற்பம் என இருவகைப்படும். சத்தி சங்கற்பத்தால் எல் லாத்தொழிலும் இயற்றவல்லோன் முதல்வன் ஒருவனே. திருமால் முதலிய காரணக் கட வுளரும் யோகசித்தர்களும் மனோ சங்கற்பத் தால் செய்யவல்லவர்கள்; ஏனையர் ஏனைய கரணங்களால் தொழில் செய்வர். மனமும் கரணம் என அடங்கும். கரணத்தால் செய் வோர் அனைவர்க்கும் வேண்டிய உடம்பு, கர ணம், நிலன், நுகர்ச்சிப் பொருள் என்ப

வற்றை முதல்வனே தனது சத்தி சங்கற்பத்தால் படைத்து உபகரிப்பன். கரணத்தாற் செய்வோருக்கே மேற்கூறிய குற்றங்குறைகள் உளவாகும். சத்தி சங்கற்பத்தால் செய்யும் முதல்வனுக்கு அவை பகைப்பொருள் ஆதலால், அவை அவனிடத்திருத்தற்கு ஓரியையும் இல்லை. மெய்ந்நூற் பொருள்களை உய்த்துணர்ந்து உளங்கொள்ளுதற் பொருட்டுக் குயவன் முதலியோர் உவமையாக எடுத்துக் காட்டப்பட்டமையின் அன்னோர் ஒருபுடை யுவமையாவதன்றி முற்றுவமை ஆகார்.

முதல்வன் தனக்கோர் ஆதாரமின்றி எல்லாவற்றுக்கும்தான் சார்பாய் நின்று அவையெல்லாம் தோன்றியும் வளர்ந்தும் தேய்ந்து மறைந்தும் விகாரமுறத்தான் விகாரமின்றி இருத்தல் காலதத்துவம் எல்லாப் பொருள்களும் தன்னைச் சார்ந்து தோன்றி நின்று மறைந்து விகாரமுறவும் தான் விகாரமின்றி இருத்தலை ஒக்கும்.

கற்றுவல்லோன் உள்ளத்தில் அவன் கற்ற சொல்லும் பொருளும் ஒடுங்கி நின்று அவன் விருப்பத்தின் வழி எளிதின் வெளிப்படுவது போலவும் முதல்வன் திருவருளில் ஒடுங்கி உளதாகும் உலகைக் கொள்ளலாம். கற்றோனது உள்ளம் அக்கல்வியிற்றொடக்குண்ணாததுபோல முதல்வனும் தொடக்குண்ணுதல் இல்லை. இது கனவிற் கண்டவற்றை நனவு நிலையில் நினைத்துப்பார்க்கும் ஒருவன் அக்கனவுக் காட்சியில் தொடக்குண்ணாதிருத்தலையும் ஒக்கும்.

இங்ஙனம் முதல்வன் உலகத்தைக் கரணத்தால் ஆக்காது சங்கற்பத்தால் ஆக்கியும், அவ்வாறு காவாது காத்தும் அழியாது அழித்தும் தொடக்குண்ணாதும் விகாரமுறாதும் செம்பொருளாயும் சார்பாயும் நிற்பன் என்று உணர்தல் வேண்டும்.

இக்கருத்தைப் பின்வரும் பாட்டுக்கள் கொண்டுள்ளன:—

"பண்ணுவ(து) எங்கே நின்றிங்(கு)?
என்றிடின் பகரக் கேள்நீ."

—சித்தியார் 1-9.

"சீலமோ உலகம் போலத் தெரிப்பரி(து)
அதனால் நிற்கும்
கோலமும் அறிவா ரில்லை; ஆயினும்
கூறக் கேள்நீ;
ஞாலமே நினையும் தந்து நிறுத்திப்பின்
நாசம் பண்ணும்
காலமே போலக் கொள்நீ நிலைசெயல்
கடவுட் கண்ணே."

—சித்தியார் 1-50.

கற்றநூற் பொருளும் சொல்லும் கருத்தினில்
அடங்கித் தோன்றும்
பெற்றியும் சாக்கி ராதி உயிரினிற்
பிறங்தொ டுக்கம்
உற்றதும் போல எல்லா உலகமும்
உதித்தொ டுங்கப்
பற்றொடு பற்றதின்றி நின்றனன்
பரனும் அன்றே.

—ஷை 1-51.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றுக்காது நின்றுளத்திற் கண்டிறைவன்-ஆக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனில் இற்(று) இன்றுங் கட்டு.

—சிவஞா. போதம், உதாரணச் செய்யுள்.

இறைவன் அன்றே காலத்திற்றுக்காது நின்று, ஆக்காதே கண்டும், நோக்காது நோக்கியும், (நொடியாது) நொடித்தும் கட்டின் றுதற் உளத்தின் (இற்று), கனவுகண்ட கண்ட நனவுணரக் கண்டவனில் இற்று—என உரை நடை செய்துகொள்க.

முதற் சூத்திரம் இரண்டாம் அதிகரணம் முற்றிற்று.

(தொடரும்)

---

சிதம்பரம்:—தில்லையம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 5-ஆம் திருவிழாவில் திரு. என். கிருஷ்ணமூர்த்தி அய்யர், பி.ஏ.பி.எல். அவர்கள் தலைமையில் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்களால் 'தாயின் தனிப்பெருங் கருணை' என்னும் பொருள்பற்றி விளக்கவுரை நடைபெற்றது.

# இரண்டு தாளச்சிற்பங்கள்

இசைப்பேராசிரியர் திரு. பி. சாம்பமூர்த்தி, பி.ஏ., பி.எல்.,

படத்தில் காட்டப்பெற்றிருக்கும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள இரண்டு தாளச் சிற்பங்களும் இசை, சிற்பம் என்ற இருவகையிலும் தனிச்சிறப்புடையவை. அவைகளில் ஒன்று, முப்பத்தைந்து சூளாதி (ஸூளாதி) தாளங்களின் பகுதியாகிய அங்கங்களை எண்ணால் குறிப்பிடுகிறது. மற்றொன்று, சிம்மநந்தன தாளத்தின் அங்கப் பகுதியை எண்ணால் குறிப்பிடுகிறது. சுவாமி கோயிலில் இரண்டாவது வடக்குப்பிரகாரத்திலிருக்கும் நடாராஜர் கனகசபைக்கு முன்னுள்ள தூண்களில் தனித்தனியே இந்த இரண்டு சிற்பங்களும் காணப்படுகின்றன.

35 தாளங்கள், 72 மேளங்கள் இவைகளைப் போலல்லாமல், 108 தாளங்களுக்குத் திட்டம் ஒன்றுமில்லை. அதனால், 108 தாளங்களில் ஏதேனும் ஒன்றின் அங்கத்தைப்பற்றி உடனடியாக நினைவுப் படுத்திச் சொல்லக் கடினமாக இருந்தது. எனினும், 108 தாளங்களின் அங்கங்களை வரிசைமுறையில் நினைவுக் குறிப்பாகவும் சுருக்கமாகவும் கொடுக்கக்கூடிய சுலோகங்கள் இருந்தன. இசைப் பாடல்களில் வரும் எல்லா முக்கிய தாளங்களையும் அடுக்கி ஒரு எளிய தாளத்திட்டம் தேவையாக இருந்தது. அதனால், இலகுவில் ஜாதி பேதத்தை அடிப்படையாகக்கொண்டு 35 தாளங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள 35 தாளச்சிற்பத்தில், 35 தாளங்களுக்கு வேறொரு (அதாவது மூன்றாவது) வரிசைமுறை குறிக்கப்பெறுகிறது. அதன்படி கீழ்க்கண்ட முறையைக் காண்கிறோம்:—

$1_4$ 0 $1_4$ $1_4$
$1_4$ 0 $1_4$
0 $1_4$
$1_4$ U 0
$1_4$ 0 0
$1_4$ $1_4$ 0 0
$1_4$

35 தாளங்களைக் காட்டும் படத்தில் முதல் தாளம் சதுரஸ்ரஜாதி துருவதாளம் வட்டத்தின்மேல் நடுவில் தொடங்குகிறது. மற்ற சதுரஸ்ரஜாதி தாளங்கள் கடிகார முள் சுற்றும் வரிசையில் அமைந்திருக்கின்றன. ஏக தாள வகைகள் ஒவ்வொன்றாக நடுவில் இருக்கின்றன. சங்கீர்ண ஜாதி வகைகள் மேல் நடுவிருந்து தொடங்கி கடிகார முள் சுற்றுவதற்கு எதிர்முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, வட்டத்தின் சுற்றுக்கோட்டில் 30 தாளங்களும் உள் வட்டத்தில் 5 தாளங்களும் உள்ளன.

புறகு சப்த தாளங்களின் திசிர ஜாதி, மிசிரஜாதி, கண்டஜாதி, சங்கீர்ணஜாதி இவை தொடர்ந்து வருகின்றன. சிற்பத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் எண் குறிப்பு பின்வருமாறு:

(1) திசிரலகு U O (த்ருத விராமம்)

(2) சதுரசிரலகு 1

(3) கண்டலகு U 1 (லகு விராமம்)

(4) மிசிர லகு

(லகு துருத விராமம்) U O 1

(5) சங்கீர்ண லகு U L 1 (குருவிராமம்)

## மதுரை மீனாட்சி கோயிலிலுள்ள தாளச் சிற்பங்கள்



சப்தசூழாதிதாளம் 35



சிம்மநந்தனதாளம்

**சிம்மநந்தன தாளம்**

இந்த தாளத்தில் ஒரு ஆவர்த்தத்திற்கு 128 அட்சர காலங்கள் அல்லது 32 மாத்திரைகளாகும். 108 தாளங்களில் **சிம்ம நந்தன தாளமே** மிகவும் முக்கியமானதும் நீளமானதுமாகும்.

சிம்மநந்தன தாளத்தின் அங்கங்களின் வரிசை;—

88 $1_8$ 8 00 88 $1_8$ $1_{88}$ +

இந்தத் தாளச் சிற்பத்தின் அங்கங்கள் அடி நடுவில் தொடங்கி கடிகார முள் சுற்றுமுறையில் போய் நடுவிலுள்ள காக பாதத்தில் முடிகிறது. அந்தப் படத்திலுள்ள குரு, புளுதம் இவைகளுக்கான அடையாளங்கள் பழைய மரபை யொட்டிய குறிகள்.

கோயிலின், புதுத்திருப்பணிகள் பழுதுபார்த்தல் இவைகளின் காலங்களைப் பற்றிச் சொல்லும் செய்யுள் நூலான **திருப்பணிமாலையில்** இந்த சிற்பங்களுடைய மண்டபத்தின் காலத்தை சாலிவாகன 1140-ஆம் ஆண்டு என்று குறிக்கிறது. அது கி.பி. 1218 ஆகும். ஆதலின் இந்தச் சிற்பம் புரந்தரதாசருக்கு முன்பே 35 தாளத் திட்டம் இருந்ததென்பதை நிறுவிக் காட்டுகிறது. அருணகிரிநாதர் தம்முடைய என்று மழியாத திருப்புகழ்ப் பாடல்களை இந்த 35 தாளங்களில் பாடுங் காலத்தில் அவை யாவருக்கும் நன்கு தெரிந்திருந்தன. மதுரை மீனாட்சிதேவியின் பெருமையைக் கூறும் பாண்டீர பாஷையில் அமைக்கப்பெற்ற "மீனாட்சி ஜயகாமாட்சி" என்ற பழைய கீதம், இந்த 35 தாளங்களில் ஒன்றான சதுரஸ்ரஜாதி துருவ தாளத்தில் அமைக்கப் பெற்றிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது

---

**கைலாசபுரம்** :—கைலாசநாதசுவாமி கோயிலில் வைகாசிப் பெருந் திருவிழா 15-5-61 முதல் 24-5-61 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**விருத்தகிரி** :—விருத்தகிரீசுவரப்பெருமான் கோயிலில் வசந்த மகோற்சவம் 20-5-61 முதல் 29-5-61 வரை நடைபெற்றது.

**கிள்ளியூர்** :—செல்லியம்மன், பூரணை, புஷ்கலாம்பாள் சமேத ஹரிஹரபுத்ரசுவாமி தேவாலயங்களில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 16-5-61ல் நடைபெற்றது.

**அம்பாசமுத்திரம்** :—கிருஷ்ணசுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருந் திருவிழா 20-5-61 முதல் 29-5-61 வரை நடைபெற்றது.

**குமாரவயலூர்** ;—சுப்பிரமணியசுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 19-5-61 முதல் 31-5-61 வரை நடைபெற்றது.

**குன்றத்தூர்** :—சேக்கிழார் மடாலயத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள அறக்கட்டளையிலிருந்து 20—5—61 அடியார்களுக்கு இன்னமுது செய்விக்கப் பெற்றது.

**திருஇடும்பாவனம்** :—சத்குணநாதர் கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 18-5-61 முதல் 30-5-61 வரை சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**நாகப்பட்டினம்** ;—காயாரோகணசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—5—61 முதல் 31—5—61 வரை நடைபெற்றது.

# விராலிமலை

மாலாசை கோப மோயாதெ நாளு
 மாயாவி கார வழியேசெல்
 மாபாவி காளி தானேனும் நாத
 மாதாபி தாவு மினிநீயே
நாலான வேத நூலாக மாதி
 நாஞேதி னேனு மிலேவீணே
 நாள்போய் விடாம லாருறு மீதில்
 ஞானேப தேசம் அருள்வாயே
பாலாக லார ஆமோத லேப
 பாடீர வாக அணிமீதே
 பாதாள பூமி ஆதார மீன
 பானீய மேலே வயலூரா
வேலாவி ராலி வாழ்வேச மூக
 வேதாள பூத பதிசேயே
 வீராக டோர சூராரி யேசெ
 வேளேசு ரேசர் பெருமாளே.

—அருணகிரிநாதர்.

புகழ்பெற்ற முருகன் திருப்பதிகளில் ஒன்று விராலிமலை என்பது. இத்தலம் புதுக்கோட்டையிலிருந்து 26 கல் தொலைவிலுள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் 18-ஆவது கல்லில் இருக்கிறது. மணப்பாறை, கொளத்தூர் என்ற இருப்புப்பாதை நிலையங்களிலிருந்து 8 கல் தூரத்தில் இருக்கிறது. மோட்டார் பஸ்கள் செல்கின்றன. ஊரில் பயண விடுதி, சத்திரங்கள், உணவு விடுதிகள் முதலியவை இருக்கின்றன.

விராலிமலையின் மீதுள்ள முருகன் கோயில் சுமார் 10 கல் சுற்றளவுக்குத் தெரிகிறது. விராலிமலை யென்ற பெயர் 'விராலியூர்மலை' என்ற பெயரினின்றும் வந்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்வூருக்கண்மையில் விராலியூர் (விராலூர்) என்ற ஊர் இருக்கிறது.

விராலிமலை சுமார் 120 அடி உயரம் இருக்கலாம். மலைமீதேறிச் செல்ல மலைக்குத் தென்புறம் கிழக்கிலிருந்து படிகள் உள்ளன. சுமார் 200 படிகள் இருக்கின்றன. படியேறுமிடத்திற்கு இடது புறம் வீரேசுவரர் கோயில் இருக்கிறது. சுமார் 100 படிகள் ஏறினதும் இடும்பன் சந்நிதி வடக்கு நோக்கியிருக்கிறது. அதன் அருகில் படிகளின் இருபுறமும் விநாயகர், முருகன் இவர்கள் காட்சியளிக்கின்றனர். அவ்விடத்திலேயே படியேறும்போது வலப்பக்கமாக சொக்கநாதர், மீனுட்சி இவர்கள் முறையே கிழக்கு, தெற்கு நோக்கி யெழுந்தருளியுள்ளனர்.

மலைப்படிகள் ஏறினதும் தெற்கு நோக்கிய கோபுரவாசல் இருக்கிறது. ஐந்து மாடங்களுடைய அழகிய கோபுரம். (பின் அட்டைப்படம் பார்க்க). கோயிலுக்குள் ஒரே பிரகாரம்தான். வடமேற்கு மூலையில் அகத்தியர், அருணகிரிநாதர் இவர்களின் திருவுருவங்கள் இருக்கின்றன. தென் கிழக்கிலுள்ள வீரவாகு தேவரின் அழகிய பெரிய உருவம் காணவேண்டியதொன்று. தென் மேற்கில் நவக்கிரகங்களும், க்ஷேத்திரபாலர் சந்நிதியும் உள்ளன. மூலஸ்தானத்திலுள்ள ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் எழுந்தருளியிருக்கிறார். சண்முகநாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

மலைக்குத் தென்பக்கம் திருக்குளம் இருக்கிறது. அதை நாகதீர்த்தம் என்பர். மலையடிவாரத்தில் சுனை தீர்த்தம் இருக்கிறது. அதிலிருந்துதான் மலைமேல் முருகனுக்கு அபிஷேக தீர்த்தம் கொண்டுவரப்படுகிறது. அந்த சுனையின் பக்கத்தில் கறுப்பர் கோயில் இருக்கிறது.

இக்கோயிலில் நாள்தோறும் நாலுகால பூசை நடக்கிறது. வைகாசி விசாகத்தைக் கடைசி நாளாகக்கொண்டு பிரமோற்சவம் நடைபெறுகிறது. அதன்றி, தைப்பூசத்திலும், கந்தசஷ்டியிலும் திருவிழாக்கள் உண்டு.

இக்கோயில் ஏற்பட்டதற்குக் கர்ண பரம்பரையாய் வழங்கும் கதை ஒன்று

உண்டு. திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள முருகன் பதியான வயலூரில் ஞானவரோதயர் என்ற ஒருவர் இருந்தார். அவர் இளமையில் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்வதில்லை. ஒரு நாள் ஓடி வந்து முருகப்பெருமான் திருவுருவத்தின் பின் ஒளிந்திருந்தார். கோயில் பணியாளருக்குத் தெரியாமல் இரவு முழுவதுமிருந்தார். முருகன் அவர் முன் தோன்றி, அருட்பாடல்கள் பாடும் திறமையை யளித்தார். பெற்ரோர் அது தெரிந்து பெருமகிழ்வுற்றனர். ஒருநாள், ஞானவரோதயர் கனவில் அறுமுகப்பெருமான் தோன்றித் தனக்கு விராலிமலைமேல் ஒரு கோயில் கட்டவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார். இதை பெரம்பூர்த் தலைவரான அழகிய மணவாளர் என்பவரிடம் தெரிவித்தார். அவரும் அதேபோன்றதொரு கனவு கண்டார். அதன்படியே இக்கோயிலைக் கட்டினர். பின்னர், குமாரவாடி, மருங்காபுரிப் பெருநிலக் கிழார்கள் கோயிலுக்குப் பல திருப்பணிகள் புரிந்தனர். குமாரவாடியில் அமைச்சராக இருந்த கருப்பமுத்துப் பிள்ளை யென்பார் வெள்ளிக்கிழமை தோறும் தவருமல் விராலிமலை முருகனை வழிபடும் நியதியை மேற்கொண்டிருந்தார். ஒருநாள் அப்படி அவர் வரும்போது பெருமழை பெய்ததால் மாமுண்டியாறு பெருக்கெடுத்தது. அதைத் தாண்டி வரமுடியாமல் இரவெல்லாம் அப்படியே இருந்தார், முருகன் ஒரு மனித உருவத்தில் சென்று அவரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்ருர். இக்கதையும் இத்தலத்தில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆதியில் கோயில் சோழ மன்னர்களால் கட்டப்பெற்றதாகத் தெரிகிறது. கோயில் வாகன மண்டபத்தில் அமர்ந்த சிங்கங்களுடைய இரண்டு தூண்கள் இருக்கின்றன. அந்த தூண்கள் பல்லவர் காலச்சிற்பங்கள். அவை கொடும்பாளுர் ஐவர் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டு இங்கு அமைத்திருக்க வேண்டுமென்றும், கோயில் பல்லவர் காலத்தது அன்று என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கி. பி. 9-ஆம் நூற்ருண்டில் ஊர் மிக்கவளமுடையதாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. மலையடிவாரத்தில் கறுப்பர் கோயிலுக்கு முன்னுள்ள ஒரு பாறையில் விஜயநகர வேந்தனை இரண்டாம் தேவராயரின் கி. பி. 1425-ஆம் ஆண்டுக்கல்வெட்டொன்று காணப்படுகிறது. கர்ப்பக்கிரகத்தின் தென், வட சுவர்களில் இரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. கோயில் மகாமண்டபத்தின் தென்புறச் சுவரிலும் கல்வெட்டு இருக்கிறது. மதுரை நாயக்க மன்னரில் இளவரசரான கிருஷ்ணப்ப நாயக்கரின் நன்மைக்காக அறுமுகப்பெருமானுக்குப் பல்லக்கு உற்சவம் நடத்த ஏற்பாடு செய்ததை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. அம்மன்னர் கி. பி. 1564-72-ல் அரசாண்டவர்.

கி.பி. பதினைந்தாம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் திகழ்ந்த அருணகிரிநாதர் வயலூரிலிருந்து விராலி மலைக்கு வந்து ஞானேபதேசமும், அட்டமாசித்தியும் பெற்ருர் என்பார். அவர் பாடியருளிய இத்தலத் திருப்புகழ்ப் பாடல் ஒன்றில்,

விராலி

மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவெனஅ ழைத்தென் மனதாசை
மாசினைய றுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த மறவேனே

என்று இந்நிகழ்ச்சியைக் குறிக்கிருர். விராலிமலை முருகன்பேரில் அவர் 18 திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருக்கின்றனர் தலத்தை விராலிநகர், விராலி வெற்பு, விராலிவிலங்கல் என்ற பெயர்களாலும் அழைக்கிருர். "மதியணையும் சோலை ஆர்த்து மதிவளர் சந்தான கோட்டின் வளமைமிகும் பேறுகாட்டிய விராலிமலை", "மருதமுதைந்த முகுந்தனன்புறு மருகு குவிந்து மலர்ந்த பங்கய வயலியில் வம்பவிழ் சண்பகம் பெரிய விராலிமலை," "கோடாச் சிவபூசை பவுருஷ மாருக் கொடை நாளு மருவிய கோனுட்டு விராலிமலை," "விடாது மழை மாரி சிந்த அநேக மலர் வாவிபொங்கு விராலிமலை," "விராவிய குராவகில் பராரை முதிராவளர் விராலிமலை" என்றெல்லாம் போற்றிப் புகழ்கிருர்.

இத்தலத்தில் சதாசிவப் பிரமேந்திராள் என்ற ஞானி சிலகாலம் தங்கியிருந்து பின்னர் கரூருக்கருகிலுள்ள நெரூரில் சமாதிநிலையடைந்தார். திருவாரூர் தட்சிணமூர்த்தி சுவாமிகள் என்ற பெரியார் இங்கு வந்திருந்து கோயில் தருமகர்த்தரின் காச

நோயைத் தீர்த்தார் என்று சொல்லப்படுகிறது. இன்னும் விராலிமலை சுவாமிகள் என்ற சதாசிவ சுவாமிகள் இங்குள்ள குகையொன்றில் பலகாலம் தங்கியிருந்து பின்னர் திருவிடைமருதூருக்கருகிலுள்ள திருபுவனத்தில் சமாதிநிலை பெற்றார். மலைச்சரிவில் தென்கிழக்கிலும், தென்மேற்கிலும் இரண்டு குகைகள் இருக்கின்றன. அருணகிரிநாதர்,

வெந்த நீறணி வேணி இருடிகள்
 பந்த பாசவி கார பரவச
 வென்றி யாஞ்ச மாதி முறுகுகல் முழைகூடும்

விண்டு மேல்மயி லாட இனியக
 ஞண்டு காரளி பாட இதழ்பொன்
 விஞ்ச வீசுவி ராலி மலையுறை பெருமாளே

என்றும்,

மருது நெறுநெறு நெறுவென முறிபட
 உருளு முரலொடு தவழரி மருகசெ
 வனச மலர்சுனை புலிநுழை முழையுடை விராலி

என்றும் கூறியிருப்பதில் முழை என்று குகைகளைச் சொல்லியிருப்பது ஈண்டு குறிக்கத்தக்கது.

முத்துப்பழனிக் கவிராயர் என்பார் "விராலிமலைக் குறவஞ்சி" என்ற ஒரு நூலை இயற்றியிருக்கிறார். ஐதர் அலியின் படையைச் சேர்ந்த குதிரைவீரன் ஒருவன் இப்பக்கத்திலுள்ள காட்டில் இருந்துகொண்டு ஊர்களைப் பாழ்படுத்திவந்தான். அவனைப் புதுக்கோட்டை மன்னரான தொண்டைமான் ஒருவர் துரத்திச்சென்று கொன்றார். அதைக் குறவஞ்சி ஆசிரியர்,

"மஸ்தகம் பதித்தொரு விராலிமலை தன்னில்
ஊசி நுழையாத உடைவேலான் காட்டிலே
ஒற்றைக்குதிரைக்காரன் ஒருமையாக
 வந்தவனை
பற்றித்துரத்தி வெட்டும் பகதூர்ராயத்
 தொண்டைமான்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

---

**நாட்டரசன்கோட்டை** :—கண்ணுடையநாயகி அம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 20—5—61 முதல் 30—5—61 வரை நடைபெற்றது. 25—5—61 முதல் 30—5—61 வரை சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**சென்னை** :—பெத்துநாய்க்கன்பேட்டை—வரதராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 26—5—61 முதல் 4—6—61 வரை நடைபெறுகிறது.

**குணமங்கலம்** :—பிட்சீசுவரர் கோயிலில் 9—5—61ல் அப்பர் சுவாமிகள் என்னும் பொருள்பற்றி திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளையவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

**மதுரை** :—கூடலழகர் கோயிலில் வைகாசிப் பெருவிழா 21—5—61 முதல் 4—6—61 வரை நடைபெறும்.

**திருக்காரூயில்** :—ஆதிவிடங்கத் தியாகராஜசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 11—5—61 முதல் 31—5—61 வரை நடைபெற்றது. 20—5—61 முதல் 25—5—61 வரை சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**அரியக்குடி** : திருவேங்கடமுடையான் கோயிலில் பிரம்மோற்சவம் 22—5—61 முதல் 3—6—61 வரை நடைபெறும்.

**நீடாமங்கலம்** : காசிவிசுவநாதசுவாமி கோயிலில் வைசாகப் பிரம்மோற்சவம் 19—5—61 முதல் 31—5—61 வரை நடைபெற்றது. 20—5—61 முதல் 31—5—61 வரை சமயச்சொற்பெருக்குகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**சிறுபுலியூர்** : கிருபாசமுத்திரப்பெருமாள் கோயிலில் வைசாக உற்சவத்தில் 21-5-61, 24—5—61 இருதினங்களில் சமயச்சொற்பெருக்கும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

**தாடாளன் கோயில்** : திருவிக்கிரமநாராயணப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 19—5—61 முதல் 31—5—61 வரை நடைபெற்றது.

**மடவார்வளாகம்** : வைத்தியநாதசுவாமி கோயிலில் வைகாசி பிரம்மோற்சவம் 19—5—61 முதல் 29—5—61 வரை நடைபெற்றது.

# சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச் செய்த

# நால்வர் நான்மணி மாலை

(சிதம்பரம் - ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் உரை)

—:※:—

(முன் தொடர்ச்சி)

மலர்வாயென வேண்டாது கூறினர்: மலரிற் பிறந்ததேன் என்பதோர் நயந் தோன்றுதற்கும், இவர்நாவில் ஞானவாணி குடிகொண்டமையை நாட்டுதற்கும் என்க. என்குவீரென்பதில் குச்சாரியை. [1]"மறிமழுவுடைய கரனென்கிலர் மறலியை முனியு மரனென்கிலர்-மதி பொதிசடில தரனென்கிலர் மலைமகண் மருவு புய னென்கிலர் - செறிபொழினிலவுதில்லை யென்கிலர் திருநடநவிலு மிறையென் கிலர் சிவகதியருளு மரசென்கிலர் -சிலர்நரகுறுவ ரறிவின்றியே" என் புழிப்போல. திருவாசகம் ஓதினென்னாது ஒருகாலோதினென்றமையால் வேதம் பலகாலோதினெனவிதந்தாம். அன்றி, உம்மைகளை விரியாது ஒருகாலோதி னென்பதனை ஈரிடத்துங்கூட்டலும் ஒன்று. இங்கு அசை. அல்லதூஉம், எங்குமென்பதொருசொல் வருவித்து, வேதம் பொதுவாதல்பற்றி எங்கும் ஓதினும், அன்பராவாரைக் கண்டிலம்; இத்தமிழ்வேதம் இந்நாட்டிற்கே சிறப் பாதல்பற்றி இங்குமாத்திரம் ஓதினும் அன்பராகாரிலரெனினும் அமையும். மனமுமென்புழி உம்மை உயர்வுசிறப்பு. பாய்தலென்னும் இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின்மேலேற்றப்பட்டது. [2] "ஊருணிநீர்நிறைந்தற்று" என்புழிப் போல. [3]"இரட்டைக்கிளவி யிரட்டிற்பிரிந் திசையா." ஆகலின் விதிர்விதிர்ப்பென வந்தது. ஓதுவோரும் கேட்போரும் அன் பின்பயனாகும் முத்திப்பேறுடையராதலை முன்னர்த் தனித்தனி கூறுபவாகலின் அன்பராகுநரென்றது அவ்விருதிறத்தின ரையும் என்க. மற்றையர் - அன்பராகார். ஏகாரம்-ஈற்றசை.

அம்பிகைபகிர்ந்தமையை [1]" அருவ ருக்கு முலகவாழ்வடங்க நீத்தோர்க் கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட- மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர் மண்ணெனுமென் வகையுறுப்பின் வடிவு கொண்ட - வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன்றாலவ் வுருவையிஃ தொருத்த னென்கோ-விருவருக்கு முரித்தாகவொருவ ரென்றோ ரியற்சொலில தெனில்யான்மற் றென்சொல்கேனே". என்பதனாலும், வேதம் அநாதிநித்தியமென்பதனை [2]"உன் னிய வங்க மாறு மூன்றுப வேதந் தானுந்- தன்னுளே யடக்கி வேறு தங்கிடா வகை யைச் சார்ந்து-முன்னமோர் தேற்ற மின்றி முடிவின்றி நித்தமாகி-மன்னியோ ரியல்பே யாகி வழங்கிடு மறைய தென்றான்" என்ப தனாலும், இதன் மறுதலையாதலை, [3]"வேதஞ் சுயம்புவென வேதந்த வாய்மொழியில் வேறும் பிர மாண முளதே - னீதந்த காணிங்கு மாதுங்க பாரதமு னேர்கண்ட தாகுமதுபோ - லோதுஞ்சொ லாய்வருத லானுங் கடாதிபட மோவந்தி டாவோ ருவராலேதந்த தாமறைகளாய்வந்த வாய் மொழியும் வேறிந்து சேகரனதே". என்ப தனாலும், வேதாகமங்கள் உலகுய்தற்கே அருளியவென்பதை, [4]"ஆரணமாக மங்க ளருளினா லுருவு கொண்டு - காரண னரு ளானகிற் கதிப்பவ ரில்லை யாகு - நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க்கெல்லாஞ்- சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே" என்பதனாலும், ஞானவாணி

1. கோயினான்மணிமாலை-கடு.
2. திருக்குறள்-உகடு.
3. தொல்காப்பியம் சொல்-சச.

1. சிதம்பரச் செய்யுட்கோவை-இச.
2. சிவஞானசித்தி பரபக்கம் பட்டாசாரியன் மதம்-டு.
3. ஷை மதமறுதலை-க.
4. ஷை சுபக்கம் முதற்சூத்திரம்-சசு.

குடிகொண்டமையை, [1]"தேனும் பாலுந் திங் கன்னலு மமுதுமாய்த் தித்தித் தூனு முள்ளமு முருக்கவுள் ளொளியுணர்ந் தின்ப - மான வாறுதேக் கிப்புறங் கசிவ தொத் தழியா ஞான வாணிவந் திறுத்தன ளன்பர்தந் நாவில்" என்பதனுனும், திருவாசகம் சிவானந்த மயமாக்குதலை [2]"தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளைநீக்கி- யல்லலறுத் தானந்த மாக்கியதே-யெல்லை- மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன் றிருவா சகமென்னுந் தேன்" என்பதனுனும் அறிக. (அ)

**இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு**
**முலைசுரந்த வன்னையோ முன்னின்-னிலைவிளம்பக்**
**கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா**
**விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு.**

(இ - ள்) சம்பந்தா - திருஞானசம்பந்த மூர்த்தியே! இலை படர்ந்த பொய்கை இடத்து அழுதல் கண்டு - தாமரையிலைகள் பரவிய தடாகக் கரையிலே அழுதலை நோக்கி,—முலை சுரந்த அன்னையோ - திருமுலைசுரந்த அன்னையாகிய அம்பிகையோ?- முன் நின் நிலை விளம்ப கொங்கை சுரந்த அருள் கோமகளோ - முன்னே உமது நிலைமையை உரைக்கும்போதே திருமுலைசுரந்த அருட்பெருக்கையுடைய மங்கையர்க்கரசியாரோ?—உயர்ந்தாள் ஆர் எனக்கு சொல்- இருவருள் உயர்ந்தவர் யாவர்? எளியேனுக்கு இசைந்தருள்வீராக. (எ-று)

அம்மே அப்பாவென்று அழைத்தழுதல் கண்டு திருமுலை சுரந்து, சிவபிரான் பணித்தவாறு அப்பாலடிசிலைப் பொன் வள்ளத்திற்கறந்து, ஊட்டியருளினராகலின், இறைவியை, 'அழுதல்கண்டு முலை சுரந்தவன்னை' என்றும், இக்கோமகளார் அன்புடையரெனவைத்து ஆன்றோராற்புகழப்படினும், தாமும் குலச்சிறைநாயனரும் போலத் தங்கணவர் முதலிய தொடர்புடையர்மாத்திரம் சமண்சமயப்படுகுழியினீங்கிச் சைவசமயிகளாயுய்தலைவெஃகும் அன்புடையராகாது, அந்நாடு முற்றும் உய்யவேண்டுமென்னும் அன்பின் முதிர்வாகிய அருளுடைய ராயமருங்கால், அந்தணரொருவரெய்தி, [1]"திருமு லைப்பாலி னேடு ஞானமுந் திரட்டிச் செம்பொற் - குருமணி வள்ளத் தேந்திக் கொடுப்பவப் பாலன் வாங்கிப் - பருகியெண் ணிறந்த வேதா கமமிவை பற்றிச் சார்வாய் – விரிகலை பிறவு மோதா துணர்ந்தனன் விளைந்த ஞானம்" என்றற் றொடக்கத் தியல்புகளை யிசைக்க; அவற்றைக் கேட்கும்போதே, கொங்கை சுரந்தாரேனும், அதனையூட்டு தற்செயல் இவர்பால் நிகழாமையின், அன்னையென்னது, 'நிலை விளம்பக் கொங்யை சுரந்தவருட்கோமகள்' என்றும், பிள்ளையினியல்பைக் கேட்புழி முலைசுரத்தல் தலையன்பும், கண்டுழி முலைசுரத்தல் இடையன்பும், அழுதல்கண்டு பிறர் தூண்ட முலைசுரத்தல் கடையன்புமாம் ஆகலின், இவர் அம்பிகை போலாது, தலையன்புடையராயி னமைதோன்ற, "உயர்ந்தாளார்" என்றும், தேவரீர் சம்பந்தராய் இருவரியல்பும் அறிந்துள்ளீராகலின் உண்மையுணர்த்துகவென்பார், 'சம்பந்தா வெனக்குச் சொல்' என்றும் கூறினர்.

அரிவையர்க்குப் புதல்வர்மாட்டுளதாகும் அருவாகிய அன்பினைப் பிறரறியுமாறு அவ்வன்பினுருவாகிய முலைப்பாலும் கண்ணீரும் வெளிப்படுத்தலியல்பாகலின் இக்கோமகளிடத்தும், பிள்ளையா ரியல்பை கேட்புழி, அவர்மாட்டுளதாகிய அன்பை முலைப்பால் புலப்படுத்தியதென்பது. அமணர்கள் அழுக்காறுற்றுத் திருமடத்தே தீமூள்விக்க, அதனையறிந்த பிள்ளையார், இது அரசன் நெறிகோடியதால் நிகழ்ந்தமையின் வெய்யதீங்கிது வேந்தன்மேற்றென அத்தீயை ஏவத்துணிந்துழியும், இக்கோமகள் மங்கலநாணைப் பாதுகாத்தலையே முக்கியமாகக்கொண்டு, "பையவேசென்று பாண்டியற்காக" எனப்பணித்ததூஉம் இத்தகைய அன்பின் முதிர்வுடைமை நோக்கியேபோலும்.

பொய்கைக்கழகாகப் புகழப்படுவது செந்தாமரையாகலின் முதற்செய்யுளில் அதன் பூவைமொழிந்து இலையின் படர்ச்சியை ஈண்டிசைத்தாரென்க. பொய்கையென்பது கரையையும், முலை பாலையுமுணர்த்தலின் ஆகுபெயர். சுரத்தலென்

1. திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்-சஅ.

2. திருவாசகம் நூற்சிறப்பு.

1. திருவிளையாடல் பாண்டியன் சுரந்தீர்த்த படலம்-உ0.

னும் இடத்து - நிகழ்பொருளின்றேழில் இட்த்தின் மேலேற்றப்பட்டது. விளம்ப வென்பது முற்பிற் பாடின்றி, நிகழ்காலத்தில் இதுநிகழாநிற்க இது நிகழ்ந்ததென்னும் பொருட்டாய்வந்த செயவெனெச்சம். மங்கையர்க்கரசியாரென்னும் பொருள் படக் கோமகளென்றார், ஓகாரங்க ளிரண்டும் வினா. இங்கு அசை. யாரென்வினா வினைக் குறிப்பு ஆரெனத்திரிந்தது.

செந்தாமரை பொய்கைக்கழகாகப் புகழப்படுதலை [1]"இடம்புரி சுரிமுக வலம்புரி யீன்ற - தெண்ணீர் நித்திலம் வெண்ணில வெறிப்ப வூற்றெழு தீம்புனல் பாற்கடலாக — விரிதிரைச் சுருட்டே யரவணையாகப் - பாசடைக் குழாங்கள் பசுங்கதிர் விரிக்குந் — தேசுகொண்மேனித் திருநிறனுகப் - பொற்றுது பொதிந்த சேயிதழ்க் கமல - மலர்விழிமுதல பலவுறுப்பாக - வங்கணோர் வசனத் தரசுவீற்றிருக்குஞ் செங்காலன்னந் திருமகளாகப்-பைந்துழாய் முகுந்தன் பள்ளிகொண்டன்ன - வந்தண் பூந்தடம்" என்பதனானும், அன்பின் முதிர்வே அருளென்பதை [2]"அருளென்னு மன்பீன் குழவி" என்பதனானும், அன்பை முலைப்பாலும் கண்ணீரும் வெளிப்படுத்தலை [3]இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா - னல்லா யுளவாம்" என்பதனானும்,நிலை விளம்பக் கொங்கை சுரந்ததை [4]"சுரந்த திருமுலைக்கே துய்ய திருஞானஞ் — சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த - தனமுடையா டென் பாண்டி மாதேவி தாழ்ந்த — மனமுடையாளன்பிருந்த வாறு" என்பதனானும், தீப்பணியைப் பையவே செல்லப்பணித்ததை [5]"பாண்டிமா தேவியார் தமது பொற்பிற் பயிலுநெடு மங்கல நாண் பாதுகாத்து — மாண்டகையார் குலச்சிறையாரன்பினாலுமரசன்பா லபராத முறுதலாலு — மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும் வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர் — தீண்டியிடப் பேறுடையனாதலாலுந் தீப்பணியைப் பையவே செல்கவென்றார்" என்பதனானும் அறிக. (௫)

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத
    தென்கொல்வெள் ளேறுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக
    வேந்தவித் தாரணியி
னினக்கன்பு செய்கின்ற வப்பூதி
    யைச்சிவ நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர
    னேத்து மியல்பறிந்தே.

(இ-ள்.) வெள் ஏறு உடையான் தனக்கு அன்பு செய்திருத்தாண்டகவேந்த வெள்ளிய இடபவாகனத்தையுடைய விமலருக்கு விருப்பத்தை விளைக்கும் திருத்தாண்டகங்களையருளிய தலைவரே! - சிவ நேசம் உறும் இனர்க்கு அன்பு செய் நம்பியாரூரன் - சிவநேசமிக்க இனமொத்த திருத்தொண்டர்பால் அன்புவைத்த நம்பியாரூரவள்ளலார் - இத்தாரணியில் நினக்கு அன்பு செய்கின்ற அப்பூதியை - ஈண்டு தேவரீர்க்குத் திருத்தொண்டுபுரிந்த அப்பூதியடிகளை - ஏத்தும் இயல்பு அறிந்தும்- துதிக்கும் நிலைமையைத் துணிந்து வைத்தும், - எனக்கு நின்பொருட்டு அன்பு எய்தாதது என்கொல் - எளியேனுக்குத் தேவரீர் பொருட்டு அன்பு உதியாதது என்னைகொல்லோ! (எ-று.)

இவர்வது தரும ஏறென்பார், அதனிறஞ்சுட்டி 'வெள்ளேறு' என்றும், இறைவரருட்டிறங்களையே இனிது புகழ்ந்துளவாகலின் காமுகருக்கு இளமங்கையரை போன்று அவ்விறைவர்க்கு அதி விருப்பம் விளைப்பனவென்பார், 'அன்பு செய் திருத்தாண்டகம்' என்றும், அப்பூதியடிகள் வழிபட்டதும் அவரை ஆளுடைய நம்பிகள் திருத்தொண்டத்தொகையிற் றுதித்ததும் நங்கண்களுக்குப் புலப்படாத வேறுலகத்தன்று இவ்வுலகத்திலே இத்தமிழ்நாட்டிலேயே யென்பார், 'இத்தாரணியில்' என்றும், எப்பெருந்தகையரேயாயினும் ஏனையர்பால் அன்புசெயற்பாலரல்லரென்பார், 'சிவநேசமுறுமினர்க்கன்பு செய் நம்பியாரூரன், என்றும், அப்பெருந்தகையரே தேவரீரை வழிபடல் சிவவழிபாடுபோல்வதெனத் தேர்ந்தமையின், அப்பூதிக்குமடியேனென்றுது, அவரவரடியார்க்கு அடிமை பாராட்டி ஏனைச்

1. சிதம்பரமும்மணிக்கோவை-௨௮.
2. திருக்குறள்-௭௫௭.
3. சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம்.
4. திருக்களிற்றுப்படியார்-௯௪.
5. பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்தி புராணம்-௭0௫.

சிவனடியரைத் துதித்தாங்கே 'அப்பூதி யடியார்க்குமடியேன்' எனச் சிறப்பித்துத் துதித்தனரென்பார், 'ஏத்துமியல்பு' என்றும், இது கேள்வியளவாய சரித்திரமன்றி அருள்வாக்கின் ஆதாரமுடைத்தென்பார், 'அறிந்தும்' என்றும், அறிந்துவைத்தும் அன்புதியாமை அதிவியப்பென்பார், 'அன்புநின்பொருட் டெய்தாததென்கொல்! என்றும் கூறினர்.

கூறவே, சிவநேசர்க்குரிய சிறப்பனைத்தும் வாகீசமூர்த்தியை வழிபடுவார்க்கும் உண்டென்பது கருத்தென்க. என் வியப்பிடைச்சொல். கொல் ஐயம். முந்திய செய்யென்புழி பிறவினைப்பொருளுணர்த்தும் விளிவிகுதி தொக்குநின்றது; [1]"குடி பொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்புழிப்போல. இதனை வடநூலார் அந்தர்ப்பாவிதணிச்சென்பர். ணிச்சு - பிறவினை விகுதி. திருத்தாண்டகமாவது - ஒவ்வோரடியும் இருபத்தாறெழுத்தின்மிக்குவர நான்கடியாற் பாடப்படும் பாட்டு. பெருமானை இப்பாடலாற் பெரிதும் துதித்துளராகலின் திருத்தாண்டகவேந்தரெனத் திருநாமம் பெற்றாரென்பது. அப்பூதியடிகள் செய்த அன்பாவது - தனயராதியர்க்கன்றித் தம்மனைப்பாலுள்ள அளவைகள் நிறைகோல் ஆனிரை மேதியாதிகட்கும் திருநாவுக்கரசெனத் திருநாமஞ் சாத்தி, அத்திருநாமத்தானே பற்பல சாலை கூவல் குளம் தரு தண்ணீர்ப்பந்தர் முதலியன அறத்தின்பொருட்டாக்கி வழிபட்டமையாம். செய்கின்றவென்பது கால மயக்கம். உறு மிகுதிப்பொருட்டு. இனர்க்கு வேற்றுமை மயக்கும். நம்பியென்பது சிறப்புப்பெயரும் ஆரூரனென்பதுமூதாதைக்குரிய முறைமையிற்போந்த இயற்பெயருமாதல்பற்றி, நம்பியாரூரனென முறைப்படுத்தார்; [2]"சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிக்கு-மியற்பெயர்க் கிளவி முற்படக்கிளவார்" என்பதோத்தாகலின். அறிந்துமென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் ஈற்றசை.

அப்பூதியடிகளன்பு செய்தமையை [3]"அந்தணரின் மேம்பட்ட வப்பூதியடிகளார் - தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர் - பந்தர்பல வாண்டவரசெனும்பெயராற் பண்ணினமை - வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனை நண்ண" என்பதனாலும், சிவநேசமுறும் இனரென்பதனை [1]"பெருமையாற் றம்மையொப்பார் பேணலாலெம்மைப் பெற்றா - ரொருமையா லுலகை வெல்வாரூனமேலொன்று மில்லா - ரருமையா நிலையினின்றா ரன்பினா லின்ப மார்வா - ரிருமையுங் கடந்து நின்றா ரிவரை நீயடைவாயென்று" என்பதனானும், சிவனடியார்க்குரிய சிறப்பனைத்தும் உளவாதலை [2]"பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி பரசுநா வரசான பரமகா ரணவீச - னதிகைமாநகர்மேவி யருளினா லமண்மூடரவர்செய்வா தைகடரு மனகன்வார்கழல் சூடி-னிதியரா குவர் நீர்மையுடையரா குவர்வாய்மை நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால - மதியரா குவரீசனடியராகுவர்மான முடையரா குவர் பாரின்மனிதரா னவர்தாமே" என்பதனானும் அறிக. (சா)

அறிந்து செல்வ முடையானு மளகைப்
பதியாற் றோழமை கொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு
மொருவன் வேண்டுமென விருந்து,
துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா
நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழுநுதற் கட்பெருமானே.

(இ - ள்.) துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா - முற்றத்துறந்த முனிவருமிறைஞ்சும் பரவை நாச்சியாரின் கணவரே!—சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதல் கண் பெருமானே - இயற்கையறிவு சொரூபராய் இலங்கும் நெற்றிக் கண்ணையுடைய நிமலரே-செல்வம் உடையானும் அளகைப்பதியான் தோழமை கொண்டு-பொருட் செல்வத்திற்றலைவனும் அளகையம்பதிக்கிறைவனுகிய குபேரனைத் தோழமைகொண்டு, உறழ்ந்த கல்வி உடையானும் ஒருவன் வேண்டும் என

1. திருக்குறள் - கஎக.
2. தொல்காப்பியம் சொல் - சக.
3. பெரியபுராணத்தில் வாகீசமூர்த்தி புராணம் - உ0க.

1. ஷை தடுத்தாட்கொண்டபுராணம் - ககக.
2. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை —எ.

இருந்து - தம்மை நிகர்த்துக் கல்விச் செல்வத்திற் றலைமை பெற்ற தோழரும் ஒருவர் வேண்டுமென உன்னியிருந்து, நினை அறிந்து தோழமை கொண்டான்-உம்மை நட்டற்குரிமைநாடித் தோழமை கொண்டார். (எ - று.)

பொருட்செல்வம் பூரியார்கண்ணும் நிலைபெறுவதொன்றாகலின் அதிற்றலைவனை அரிது நாடுதலின்றிப் பெற்றனரென்பார், 'செல்வமுடையாருமளகைப் பதியாற்றோழமை கொண்டு', என்றும், தாம் இயற்கையறிவு சொரூபராகலின் தமக்கிணையொத்துக் கல்வியிற் சிறந்தாரைப் பெறுதலருமையான் நெடுங்காலம் வேடி இருந்தனரென்பார், 'உறழ்ந்த கல்வியுடையானு மொருவன் வேண்டுமென விருந்து' என்றும், முற்றத்துறந்து முனிவருட் சிறந்த உபமன்னிய முனிவராதியருமிறைஞ்சும் முதன்மை பெற்றவரென்பார், 'துறந்த முனிவர்தொழும் பரவை துணைவா' என்றும், நின்னைக்கொண்டவர் நெற்றிக்கண் படைத்தவரோவென ஒருவரையொருவர்கடாவல் உலக வழக்கு; அங்ஙனமாக, அவ்வியல்பினரே தோழமை கொண்டது இவ்வியல்புடைமை நோக்கியே யென்பார். 'நுதற்கட்பெருமானே நினையறிந்து தோழமை கொண்டான்' என்றும் கூறினர்.

கூறவே, இணையொத்து இறைவர்க்குரிய தோழராயினமையின் இவரை வழிபடுவோர் சிவபதம் எளிதெய்தப் பெறுவரென்பது குறிப்பெச்சம். உறழ்தல்-வெந்தழலாதியான் அழியாமையும் வேந்தராலும் கவரப்படாமையும் வேண்டியார்க்கு வேணவாவகல மிக்கு நல்கினும் விர்த்திப்பதன்றிக் குறையாமையு முதலிய குணங்களினோங்கி, உத்தமருளந்தொறு நிலவி உயர்கதியளிப்பதாய், இவ்வியல்பு எட்டுணையும்பெறாத பொருட்செல்வத்தினும் இனிதுசிறந்து நிகரின்றாதலுமாம். உம்மை இறந்ததுதழீஇயிற்று. துறத்தலாவது - தானல்லாதவுடம்பையானென்னும் அகப்பற்றையும் தன்னோடியையபில்லாத பொருளை எனதென்னும் புறபற்றையும் ஆசிரியரருளியவாற்றானும் அரிய யோகப் பயிற்சியானும் யான் என தன்மை தெளிந்து விடுத்தல். முனிவருமென்னும் உயர்வு சிறப்பும்மை தொக்கது. முனிவர் தொழுதமை முற்கூறுப. இயற்கையறிவுடையார் தமக்கிணை நாடித் தோழமை கொண்டாரெனவே, இவரும் அவ்வறிவெய்தி இறைவர்க்குரிய தன் வயத்தனாதல் முதலிய எண்குணமுடையராதல் பெற்றாம். ஏகாரம் தேற்றம். உறழ்ந்தீவுடையான் தொழுந்துணைவன் திகழும் பெருமான் நுதற்கட் பெருமான் எனக் கூட்டுக. அறிதல் - எவரு மிறைஞ்சும் இயல்பை நாடல்.

அறிவு வடிவமாய்த் திகழ்தலை "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு-நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்பதனானும், தோழமை கொண்டதை, [2]"தோழமையாக வுனக்கு நம்மைத் தந்தனம்" என்பதனானும், வழிபடுவோர் சிவகதியெய்துதலை [3]"துன்றும்புல னைந்துட னாறு தொகுத்த குற்றம்-வென்றிங்கிது நன்னெறி சேரும் விளக்க மென்றே - வன்றொண்டர் பாதந் தொழுதான சிறப்பு வாய்ப்ப - வென்றுந் நிலவுஞ் சிவலோகத்திலின்ப முற்றார்". என்பதனானும் அறிக. (எ)

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே.

(இ - ள்) பெருந்துறை புகுந்து பேரின்பவெள்ளம் மூழ்கிய புனிதன்-திருப்பெருந் துறையிற் செறிந்து பேரின்பப் பெருக்கிற்றுளைந்த சுத்தராகிய மாணிக்க வாசகசுவாமிகள் மொழிந்த வாசகமே வாசகம் - அருளிய திருவாசகமே திருவாசகம்; அதற்கு வாச்சியம் - அதற்குப் பொருள் - தூசு அகல் அல்குல்வேய் தோள் இடம் தவனே - ஆடையணிந்த அகன்ற நிதம்பத்தையும் மூங்கில்புரையுந் தோள்களையுமுடைய மூதல்வியை வாமபாகத்திலுடைய தவசொரூபராகிய சிவபெருமானே. (எ - று.)

சிறு துறையிற் புகின் முட்டின்றி மூழ்க முடியாதாகலின் விமலரருளால்

1. திருவருட்பயன்.
2. பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் - கஉஎ.
3. ஷையில் சோமாசிமாற நாயனர் புராணம் ௫.

வியன்றுறை வாய்த்ததென்பார், 'பெருந்துறை புகுந்து' என்றும், தூய்மையென்பது அவாவின்மையாகலின் இளமை தொடுத்தே இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்புற்றுச் சிவகதிதேர்வாராகித் தேசிகனருளாற் சிவானந்தானுபவ மேலீட்டுத் திகழ்ந்தவரென்பார், 'பேரின்ப வெள்ள மூழ்கிய புனிதன்' என்றும், ஒவ்வொன்றும் மாணிக்கம் போலுதலின் மாணிக்கவாசகரெனச் சிவபெருமானுற் றிருநாமம் பெற்றூராகலான், இவரருளியவற்றையுறழும் வாசகம்' பிறிதின்றென்பார், 'மொழிந்தவாசகமே வாசகம், என்றும், பலவித கற்பனைகளைக்கடந்து பரமரருட்டிறங்களையே குறித்துள்ள அதற்குப் பொருளறிவுறுப்பான் அனைவரும் வேண்டச் செப்புவாமெனச் செம்பொன் பலத்தை யடைந்து இவரே பொருளென இறைவரைச் சுட்டி, எவரும் குதூகலிக்க மறைந்தாராகலின், சொற்பொருளுருவாய் விளங்கும் அம்பிகைபாகரே அதற்குப் பொருளாவாரென்பார் 'அதற்குவாச்சியந்தூசகலல்குல்வேய்த்தோளிடத்தவனே' என்றும், ஆன்மாக்களுக்குப் போக நிகழ்ச்சியின் பொருட்டுப் போகிபோன்று அம்பிகைபாகராயிருப்பினும், திருக்கைலையைச் சூழ்ந்த நாற்பெருங்கிரிகளுள், ஆமர்த்தகிரியிற் றிருமாலுக்கும், புட்பகிரியிற் பிரமதேவருக்கும், கோளகிரியில் இருடிகட்கும், சந்தானகிரியிற் றேவர்கட்கும், திருக்கைலையில் திருநந்திதேவர் சனகராதியர்க்கும் ஞானுபதேசம்பாலித்துக், காமனை முனிதல் நெடுஞ்சடைமுடித்தல் கல்லாடை புனைதன் முதலியஅருட்சின்ன முடையராயமர்தலின், யோகியே யென்பார்' இரட்டுற மொழிதற் பொருள்படத் 'தவனே' என்றும் சாற்றினரென்க.

ஏகாரம் இரண்டும் தேற்றம். வாச்சியம் - வாசகத்தால் உணர்த்தப்படுவது. அல்குல்வேய்த்தோளென்பது அன்மொழித்தொகை. தவன் கணவனுமாம். புறப்பொருளை நோக்கி நிற்கு நிலையிற் சத்தியெனவும், புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவும், ஒளியும் ஞாயிறும்போல, முதல்வனொருவனே தாதான்மிய சம்பந்தத்தால் இருதிறப்பட்டு, இயைந்து நிற்கும் உரிமை தோன்றத், 'தோளிடத்தவனே வாச்சியம்' என்றூர். தாதான்மிய சம்பந்தமாவது - பொருளான் ஒன்றேயாகியும் ஒருவாற்றாற் பேதமாதற்குரிமை யுடைமை.

தாதான்மியமாதலை [1]"அருளுண்டாமீசற் கதுசத்தி யன்றே-யருளு மவனன்றி யில்லை யருளின் - றவனன்றேயில்லை யருட்கண்ணூர் கண்ணுக்கிரவிபோனிற்குமரனேய்ந்து" என்பதனுனும், சிவகதிதேர்ந்தமையை [2]"மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபாடாய - பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட்டோன்ற - விம்மை யாசையு மறுமையிலாசையு மிகந்து - செம்மையாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார்! என்பதனுனும், சிவானந்தானுபவமுதிர்ந்தமையை [3]"சூக்கமாகுமைந் தெழுத்தினிற் சுற்றிய பாச-வீக்க நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப் - போக்குமீட்சியுட் புறம்பிலாப் பூரண - வடிவமாக்கி ஞானொரு தீபகம் போல் வரு மண்ணல்' என்பதனுனும், மாணிக்கவாசகரென்பதனை [4]"பழுதிலாத சொன்மணியினைப் பத்திசெய் தன்பு-முழுதுமாகிய வடத்தினுன் முறைதொடுத் தலங்க - லழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர் வழுவி லாதபேர் மாணிக்கவாசகனென்றூர்" என்பதனுனும், இவரே பொருளென இறைவரைச் சுட்டி மறைந்தமையை [5]"செய்காட்டுங் கமுகடலித் தில்லையுளார் பொருள் கேட்கக்-கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தாரைப் பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு-மெய்காட்டிப் பாலுடனே மேனியநீ ராக்கினர்" என்பதனுனும், எவரும் குதூகலித்தமையை [6]பூத நடங்க டொடங்கின போத மகிழ்ந் தனு குங்கண-நாதர் புகழ்ந்தனர் தும்புரு நாரதரங்கிசை கொண்டனர் - வேதமொடந்தர துந்துபி மீது முழங்கி யெழுந்தன -

1. சிவஞானபோதம் ஐந்தாஞ்சூத்திரம்.
2. திருவிளையாடல் வாதவூதரடிகளுக்குபதேசித்த படலம். ௧0.
3. திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்த படலம். ௬௬.
4. ஷை ௫0.
5. திருவாதவூரர் புராணம் திருவடிபெற்ற சருக்கம் - ௨௯.
6. ஷை ௩௧.

மாதவ ரிந்திரர் பைந்தரு மாமலர் சிந்தி வணங்கினர்''. என்பதனானும், திருமாலாதியர்க்கு அருளினமையை '"கயிலை சூழ்ந்த நாற்பெருங் கிரிக டம்மு - ளன்றறி தனக்குச் சீர்சா லாமர்த்த கிரியி னுச்சி-யொன்றி நற் குரவ னாகி யுண்மையை யுணர்த்துகின்றான். இன்னவா றயற்கும் புட்ப கிரியிடை யிருடி கட்கு - மன்னுவா னளவு கோள கிரியிடை வானவர்க்குந் - தன்னை நேர்கின்ற பொற்பிற் சந்தான கிரியி னண்ணி - முன்னைவான் பொருள் கண் மூன்று மொழிந்தனன் குரவனாகி''. என்பதனானும், திருநந்தித் தேவராதியர்க்கருளினமையைக் கந்தபுராண முதலியவற்றானும் அறிக. (அ)

இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி-னெடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புகின்பாற் றந்தாக்கிக்
கொண்டிலனென்
கும்பந்தா மென்று முலைக் கொம்பு.

(இ - ள்) சுடுகாட்டுள் ஆடுவான் சுட்டினெடு காட்டும் சம்பந்தா - சுடுகாட்டிலே நடிப்பவராகிய இறைவரைச் சுட்டுதலோடு காட்டிய ஞானசம்பந்தமூர்த்தியே! இடுகாட்டுள் மாதர் எலும்பில் புரள்மால்- சுடுகாட்டிலே பிருந்தையின் எலும்பிலே புரண்ட திருமால், என்பு நின்பால் தந்து- அவ்வெலும்பைத் தேவரீர் பாலீந்து, கும்பம் தாம் என்னும் முலை கொம்பு ஆக்கிக் கொண்டிலன் - அமிர்தகலசமேயென்னும் அமைதி வாய்ந்த தனங்களையுடைய பூங்கொம்புபோலும் ஒரு அரிய பெண்ணாகச் செய்துகொண்டாரில்லை! என் அங்ஙனம் செய்து கொள்ளாமைக்குக் காரணம் யாது? (எ-று.)

எவற்றையும் ஒடுக்கும் ஆற்றல் திருமாலாதியர்க்கின்மையின் அத்தொழிலைத் தாங்கொண்டு ஒடுக்கப்படுந் தானமே சுடலையென்று உபசரிக்கப்படுவதாக, அதிலே நடித்து நிற்பவரென்பார், 'சுடுகாட்டுளாடுவான்' என்றும், அக்கடவுளைச்சுட்டி அறிவிக்குந்திறமின்மையின் வேதங்களும் வெருளாநிற்க, அவ்விறைவரிலக்கணங்களைத் தெரித்துச் சுட்டிக்காட்டிய அரிய தெய்வீகமுடையரென்பார், 'சுட்டினெடுகாட்டுஞ் சம்பந்தா' என்றும், சலந்தரன் திருமாலாதியரைப் பன்முறை வென்ற செருக்காற் சிவபிரானையும் வெல்வான் திருக்கைலையினெய்தி, ஆங்குப் பெருமான் திருவடியால் நிலத்திற்கீறிய திகிரியின் படிந்தழி, அத்திருமால் அவனுடலிற், புக்கு, அவன் மனைவியாகிய விருந்தையை அனுபவித்திருக்க; அவளஃதுணர்ந்து, கற்பழிந்தமைக்குக் கவன்று, கனலின் மூழ்கலும், விரகமிக்கு அவளென்பிற் புரண்டாராகலின்,மாலெனப்பெயர் போந்ததும் இதனாற்போலுமென்பார், 'இடுகாட்டுண்மாதரெலும்பிற்புரண்மால்' என்றும், புரளக் கண்டபிரமனாதியர் அம்பிகை யளித்த வித்தை அச்சுடலையினிட்டு அமுதம் பெய்ய, அதிற்றோன்றிய துளவம் கன்னிகையாகக் காணப்பெற்றமையன்றித் தாம் காதலித்த அவளென்பு அங்ஙனம் ஆகப் பெறுமை கண்டு வைத்தும், அவர் அமிர்தின்றிச் சொல்லளவானே பெண்ணாக்க வல்ல தேவரீர்பால் அவ்வென்பைத்தந்து அழகுக்கணியாகும் பூம்பாவை போலுமோர் பெண்ணாக ஆக்கிக்கொள்ளாமை ஆராய்ச்சியின்மைபோலுமென்பார், "ஆக்கிக் கொண்டிலனென்'' என்றும் கூறினார்.

மாதர் என்பதில் அர் இழித்தற்கண் வந்தது. சுட்டு முதனிலைத் தொழிற்பெயர். சுட்டுதலாவது - தடத்தலக்கணமெனப்படும் பொது வியல்பானன்றிச் சொரூபலக்கணமெனப்படும் சிறப்பியல் பாற் குறிப்பித்தல், பவுரிக்கூத்திலே தலைமைபெற்ற கூத்தன் கரமுயர்த்தி நின்று அரங்கின்கணுள்ள குறுமன்னவர்க்கெல்லாம் முதல்வனாகிய மகாமன்னவனையே புகழ்ந்து சுட்டிநின்றாற்போல, வேதாகமங்கள் கூறிய பல சமய நெறிகளையும் அச்சமயங்கட்குரிய கடவுளரையும் கடந்து நின்று, அக்கடவுளர்க்கெல்லாம் முதல்வனாகிய சிவபெருமானையே பரம்பொருளெனப் பிறரும் துணியுமாறு "தோடுடைய செவியன் விடையேறியோர் தூ வெண்மதிசூடி, காடுடைய சுடலைப் பொடி பூசி'' எனச் சுட்டிப் புகழ்ந்தமையானும், இங்ஙனம் புகழுங்கால், அம்மெய்ப்பொருள் கிருபாநோக்கம் வைக்க, திருவுள்ளம் அதன்வழிச்சென்று, ஆருதாரங்களையுங் கடந்த நிராதாரமாகிய அருளி

1. திருக்கூவப் புராணம் சந்தானகிரிசந்தானச் சருக்கம். கசு - உஉ.

னும் மீதானமாகிய அம்மெய்ப்பொருளு ளில் "என்னுள்ளங்கவர் கள்வன்" எனச் சுட்டோடும் அதீதப்பட்டு நின்று, ஆன்ம போதத்தை மறைத்த ஆணவவிருளை நீக்கிச் சிவத்தை யறிவிக்குந் திருவருளைப் போல இறைவனைத் தாம் கண்டவாறு "'பெம்மானிவன்' எனப் பிறர்க்கறிவித்த மையானும் சுட்டிக்காட்டினமை தெளிக. இது, 'வேதாகமப்பவுரி வீசுங் [1]களாசநிலை - யாதார வெற்பிலபிடேகம்-போதத் திருளிலெழு பாநு வெனதொழிவி லின்பக் கருணைபொழி வானெடுத்த கை,' என்னும் ஒழிவிலொடுக்கக் காப்பினுரைக் கருத்தென்க. "ஊசியொடுகுயின்ற தூசு" என்புழிப் போல ஒடுகருவிப் பொருட் டென்பாருமுளர். காட்டும் காலமயக்கம். என்பென்பதில் அகரச்சுட்டெஞ்சிற்று. தாமென்பது [2]"அல்லமரிவர்தாம்" என் புழிப்போலக் கட்டுரைக்கண்வந்த அசை. கொம்பு உவமவாகுபெயர்.

மால் பந்தாமென்னும் முலைக்கொம்பு ஆக்கிக்கொண்டிலன் என்குமெனக் கண் ணழித்து, மால் பந்தை நிகர்க்குமெனப் படும் தனங்களையுடைய ஓர் பெண்ணாக ஆக்கிக் கொண்டிலனென்பன் என்னலும் ஒன்று. இது, விருந்தையாகப் பாவித்து இன்றும் துளவையணிதல்பற்றி அவள் பால், அவர்க்கு ஆர்வமிகுதியுடைமை காணப்படுதலின், சிவநேச வணிகர்போல யானும் என்பைத்தந்து ஆக்கிக்கொண்டில னென்று வருந்தாநிற்பரென அருத்தாபத் தியாற் சாதித்ததாம். பந்தாமென்புழி ஆதல் உவமை பொருள்குறித்துநின்றது; [3]"ஆள்வாரிலிமாடாவேனோ" என்றாற் போல. இப்பொருட்கண் என்குமென்பது குச்சாரியையேற்றசெய்யுமென்முற்றெனக் கொண்டு, அது பல்லோரொழிந்த படர்க்கை நான்குபாற்கும் உரித்தாகலின் ஆணொருமைப்பயனிலை ஆக்கினாரென்க.

எவற்றையுமொடுக்குமாற்றல் திருமா லாதியர்க்கின்மையை [4]"அந்த மாதியின் றாகியே யுயிரெலா மளிக்குந்-தந்தையாகிய தனக்கன்றி முழுதடுந்தகைமை - மைந்த ராகிய வமரரான் முடிவுறு மையினா - லெந்தை தன்வயிற் கொண்டன னீறுசெய் யியற்கை" என்பதனானும், ஒடுக்கப்படுந் தானமே சுடலையென்பதனை [1]"கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை - யுடலுயி ரகிலம் யாவு மொடுங்கிய விடம தன்றோ-சுடலைய தாகு மந்தச் சுடலை காணனைய சோதி-நடநவில் கின்ற வெல்லை நாடருந் தகைமைத் தஃதே. அங்கது மற்றி யெந்தை யகிலமு முடித்த ஞான்றி - னெங்கும்வெள்ளிடைய தாகி யீமமா மவ்வீ மத்து - மங்கையுந் தானுமேவும்" என்பதனானும், சுட்டிக்காட்டுதற்கருமையை [2]"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையா னென்னி னல்லா - னொப்புடை யனல்ல னொருவனல்ல னோரூர னல்லனோ ருவம னில்லி-யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணி னல்லா - லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவ னிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே' என்பதனாலும், எலும்பிற் புரண்டமையை [3]"இக்கொடு மொழிபுகன் றெரியை மூட்டியே - புக்குயிர் துறந்தனள் புலம்பி யாங்க - ளக்குறு சுடலைநீ றாடி வாடினான் - மைக்கடன் மேனியன் மாலின் மூழ்கியே", என்பதனாலும், சொல்லமிழ்தாற் பெண்ணாக்கலை [4]"மன்னு வார்சடை யாரை முன் னொருழுதுமட்டிட்ட வென்னு நற்பதி கத்தினிற் போதியோ வென்னு - மன்ன மெய்த்திருவாக்கெனு மமுதமவ் வங்கத் - துன்ன வந்துவந் துருவமாய்த் தொக்கதக் குடத்துள்" என்பதனாலும், பூம்பாவை அழகுக் கணியாதலை [5]"கற்பக மீன்ற செவ் விக் காமரு பவளச் சோதிப் - பொற்றிரள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலு - நற்பதம் பொலிவு காட்ட ஞாலமும் விசும்பு மெல்லா - மற்புத மெய்தத் தோன்றி யழகினுக் கணியாய் நின்றாள்" என்பதனாலும் அறிக. (௬)

(தொடரும்)

1. களாசம் - பிரம்பு.
2. பிரபுலிங்கலீலை-மாயைகோமாகலகதி-௨௬.
3. திருவாசகம் கோயில்மூத்ததிருப்பதிகம்-௭
4. கந்தபுராணம் ததீசிப்படலம் - ௪௦.

1. ஷையில் ததீசியுத்தரப்படலம்-௩௬௨-௩௬௬.
2. தேவாரம் பொது - ௩.
3. ஷை ததீசியுத்தரப்படலம் - ௨௧௨.
4. பெரியபுராணத்தில் சம்பந்தமூர்த்தி புராணம் - ௧௦௮௬.
5. ஷை - ௧௧௦௬

# அறநிலையச் சட்டம்

# MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM Translation Dept.

—:o:—

(ii) இன்ன நமூனப்படியும் இன்ன விதமாகவும் விண்ணப்பங்களையும் அப்பீல்களையும் அரசாங்கத்தாருக்காவது, ஆணையருக்காவது யாதொரு துணை ஆணையருக்காவது யாதொரு உதவி ஆணையருக்காவது அனுப்பவேண்டுமென்பது.

(iii) விசாரணைகள் நடத்தவும், சாட்சிகளுக்கு சம்மன் அனுப்பி அவர்களை வரவழைத்து விசாரணை செய்யவும், தஸ்தவேஜுகளை ஆஜர்ப்படுத்தும்படி நிர்ப்பந்திக்கவும் அரசாங்கத்தாருக்காவது ஆணையருக்காவது யாதொரு துணை ஆணையருக்காவது, யாதொரு உதவி ஆணையருக்காவது ஒரு பிராந்தியக் குழுவினருக்காவது உள்ள அதிகாரங்கள்;

(iv) தஸ்தவேஜுகளைப் பார்வையிடுவதும் பார்வையிடுவதற்காக - விதிக்கப்படவேண்டிய கட்டணங்களும்;

(v) ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளையும், நோட்டீசுகளையும் பிறப்பிப்பதற்காகவும், சேர்ப்பிப்பதற்காகவும் விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள்;

(vi) உறுதி மொழி செய்யப்பட்ட நகல்களைக் கொடுப்பதும், அவைகளுக்காக விதிக்கப்படவேண்டிய கட்டணங்களும்;

(vii) தர்மகர்த்தர்கள் அனுப்பவேண்டிய பட்ஜெட்டுகள், ரிப்போர்ட்டுகள் கணக்குகள் அல்லது தெரிவிக்கவேண்டிய இதர விஷயங்கள்;

(viii) தர்மகர்த்தர்களின் கூட்டங்களைக் கூட்டுவதும், அக் கூட்டங்கள் நடப்பதற்கு வேண்டிய நிர்வாக சிற்றெண்ணும் (க்வோரமும்) அக் கூட்டங்களில் வேலை நடந்தேறுவதும்;

(ix) தர்மகத்தர்களின் அபிப்பிராயங்களைக் கூட்டங்களிலன்றி மற்றப்படி இன்ன விதமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது;

(x) அற நிலையங்களின் வருமானத்தைச் சரிவர வசூலிப்பதும் அதற்குப் பிடிக்கிற செலவு செய்வதும்;

(xi) அற நிலையங்களின் பணத்தைப் பத்திரமாக வைத்திருப்பதும், அவைகளைப் பாங்குகளில் டிபாஸிட் செய்வதும், அவைகளிலிருந்து திரும்பப் பெறுவதும், அப்பணத்தை முதலீடு செய்வதும்;

(xii) அற நிலையங்களின் ஆபரணங்களையும், விலையுயர்ந்த இதரப் பொருள்களையும், தஸ்தவேஜுகளையும் பத்திரமாய் வைத்திருப்பதும் அறநிலையத்தின் ஆபரணங்கள் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவை எந்த நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு ஒரு வகை செய்யப்படவேண்டுமோ அந்த நிபந்தனைகளும் வரையறைகளும்;

(xiii) அற நிலையங்களின் சொத்துக்கள் பற்றி குத்தகைகளை இன்னவிதமாகவும் இன்ன கால அளவுக்கும் விடவேண்டுமென்பது;

(xiv) அறநிலையங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து வெளியிடப்படவேண்டிய விதமும், தணிக்கை செய்யவேண்டிய காலமும், இடமும், தணிக்கையாருடைய ரிப்போர்ட்டின் நமூனவும் அதில் அடங்கியிருக்கவேண்டிய விஷயங்களும்;

(xv) சகாயத் தொகைகளை விதிக்கும் காரியத்துக்காக யாதொரு மத ஸ்தாபனத்தின் வருமானத்தைக் கணக்கிடும் விதமும், இன்ன விதிப்படி அதை விதித்து வாங்க வேண்டுமென்பதும்;

(xvi) இச் சட்டத்தின் காரியங்களுக்காக வேலையிலமர்த்தப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும் ஜாமின் தொகை எதுவாகிலும் செலுத்த வேண்டியிருந்தால், அந்த ஜாமீன் தொகை;

(xvii) அறநிலையங்களின் சிற்பம், கல்வெட்டு, சிலாசாசனப் பொருள்கள் உள்ளிட்ட சொத்துக்களையும், கட்டிடங்களையும் பாதுகாப்பதும், பராமரிப்பதும், நிர்வகிப்பதும், அபிவிருத்தி செய்வதும்;

(xviii) அறநிலையங்களின் சொத்துக்களையும், கட்டிடங்களையும் பார்வையிடுவதும், மேற்பார்வை செய்வதும், அப்படி பார்வையிடுவதையும் மேற்பார்வையிடுவதையும் செய்கிற நபர்கள் அனுப்பவேண்டிய ரிப்போர்ட்டுகளும், அப்படிப் பார்வையிடுவதற்காகவும் மேற்பார்வை செய்வதற்காகவும், ரிப்போர்ட் பண்ணுவதற்காகவும் விதிக்கப்படத்தக்க கட்டணங்களும்;

(xix) கோயில்களிலுள்ள விக்கிரகங்களைப் பாதுகாப்பது;

(xx) பிராந்தியக் குழுக்களின் அங்கத்தினர்களுக்கு அல்லது தர்மகர்த்தர்கள் சபையின் அங்கத்தினர்களுக்கு பிரயாண வர்த்தனைகளையும் தங்குவதற்கான வர்த்தனைகளையும் கொடுப்பது;

(xxi) (a) ஆலோசனைக் குழு;

(b) 92-வது பிரிவிலுள்ள (4) உட்பிரிவின்படி அமைக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டிகள் அவற்றின் உபகமிட்டிகள்;

இவற்றின் அங்கத்தினர்களுக்கு, பிரயாண வர்த்தனையும் தங்குவதற்கான வர்த்தனையும் கொடுப்பது;

(xxii) அறநிலையங்களில் பொது மராமத்துக்கள், வினியோகங்கள் இவை சம்பந்தமாக, எஸ்டிமேட்டுகளைத் தயாரிப்பதும் அனுமதிப்பதும், டெண்டர்களை ஏற்றுக்கொள்வதும்;

(xxiii) அறநிலையங்களிலே பரம்பரையாய் ஏற்படாத உத்தியோகஸ்தர்களுக்கு நியமிக்கப்படுவதற்குரிய உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் இருக்கவேண்டிய யோக்கியதாம்சங்களும், பரம்பரையாய் ஏற்பட்ட ஊழியர்கள் ஒருவருக்குப்பின் யாதொரு உத்தியோகத்தை அடையவேண்டுமானால் அவர்களுக்கு இருக்க வேண்டிய யோக்கியதாம்சங்களும், அப்படிப்பட்ட சகல உத்தியோகஸ்தர்களினுடையவும் ஊழியக்காரர்களினுடையவுமான ஊழியத் திட்டங்களும்;

(xxiv) இச் சட்டத்தின் காரியங்களுக்கு ஒருவர் இந்து மதத்தைத் தழுவுபவர் என்னும் விஷயத்தை நிரூபிக்கும் விதம்;

(xxv) சபையைச் சேர்ந்தவர்களாய் *1951*-ம் ஆண்டு செப்டம்பர் மீ *30*-ம் தேதிக்குமுன் விலகி ஓய்வு பெற்றுக்கொண்ட உத்தியோகஸ்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் பென்ஷன்கள் அல்லது பணிக்கொடைகள் கொடுப்பது; மேலும்,

(xxvi) *1951*-ம் ஆண்டு செப்டம்பர் மீ *30*-ம் தேதிக்கு முன் விலகி ஓய்வுபெற்றுக் கொண்டவர்கள் உள்பட, போர்டைச் சேர்ந்த இறந்துபோன உத்தியோகஸ்தர்களுடையவும், ஊழியர்களுடையவுமான வாரிசுகளுக்கு நன்கொடைகள் கொடுப்பதும்.

(3) இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட சகல விதிகளும் பிறப்பிக்கப்பட்ட சகல விளம்பரங்களும், அவை செய்யப்பட்டு அல்லது பிறப்பிக்கப்பட்டான பிறகு கூடிய விரைவில், சட்டமன்றத்தின் இருசபைகளிலும் வைக்கப்பட்டு, சட்டமன்றம் இதே கூட்டத்தொடரில் அல்லது அடுத்த கூட்டத் தொடரில் திருத்தம் அல்லது ரத்து மூலமாகச் செய்யும் மாறுதல்களுக்குட்பட்டவையாகும்.

## அத்தியாயம் XII.

### இடைமாறுபாட்டுக் கால ஷரத்துக்கள்

*117.* சபையாருக்கு அல்லது தலைவருக்கு அல்லது ஆணையருக்குச் சம்பந்தப்பட்ட உதகரிப்புகளுக்கு அர்த்தம் பண்ணுவது—சென்னை மாநிலத்திலே செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்திலாவது, அப்படிப்பட்ட யாதொரு சட்டத்தின்படிச் செய்யப்

பட்டு ஷை மாநிலத்திலே செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு விளம்பரம், உத்தரவு, ஏற்பாடு, விதி, நமூனு அல்லது சமுதாயச் சட்டத்திலாவது சபைக்கேனும் அதன் தலைவருக்கேனும் அதைச் சேர்ந்த ஒரு ஆணையருக்கேனும் சம்பந்தப்பட்ட யாதொரு உதகரிப்புக்கு, 1951-ம் ஆண்டு செப்டம்பர் மீ 30-ம் தேதியிலிருந்தும் அது முதலும் இச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட, நியமிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஆணையருக்குச் சம்பந்தப்பட்ட உதகரிப் பென்று அர்த்தம் பண்ணவேண்டும்.

**118.** ரத்துக்களும், விலக்குகளும்:—(1). (இதில் பின்னுல் இப் பிரிவில் ஷை சட்டம் எனக் குறிப்பிடப்படுகிற) 1951 ம் ஆண்டு இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் (சென்னை 1951-ம் ஆண்டு 19-வது சட்டம்) இதனுல் ரத்து செய்யப்படுகிறது.

(2). (1) உட்பிரிவினுல் ஷை சட்டம் ரத்து செய்யப்பட்டபோதிலும் பாதகமில்லாமலே,

(a) ஷை சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தாரால், ஆணையரால், துணை ஆணையரால், பிராந்தியக் குழுவால் அல்லது உதவி ஆணையரால் ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்ட சகல விதிகளும், வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதாகக் கருதப்பட்ட சகல விளம்பரங்களும் அல்லது உறுதிமொழிப் பத்திரங்களும், பிறப்பிக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட சகல உத்தரவுகளும், செய்யப்பட்ட சகல தீர்மானங்களும், எடுத்துக்கொள்ளப்பட்ட அல்லது எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்ட சகல நடவடிக்கைகளும் அல்லது காரியமும், நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட சகல ஏற்பாடுகளும், செய்யப்பட்ட சகல விஷயங்களும், அவை இச் சட்டத்துக்குப் பொருத்தமற்றவையா யிராத வரையில், இச் சட்டத்தில் கண்ட பொருத்தமான ஷரத்துக்களின்படி தகுந்த அதிகாரியால் ஏற்படுத்தப்பட்டிருப்பவையாகவோ, வெளியிடப்பட்டிருப்பவையாகவோ, பிறப்பிக்கப்பட்டிருப்பவையாகவோ, எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பவையாகவோ, நிச்சயிக்கப்பட்டிருப்பவையாகவோ, செய்யப்பட்டிருப்பவையாகவோ கருதப்பட்டு, (b) பகுதியின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு அப்பிரகாரமே செலாவணியாகும்;

(b). (i). 1908-ஆம் ஆண்டு சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் (1908-ம் ஆண்டு 5-வது மத்தியச் சட்டம்) 92-வது பிரிவில் நிச்சயிக்கப்பட்ட ஒரு திட்டம் உட்பட 1926-ம் ஆண்டு சென்னை இந்து மதக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் (சென்னை 1927-ம் ஆண்டு 2-வது சட்டம்) நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறதும் 1951-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்கு அடுத்து முன்பு அமுலில் இருப்பதுமான யாதொரு திட்டத்தில் கண்டுள்ள ஷரத்து எதுவும் இச் சட்டத்தில் கண்டுள்ள யாதொரு ஷரத்துக்கு அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்கு விரோதமாக இருந்தால் பிந்திய ஷரத்து மேலோங்கி நிற்கும்; முந்திய ஷரத்து அதற்கு விரோதமாக இருக்கும் அளவுக்கு செல்திறனற்றதாகும்.

(ii) ஷை ஏற்பாட்டினுல் ஒரு நீதிமன்றத்துக்காவது, நீதிபதிக்காவது ஒரு தர்மகர்த்தா அல்லது தர்மகர்த்தர்களாயிராத வேறு யாதொரு நபருக்காவது அந்த அறநிலையத்தைச் சேர்ந்த அல்லது நீதி மன்றத்தை சேர்ந்த சம்பளம் பெறும் அல்லது கௌரவ உத்தியோகஸ்தருக்காவது, ஊழியக்காரருக்காவது கொடுக்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களும் விதிக்கப்பட்டுள்ள சகல கடமைகளும் சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையர் பிராந்தியக் குழு, உதவி ஆணையர் இவர்களால் இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்துச் செலுத்தப்படவும் செய்யப்படவும் வேண்டும்.

(c) 1926-ம் ஆண்டு சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் (சென்னை 1927-ம் ஆண்டு 2-வது சட்டம்) 67-வது பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட சகல உத்தரவுகளும் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளுக்கு முரண்பட்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே தொடர்ந்து அமுலிலிருந்துவரும்; ஆனுல் அப்படிப்பட்ட உத்தரவு எதுவும் அது ஷை பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின்படியாவது (3) உட்பிரிவின்படியாவது பிறப்பிக்கப்பட்டிருந்தால் துணை ஆணையராலும், ஷை பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படியாவது

(5) உட்பிரிவின்படியாவது பிறப்பிக்கப்பட்டிருந்தால் ஆணையராலும் எப்போதேனும் மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்; மேலும் துணை ஆணையர் செய்த யாதொரு மாற்றத்தால் அல்லது ரத்தால் துன்பமடைந்தவரெவரும் நிர்ணயிக்கப்படக் கூடிய காலத்துக்குள் ஆணையருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

(3) இந்தப் பிரிவில் குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றிச் சொல்லுவதானது ரத்துக்களின் விளைவுகளைப்பற்றி 1891-ஆம் ஆண்டு சென்னை பொதுப்பகுதிகள் சட்டத்தின் (சென்னை 1891-ம் ஆண்டு 1-வது சட்டம்) 8-வது, 18-வது பிரிவுகளின் பொது பிரயோகத்திற்கு விரோதமாக இருப்பதாகவோ அல்லது அதைப் பாதிப்பதாகவோ கருதப்படக் கூடாது.

*119.* சில நபர்களின் ஊழிய நிலைமைகள்.-(1) 1951-ம் ஆண்டு இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் (சென்னை 1951-ம் ஆண்டு 19-வது சட்டம்) 104-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட நபர்களின் ஊழிய நிலைமைகள், அவ்வாறு நியமிக்கப்படுகிற நபர்கள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சபை அங்கத்தினராகவோ, அதன் கீழ் உத்தியோகஸ்தராகவோ முதலில் அமர்த்திக் கொள்ளப்பட்ட தேதியன்று அரசாங்க ஊழியத்தில், சேர்ந்திருந்தால் எப்படியோ அப்படியே அவர்களுடைய ஊழியத் திட்டங்கள் அப்போதைக்கப்போது அரசாங்கத்தாரால் செய்யப்படுகிற விதிகளினுல் ஒழுங்குபடுத்தப்படும்.

(2) மேற்சொன்னபடி நியமிக்கப்படாதவர்களுக்கு பென்ஷன் க்ராட்யுடி என்னும் பணிக்கொடை, பிராவிடென்ட் பண்டு அல்லது வர்த்தனையுடன் ரஜா கொடுப்பது மூலமாக அரசாங்கத்தார் தங்களுடைய யுக்தானுசாரப்படி தகுதியென்று கருதக்கூடிய பரிகாரத்தை அளிக்கலாம்.

(3) 1951-ம் ஆண்டு இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் (சென்னை 1951-ம் ஆண்டு 19-வது சட்டம்) 104-வது பிரிவின் (1) உட்பிரிவினுல் பாதிக்கப்பட்ட சபை அங்கத்தினர்களில் அல்லது அதன் கீழ் உத்தியோகஸ்தர்களில் ஒருவர் சேதம் அல்லது நஷ்ட ஈட்டுக்காகச் செய்துகொள்ளும் அல்லது இப்பிரிவின் (2) உட்பிரிவின்படிக் கொடுக்கப்பட்ட ஏதாகிலும் பரிகாரத்தை மாற்றும்படி செய்துகொள்ளப்படும் யாதொரு வழக்கையாகிலும் விண்ணப்பத்தையாகிலும் எந்த நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

*120.* ஆணையர் சில தொகைகளை அரசாங்கத்தாருக்குத் திரும்பிச் செலுத்த வேண்டுமென்பது:—ஆலோசனைக் குழுக்கள் அல்லது அவைகளின் துணைக் கமிட்டிகள் இவைகளால் நேரிட்ட செலவுகளுக்காக இந்தச் சட்டம் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜெட்டில் பிரசுரிக்கப்பட்டதற்கு முன்பாக அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட யாதொரு தொகையை, இந்தச் சட்டத்தின் 92-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவானது சம்பந்தப்பட்ட சகல காலங்களிலும் அமுலிலிருந்தாற்போலவே, ஆணையரானவர் இந்தச் சட்டத்தின் 96-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ் இந்து அறநிலையப் பாதுகாப்பு நிர்வாக நிதியிலிருந்து அரசாங்கத்தாருக்குத் திருப்பிச் செலுத்திவிடவேண்டும்.

*121.* திருவாங்கூர், கொச்சி 1950-ம் ஆண்டு 15-வது சட்டம் சில நிலையங்களின் விஷயமாகப் பயன்படுவது அற்றுப்போகும் என்பது:—(1) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு மாற்றியமைக்கப்பட்ட பிரதேசத்தில் அமுலில் உள்ளபடியுள்ள 1950-ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி இந்து அறநிலையங்களைக் குறித்த சட்டம் (திருவாங்கூர்-கொச்சி 1950-ம் ஆண்டு 15-வது சட்டம்) இச் சட்டத்தின் தொடக்கத்தின்பேரில் சட்டப்படி சேர்ந்த தேவஸ்வாம்களும் சட்டப்படி சேராத தேவஸ்வாம்களும் நீங்கலாக, இந்து அறநிலையங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்படுவது அற்றுப்போய்விடும்.

(2) அப்படி அற்றுப்போவதானது—

(a) ஷெ சட்டம் முன்பு அமுலில் இருந்ததையோ, அல்லது

(b) அத்தகைய சட்டத்திற்கு விரோதமாகச் செய்யப்பட்ட யாதொரு குற்றம் சம்பந்தமாக விதிக்கப்பட்ட, யாதொரு அபராதம், பறிமுதல் அல்லது தண்டனையையோ அல்லது,

(c) அத்தகைய அபராதம், பறிமுதல் அல்லது தண்டனை சம்பந்தமாக யாதொரு குற்ற விசாரணை, சட்ட நடவடிக்கை அல்லது பரிகாரத்தையோ,

பாதிக்காது. அத்தகைய யாதொரு குற்ற விசாரணை, சட்ட நடவடிக்கை அல்லது பரிகாரம் தொடர்ந்து நடத்தப்படலாம், அல்லது அமுலுக்குக் கொண்டுவரப்படலாம்; மேலும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாமலிருந்தாற்போலவே அத்தகைய யாதொரு அபராதம், பறிமுதல் அல்லது தண்டனை விதிக்கப்படலாம்.

(3) (2) உட்பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, இச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன் அத்தகைய சட்டத்தின் யாதொரு ஷரத்தின் கீழ்ச் செய்யப்பட்ட யாதொரு காரியம் அல்லது எடுத்துக்கொள்ளப்பட்ட யாதொரு நடவடிக்கை அதற்கு நிகராக இந்தச் சட்டத்திலுள்ள ஷரத்தின் கீழ்ச் செய்யப்பட்டதாக அல்லது எடுத்து கொள்ளப்பட்டதாகக் கருதப்படவேண்டும்; மேலும் அது, இச்சட்டத்தில் அதற்கு நிகரான ஷரத்தின் கீழ் செய்யப்பட்ட யாதொரு காரியத்தினால் அல்லது எடுத்துக்கொள்ளப்பட்ட யாதொரு நடவடிக்கையினால் ரத்து செய்யப்பட்டாலன்றியும், ரத்து செய்யப்படும் வரையிலும் தொடர்ந்து அமுலிலிருந்து வரும்.

(4) சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, மற்றபடி இந்தச் சட்டம் மாற்றப்பட்ட பிரதேசங்களுக்குப் பிரயோகப்படுகையில் 1891-ம் ஆண்டு சென்னைப் பொது பகுதிகள் சட்டம் (சென்னை 1891-ம் ஆண்டு 1-வது சட்டம்) இச் சட்டத்தை அர்த்தம் சொல்வதற்குப் பயன்படும்.

(5) மாற்றப்பட்ட பிரதேசத்தில் இச் சட்டத்தைப் பயன்படுத்துவதைச் சுலபமாக்கும் காரியத்துக்காக யாதொரு கோர்ட்டார் அல்லது இதர அதிகாரி ஷெ சட்டத்தை அதன் பொருளைப் பாதிக்காத வரையில் அவசியமான அல்லது பொருத்தமான மாறுதல்களுடன் அல்லது ஷெ கோர்ட்டார் அல்லது இதர அதிகாரிகள் முன்புள்ள விஷயத்திற்குத் தக்கவாறு மாற்றியமைத்து அர்த்தம் கொள்ளலாம்.

(6) இச் சட்டத்தின் தொடக்கத்தேதிக்குப் பிறகு மாற்றப்பட்ட பிரதேசத்தில் தொடர்ந்து அமுலில் இருக்கின்ற யாதொரு சட்டத்தில் (1) உட்பரிவின் கீழ்ப் பயன்படுவது அற்றுப் போகிற யாதொரு ஷரத்து, பற்றி யாதொரு குறிப்பீடு இருந்தால் அது மாற்றப்பட்ட பிரதேசம் சம்பந்தமாக இச்சட்டத்தில் அதற்கு நிகரானஷரத்து பற்றிய குறிப்பீடாக அர்த்தம் கொள்ளப்பட வேண்டும்.

(7) மாற்றப்பட்ட பிரதேசத்தில் அமுலில் இல்லாத யாதொரு சட்டத்தைப்பற்றி இந்தச் சட்டத்திலுள்ள யாதொரு குறிப்பீடு, அந்தப் பிரதேசம் சம்பந்தமாய் அந்தப் பிரதேசத்தில் அமுலில் உள்ள யாதொரு நிகரான சட்டத்தைப்பற்றிய குறிப்பீடாக அர்த்தம் கொள்ளப்படவேண்டும்.

122. **கஷ்டங்களை நிவர்த்தி செய்ய அதிகாரம்:**—(1) இச் சட்டத்தின் ஷரத்துக்களை அமுலுக்குக் கொண்டு வருவதில் யாதொரு கஷ்டம் ஏற்பட்டால், அரசாங்கத்தார் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அக் கஷ்டத்தை நீக்கும் காரியத்துக்காகத் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற எதையாகிலும் உத்தரவு மூலமாகச் செய்யலாம்.

(2) (i) உட்பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட எல்லா உத்தரவுகளும் அவை பிறப்பிக்கப்பட்டான பிறகு கூடிய விரைவில் சட்ட மன்றத்தின் ஒவ்வொரு சபையிலும் வைக்கப்பட்டு சட்ட மன்றம் அதே கூட்டத் தொடரிலாவது அடுத்த கூட்டத் தொடரிலாவது திருத்தம் அல்லது ரத்து மூலமாகச் செய்யும் மாறுதலுக்குட் பட்டவையாகும்.

## ஷெட்யூல்

இச் சட்டத்தின்படிச் செலுத்தப்படத்தக்க நீதிமன்றக் கட்டணங்கள்

(101-வது பிரிவைப் பார்க்கவும்)

| பிரிவு | தஸ்தவேஜின் விவரம். | சரியான கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |

I. வழக்குகள்

ரூ.

41. (2) (d) (ii) இனமில் மேல் வாரம், குடிவாரம் ஆகியவை இரண்டும் விலக்கு நிபந்தனை அடங்கியுள்ளதா அல்லது மேல் வாரம் மாத்திரமா என நிச்சயிக்க வழக்கு. 50

53. (6) 53 (5) பிரிவின்படிக்கான உத்தரவுக்கெதிராக வழக்கு. 50

59. மடத்தின் தர்மகர்த்தரையாவது மடத்தைச் சேர்ந்த குறித்த கட்டளையின் தர்மகர்த்தரையாவது நீக்குவதற்கான வழக்கு. 50

70. கமிஷனர் பிறப்பித்த உத்தரவின் பேரில் வழக்கு. 50

72. (4) விளம்பரத்தை ரத்து செய்வதற்கான வழக்கு. 50

84 தீர்ப்புக்கு எதிராக வழக்கு. 50

II. நீதிமன்றத்தாருக்கு அல்லது நியாய சபைக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள்

47. (4) ஆணையரின் உத்திரவுக்கெதிராக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம். 5

82. (1) நியாய சபைக்கு விண்ணம். 5

90. (4) (a) அதிகப்படியான கட்டணம் செலுத்த வேண்டுமென்ற உத்தரவின் பேரில் நீதிமன்றத்தாருக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

101. சுவாதீனப்படுத்த வேண்டுமென்று செய்து கொள்ளப்படும் விண்ணப்பம். 2

III. நீதிமன்றத்தாருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல்கள்

70. (2) உயர்நீதி மன்றத்தாருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 50

72. (5) ஷெ 50

| பிரிவு. | தஸ்தவேஜின் விவரம். | சரியான கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |

ரூ

IV. அரசாங்கத்தாருக்காவது, ஆணையருக்காவது செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்கள்.

3 (4) சட்டத்தின் ஷரத்துக்களை விரிவாக்கும் பொருட்டு அரசாங்கத்தாருக்கு விண்ணப்பம். 25

21 புனராலோசனைக்காக ஆணையருக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

38 (1) குறித்த கட்டளையில் சொத்தைச் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டுள்ள நபரிடமிருந்து வசூலிப்பதற்காக தர்மகர்த்தர் செய்துகொள்ளும் விண்ணப்பம். 2

38 (2) கைங்கரியம் அல்லது தருமம் நடத்துவதற்காகச் சட்டப்படி பொறுப்பாளியாயுள்ள நபரிடமிருந்து வசூலிப்பதற்காக அப்படிச் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டுள்ள நபரால் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 2

59 (1) மடத்தின் தர்மகர்த்தரையாவது மடத்தைச் சேர்ந்த குறித்த கட்டளையின் தர்மகர்த்தரையாவது நீக்குவதற்கான வழக்கிற்குச் சம்மதம் பெறுவதற்காக ஆணையருக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

63 இப் பிரிவின்படிக்கான தகராரையாவது விஷயத்தையாவது தீர்த்துக் கொடுக்கும்படிச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

64 (1) ஏற்பாட்டை நிச்சயிக்கும்படி செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 50

64 (5) (a). 64 (1) பிரிவின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது அப்படி நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏற்பாட்டை மாற்றியமைக்கும்படியாவது ரத்து செய்யும்படியாவது செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 25

(1) (2) (3)

65 (1) ஆணையரால் திட்டம் நிச்சயிக்கப்படுவதற்காகச் செய்யப்படும் விண்ணப்பம். 50

65 (4) (a) 65 (1) பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட அல்லது அப்படிப் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட உத்தரவை மாற்றியமைக்கும்படியாவது ரத்து செய்யும்படியாவது செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 25

66 (1) இப் பிரிவின்படி உத்தரவைப் பிறப்பிக்கச் செய்யும் விண்ணப்பம். 5

66 (2) 66 (1) பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட அல்லது அப்படிப் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட உத்தரவை மாற்றியமைக்கும்படியாவது ரத்துசெய்யும்படியாவது செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

69 (3) 69 (1) பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட அல்லது அப்படிப் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட உத்தரவை மாற்றியமைக்கும்படியாவது ரத்துசெய்யும்படியாவது செய்துகொள்ளும் விண்ணப்பம். 5

72 (6) VI-ம் அத்தியாயத்தின்படிக்கான அறநிலையம் சம்பந்தமான விளம்பரத்தை மாற்றியமைக்கும்படியாவது ரத்துசெய்யும்படியாவது அரசாங்கத்தாருக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

114 புனராலோசனைக்காக அரசாங்கத்தாருக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

118 (2) (c) இந்துமத சம்பந்தமான நிதி ஏற்பாடுகளைக் குறித்த 1926-ம் ஆண்டு சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் 67-வது பிரிவின்படியுள்ள உத்தரவை மாற்றியமைக்கும்படியாவது ரத்துசெய்யும்படியாவது செய்துகொள்ளப்படும் விண்ணப்பம். 5

V. அரசாங்கத்தாருக்காவது, ஆணையருக்காவது துணை-ஆணையருக்காவது தர்மகர்த்தருக்காவது செய்துகொள்ளப்படும் அப்பீல்கள்.

(1) (2) (3)

22 (5) ஆணையருடைய உத்தரவுக்கு எதிராக அரசாங்கத்தாருக்குச் செய்துகொள்ளப்படும் அப்பீல். 5

26 (5) ஆணையரின் உத்தரவுக்கெதிராக ஆணையருக்குச் செய்துகொள்ளப்படும் அப்பீல். 5

34 (4) சொத்தைப் பாராதீனப்படுத்துவதுபற்றி ஆணையர் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக அரசாங்கத்தாருக்குச் செய்துகொள்ளப்படும் அப்பீல். 5

37 36-வது பிரிவின்படி ஆணையர் பிறப்பித்த உத்தரவுக்கெதிராக அரசாங்கத்தாருக்கு செய்துகொள்ளப்படும் அப்பீல். 5

8 (3) 38 (1) அல்லது (2) பிரிவின்படி ஆணையர் பிறப்பித்த உத்தரவுக்கெதிராக அரசாங்கத்தாருக்குச் செய்துகொள்ளப்படும் அப்பீல். 5

38 (3) 38 (1) அல்லது (2) பிரிவின் பிரகாரம் துணை ஆணையர் பிறப்பித்த உத்திரவுக்கு எதிராக ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

53 (5) தண்டனை விதித்துப் பிறப்பித்த உத்திரவின் பேரில் தர்மகர்த்தர் செய்துகொள்ளும் அப்பீல். 5

54 (4) பரம்பரையாய் ஏற்பட்ட தர்மகர்த்தருக்குப் பின் தற்காலிகமாய் ஒருவரை நியமித்து துணை ஆணையர் பிறப்பித்த உத்தரவின் பேரில் ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

55 (4) 55 (3) பிரிவின்படி தர்மகர்த்தர் பிறப்பித்த உத்திரவின் பேரில் துணை ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல், 5

56 (2) யாதொரு தர்மகர்த்தர் தண்டனை விதித்துப் பிறப்பித்த உத்தரவின்பேரில் உத்தியோகம் வகிப்பவராவது ஊழியராவது துணை ஆணையருக்குச் செய்துகொள்ளும் அப்பீல். 5

56 (3) துணை ஆணையர் பிறப்பித்த அப்பீல் உத்திரவின்பேரில் பரம்பரையாய் உத்தியோகம் வகிப்பவராவது ஊழியராவது ஆணையருக்குச் செய்துகொள்ளும் அப்பீல். 5

58 (4) திட்டம்பற்றி பிரதேசக் கமிட்டி பிறப்பித்த உத்தரவின்பேரில் துணை ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

58 (4) துணை ஆணையரின் அப்பீல் உத்தரவுக்கெதிராக ஆணையருக்குச் செய்துக்கொள்ளப்படும் அப்பீல். 5

59 (2) சம்மதம் அளிக்க ஆணையர் மறுத்ததன் பேரில் அரசாங்கத்தாருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

69 (1) V-ம் அத்தியாயத்தின்கீழ் துணை ஆணையர் பிறப்பித்த உத்தரவுக் கெதிராக ஆணையருக்குச் செய்துகொள்ளப்படும் அப்பீல். 5

79 (1) ஆணையரின் உத்திரவுக்கு எதிராக ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

81 (1) துணை ஆணையரின் உத்தரவுக்கு எதிராக ஆணையருக்குசெய்து கொள்ளப்படும் அப்பீல். 5

86 (4) பட்ஜெட் சம்பந்தமான உத்திரவின் பேரில்—துணை ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

(ii) ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல்.

(iii) அரசாங்கத்தாருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

90 (4) (b) ஸர்சார்ஜ் உத்தரவுக்கு எதிராக அரசாங்கத்தாருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

118 (2) (c) துணை ஆணையர் செய்த யாதொரு மாற்றம் அல்லது ரத்திற்கு எதிராக ஆணையருக்குச் செய்து கொள்ளப்படும் அப்பீல். 5

(கவர்னர் அவர்களின் ஆணைப்படி)

K. S. பழனிசாமி,
அரசாங்கச் செயலாளர், சட்டத்துறை
(தமிழாக்கம்)

அ. ச. ஞானசம்பந்தன்,
உதவி நெறியாளர், மொழிபெயர்ப்புத்துறை.

1959-ஆம் ஆண்டு 22-ஆவது சென்னை அறிநிலையச் சட்டம் முற்றிற்று.

# தாயுமானவர் பாடல்

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட்ட தற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கியிடர் தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதுயில் கொண்மினென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

[கருமைவாய்ந்த ஆணவாதிமலங்களால் ஏற்பட்ட கருவறைபோன்ற இடத்தில், அறிவும் கண்களும் இல்லாத ஒரு சிறு குழந்தைபோல் கட்டுப்பட்டிருந்த என்னை அக்கட்டவிழ்த்து வெளியில் விட்டு, துன்பத்துக்கேதுவான காத்தல் செய்து, பாழான பொய்யுடலை மெய்யென்று பேர் கொடுத்து, இனிய உணவுகளை யூட்டி இந்த பரந்த பூமியின்கண் பிறத்தல் இறத்தலான பெரிய விளையாடல்கள் செய்வித்து, வேதசாத்திர முறை தப்பினல் எமனைக்கொண்டு துன்புறச் செய்வித்து, பின்னர் இத்துயரமும் ஒழித்து இராப்பகல் இல்லாத இடத்தில் ஆனந்த நித்திரை செய்யுங்களென்று சிறப்புறச் செய்த சகல லோக மாதாவாகிய அருளன்னை சொரூபமான பரம பிதாவே! சித்தாந்த முத்திக்கு முதற்பொருளே! திரிசிரகிரியில் மேவிய தென்முகக் கடவுளே! ஞானமயமான ஆனந்த குருவே!]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—ஆனி

சைவம்

5உ—மாணிக்கவாசக சுவாமிகள்
6உ—அமர்நீதி நாயனர்
21உ—ஏயர்கோன் கலிக்காம நாயனர்

வைணவம்

16உ—பெரியாழ்வார்

Vol 3. No. 9. THIRUKOIL Regd. No. M. 7039.



விராலிமலை முருகன் கோயில்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6,
Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.